கவிஞர் அக்கரைச் சக்தி அவர்கள்

SAMATHANAM "MARUTHOOR VANAR"

# சமாதானம்

- மருதூர் வாணன் -


9



கலாபூசணம் கரீம்



ஈழபாரதி வாணர் ஒலுவில் அமுதன்



கவிஞர் அக்கரைச் சக்தி



பேருவலை பாத்திமா



கவிஞர் மூதூர் முகைதீன்



கவிஞர் பாண்டியூரன்



பெற்றோணிலா

24-08-2001

விலை 50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம் பெயர் வைப்புக்காக ஆசிரியர் மருதூர் வாணருக்குப் பாராட்டு

(16.01.2001ல், நவமணி செய்தியாளர் மருதமுனை)



காலத்தின் தேவையை உணர்த்தும் வகையில் இச்சஞ்சிகைக்கு "சமாதானம்" என்ற பெயரை வைத்திருப்பது பொருத்தமானதாக அமைந்துள்ளது. இதுவரை நாடெல்லாம் சமாதானம் வராவிட்டாலும் விரைவில் சமாதானம் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. இச்சஞ்சிகையின் ஆசிரியர் மருதூர்வாணர் மிகப் பொருத்தமாகவே இப் பெயரை வைத்திருக்கிறார். இவ்வாறு கடந்த 2001.01.08ம் திகதி மருதமுனை அல்மனார் தேசிய பாடசாலை அஷ்ரப் மண்டபத்தில் நடைபெற்ற சமாதானம் சஞ்சிகையின் 8வது வெளியீட்டுவிழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிய சட்டத்தரணி அல்ஹாஜ் ஏ. எம். பதுறுத்தின் பி. ஏ கூறினார்கள்.

எழுத்தாளர்கள் எல்லோரும் வறியவர்களாகவே இருப்பார்கள் எப்பொழுதும் புலமையும் செல்வமும் ஒன்றாகவே இருப்பதில்லை. இரண்டும் வெவ்வேறாகத்தான் காணப்படும். இலக்கியத்தை விமர்சனம் செய்யும்போது மிகவும் கவனமாகச செய்யவேண்டும் ஏனென்றால் இந்த இலக்கியமும் விமர்சனமும் ஒட்டிப்பிறந்த குழந்தைகளாகும். இலக்கியத்தை விமர்சனம் செய்யும்போது விமர்சகர்களுக்கு படைப்பாளியின் உள்ளம் அமைந்திருக்கவேண்டும். இலக்கியத்தை ஒரு மலரைப்போல கையாளவேண்டும். விமர்சனம் செய்யும் போது அம்மலர் அழிந்த விடக்கூடாது.

ஒரு மலரை இதழ் இதழாகப் பிரித்து ஒரு ஆய்வு கூடத்திலே கோண்டு சென்று விமர்சனம் செய்யும்போது அந்த மலர் அழிந்துவிடும். இந்த மலரின் நிறத்தையும் நறுமணத்தையும் மிகக் கவனமாக ஆராய வேண்டும். அப்போதுதான் படைப்பாளியின் மனம் திருப்தியும் சந்தோசமும் அடையும். என்றார் சட்டத்தரணி பதுறுத்தின் அவர்கள். பன்னூலாசிரியர் எஸ். எம். மூஸா தலைமையில் நடைபெற்ற விழாவில் சபாநாயக அதிதியாக கலாபூசணம், இலக்கிய வேந்தர், மணிப்புலவர் மருதூர் ஏ மஜீத் (கல்முனை வட்டார வலயக் கல்விப் பணிப்பாளர்) கௌரவ அதிதியாகஎஸ். கே. வீரபாகு (கலமுனை இலங்கை வங்கி முகாமையாளர்) ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ. எச். எம் மஜீத், அல்மானார் தேசிய பாடசாலை அதிபர் ஏ. எல். மீராமுகைதீன் விசேட அதிதியாகக் கலந்த சிறப்புரையாற்றினார்கள்.

வெளியீட்டுரையை சமாதானம் ஆசிரியர் ஈழபாரதி மருதூர் வாணர் நிகழ்த்தினார் விழாவின் இறுதியில் "புலவர்மணி எங்கள் ஆ.மு. சரிபுத்தீன்" என்ற தலைப்பினில் சட்டத்தரணி கலாபூசணம், இலக்கிய வேந்தர், முத்துமீரான் அவர்கள் தலைமையில் கவியரங்கில் ஒலிவில் அமுதன், வர்ணகுலசிங்கம், கௌரிதாசன், புன்னகைவேந்தன், எம். எச். ஏ கரீம், கலிலுர் ரஹ்மான் ஆகியோர் கவிதை முழங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டு மடல்களிலிருந்து

மூத்த எழுத்தாளர்களில் ஒருவர் ஈழபாரதி மருதூர் வாணர் நம்மால் செய்யமுயாத காரியத்தை துணிந்து "சமாதானம்" சஞ்சிகை மூலம் தொடர்ந்து செய்து வெளியிட்டு வருகிறார். நாமெல்லொரும் வாங்கி ஆதரித்து ஊக்கப்படத்தவேண்டும்.

அன்பு மணி
இரா-நாகலிங்கம்
மட்டக்களப்பு.

---

பணக்கார வர்க்கம் பயப்படுகின்ற இக்காலங்களில் பயமற்ற பாட்டாளி சமாதானம் படைத்து வருகிறார். குணக்கார குன்றிவர் கவிதையிலும் குரிசிலாம் குவலயம் புகழ்மிக்க மருதூர்வாணர்.

ஜின்னாவே ஆப்பிழத்தீ...எனும் கவிதைமூலம் நவமணி 8.5.2001ல் கவிதையுலகை நயந்தர விழிப்புறச் செய்த சமாதானச் செம்மலரே நீடுழி வாழ்க!

கவிஞர் மூதூர் முகைதீன்
நொக்ஸ் வீதி, மூதூர்.

---

எங்களுக்கும் வழிகாட்டி எதிலும் தான் முற்போக்கு பங்கமுறும் நாடெல்லாம் பகர்கின்றார் சமாதானமே! இசைவாணர், மருதூர்வாணர், ஈழபாரதி இன்னும் பல பட்டப் பெயர்க்ளிலும் படைக்கிறார் இலக்கியங்களை!

பாவலர் பஸில் காரியப்பர்
கல்முனைக்குடி.

---

கவிதையிலும் வல்லோன்
கதையிலும் மன்னவனே
நாவலில், கட்டுரைகளில்
நால்வகை வரலாறுகளிலும்.
சமாதானம் வளர்ந்து வர
சலிக்காமல் தொடர்பவனே!
துணிவுமிக்க கொள்கையிலும்
துளிகூடப்பயமற்றவனே!
இசைவாணன்அறுபதாமாண்டிலிருந்து
இற்றைவரை என்னுயிர்தோழனாமே!

மணிக்கவிராயர்
நோ. மாணிக்கவாசகம் ஜே.பி
சக்தி நிறுவனத்தலைவர்
ஆலடி வேம்பு,
அக்கரைப்பற்று.

---

**வெண்புறாவே வாழ்க.**

**"நமுனை எம். கிஷோர்"**
**நற்பிட்டிமுனை**

மருதமுனை மண்ணகத்தில்
முத்தாகப் பிறந்திட்ட
மூத்த கவியே நீ. வாழ்க!

இயல், இசை நாடகந் தந்த
இசைவாணர் முத் தமிழின்
மருதூர் வாணரே நிவாழ்க!

பட்டங்கள் பல பெற்றும்
பக்குவமாய் பரிணமித்திருக்கும்
ஈழபாரதியே நீ வாழ்க!

பேச்சுக்களில் சமாதானம்
பேசிமுடிக்கும் சனங்களுள்
மூச்சில் கொண்டவனே நீ வாழ்க!

சமாதான உலகில் சரிநிகராய்
சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கும்
சாத்வீகப் புறாவே நீடுளிவாழ்க

ஒன்பதாம் சமாதானம் மேலும்
ஓராயிரம் சஞ்சிகை மலர்ந்தே
உலகெலாம் சமாதானம் பெற்று நீ வாழ்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் நாட்குறிப்பிலிருந்து....!

''ஜுலை'' கள்தான்
கனத்த பக்கங்களில்
கருகிப்போய்..?

மடிப்பு ஓரங்களில்
இரத்தம் தோய்ந்து வாடையும்
வெறுமையுமாய்..

அநீதமாய் புதையுண்ட
ஜீவன்களுக்கும்
நெருப்புத் தின்ட
வெற் றுடம்புகளுக்கும்
புரட்டப்படுகின்றன
கண்ணீரால் எழுதியபடி!!

ஆயுத தேசம்
காவு கொண்ட
மனிதங் களுக்காய்
அஞ்சலிகள்தான்
இன்னும் நீளமாய்
விரிந்து கொண்டு...

வக்கிர வுணர்வுகளால்
சிதைக்கப்படும்
பெண்மையின் சுமைகளுக்காய்
நடுவுற்ற பக்கங்களும்..

சே....
கடைசி பக்கத்தில்
அன்னிய தேசமொன்றிலே
நானும் தனித்துப்போய்..?

"விஜிலி"

## கிழக்கின் இதயம் தேசத்தின் உதயம்

அமைச்சர், சட்டத்தரணி, கவிஞர், அல்-ஹாஜ் M.H.M. அஷ்ரப் அவர்களின் வாழ்க்கை வரலாதற்றுக் கண்ணோட்டம்.

அஷ்ரபே குரல் கொடுத்தும் எழுது விக்கப்பட்ட, கிடைந்தெடுத்த நூல்

முகப்பு நான்கு தோற்றங்களில் அஷ்ரப்பின் முக வடுக்கள்...

அனிஸ்டஸ் ஜெயராஜா, எம். ஐ. தௌபீக் தொகுத்த 230 பக்க நூல். அணிந்துரை "மருதூர்கனி", முன்னுரை ஆ. சி. வ. நேசச் செல்வன்.

வாசித்துக் கொண்டிருக்கும் போதெல்லாம் உள்ளம் குமுறிக்கொண்டிருந்தன. அஷ்ரப்பின் வாழ்க்கையில் நண்பர்களில் பெரும்பாலும் எனது தூண்டுவிப்பினிலே அரசியலில் எம். பி, அமைச்சராக வருவதற்கும் பலதியாகங்களைச் செய்து 60லிருந்து 86வரை

அஷ்ரப்பின் உயிர்காத்த தோழன் இசைவாணர்,

என்றும், கட்டுரை சமாதானம் 7ம் இதழில் எழுதியுள்ளேன். கலாபூசணம் முத்துமீரான், டாக்டர் உதுமாலெப்பை, மசூர் மௌலானா, மருதூர்க்கனி, கவிச்சுடர் அன்பு முகைதீன் ஏன் கல்முனை பிரதேச புத்திஜீவிகளுக் கெல்லாம் தெரியும் "அஷ்ரப்பின் செந்திறக் கார் என்றால் வாணரும் கூடக்கிடப்பான் என்று கட்டைபோட்டு காலுடைத்த யானைக் கூட்டத்தினர் தலைவர்களுக்கும் தெரியும் எனது உறவுதயவுகளில் குழந்தைப்பருவக்காலம் வளர்ந்த மருதூர்க்கனி அவர்களோ அணிந்தரை எழுதும் போதே வாசித்தவர், அவரே இந்நூலைப், பெரும்பாலும் திருத்தியவர் எனது பங்களிப்புக்களை மறந்தேவிட்டாரா? நன்றியில்லாத நயவஞ்சகத்தனமா??

அஷ்ரப் எங்கே?
வாணர் எங்கே?
நீங்களெல்லாம் தலைவர்களா?

சமாதானம் 9ன் முகப்படங்களில்,
21.01.2001 புதன் காலை அக்கரைப்பற்று பிரதேசசபை கலாச்சார மண்டபத்துள் ஒலுவில் அமுதன் அவர்களின ஐந்தாவது நூலான மனங்களிலே நிறங்கள்..... சிறுகதைத்தொகுதி வெளியீட்டுவிழா வரவேற்புக் கவிதை முழங்கும் ஈழபாரதி மருதூர்வாணரும் பக்கத்தில் ஒலுவில் அமுதனும் தோன்றும் காட்சி. கவிஞர் பாண்டியூரன் (ஆசிரியர் கு. கணபதிப்பிள்ளை) அவர்களின் படத்தையும், தந்துதவியவர் டாக்டர் எஸ். எம். இத்ரீஸ் (ஈழக்குயில்) அவர்களுக்கு நன்றி.
ஆசிரியர்
சமாதானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் முஸ்லிம்களிடையே

# தமிழும், இஸ்லாமும் பிரிக்கமுடியாத இடத்தை வகுக்கின்றன.

*1994ல் 4ம் சமாதானம் வெளியீட்டு விழா மருதமுனை மக்கள் மண்டபத்தில் நடந்தவேளை சிறப்பதிதியாகக் கலந்து சொற்பொழிவாற்றிய படமும் கட்டுரையும்.*



-ஹாஜி உஸ்மான் சாஹிப்-

"தமிழும், சைவமும் பிரிக்கமுடியாதவை" என்று சொல்வார்கள். "அவை இரண்டும் இரு கண்கள்" என்று கூறுவாரும் உண்டு! அந்தளவுக்கு, தமிழ் பேசும் இந்துக்கள் அல்லது சைவ சமயத்தினர் தமிழ் மொழிக்கு அழுத்தம் கொடுத்து வந்துள்ளனர். ஔவையார், பாரதியார் போன்ற தமிழ் கவிகள் திமிழினுடைய இனிமையை அதன் பெருமையைப் புகழ்ந்து பாடியிருந்த போதிலும்.

அதனுடைய மகிமையைப் புரிந்து இனிமையைச் சுவைத்து இன்பம் காண்பவர்கள் இஸ்லாமியத் தமிழர்கள்தான் என்றால் அது மிகையாகாது! செந்தமிழ் நாடெனும் போதினிலே- இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே- என்று பாரதியார் பாடினார். அது "நாவினிலே" என்று வரவேண்டியது எப்படியோ "காதினிலே" என்று வந்துவிட்டது!

தமிழ் நாடென்னும் போதோ, தமிழ் என்னும் போதோ அது காதுக்கினிக்கும் ஒரு பரிசுத்தக்கதையாக அல்லது ஒரு கற்பனை வசனமாக அல்லாமல்-தமிழ் என்னும் போதினிலே- இன்பத் தேன் வந்து பாயுது நாவினிலே- என்று அதனைச் சுவைத்து மகிழ்ந்து கொண்டிருப்பவர்கள்தமிழ் முஸ்லிம்களே யாவர்!

எப்படி? ஒரு மனிதன் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதும் அல்குர்ஆனை அப்படியே மனதார, "இறைவசனங்கள்" என்று நம்புகிறான். அவ்வாறு ஏற்றுக் கொள்வதன் மூலமே அவன் முஸ்லிமாகிறான்.

அந்த இறைவசனங்களை ஓதும்போது அல்லது ஓதக் கேட்கும்போது, அவனுடைய உடல் சிலிர்க்கின்றது. உள்ளம் உவகை கொள்கிறது. பொருள் புரியாவிட்டாலும் காதினிலே ஓர் இன்ப நாதம் ஒலிப்பதாக உணர்ச்சி அலைகள் தோன்றுகின்றன. அப்படித் தோன்றும் ஒரு மனிதனுக்கு, அதன் பொருளும் புரிந்திருந்தால் எப்படியிருக்கும்?

காலத்துக்குக் காலம் அவ்வக்காலத்திற்கு ஏற்ற நடையிலே- திருக்குர்ஆனுக்கு எத்தனையோ மொழி பெயர்ப்புக்கள் தமிழில் வந்துள்ளன.

ஒரு முஸ்லிமுடைய வாழ்வில் திருக்குர்ஆனை ஓதுவதோ, ஓதக்கேட்பதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட நடைமுறைகளோடு சம்பந்தப்பட்டது. அல்லாஹ்வின் வசனங்கள் தமிழில் சொல்லப்படும்போது தமிழுக்கு ஒரு அலாதியான சுவை சுரப்பதை உணர்வுபூர்வமாக அனுபவிக்கின்றான். அந்த இஸ்லாமியத் தமிழன்! இயல்பாகவே பொருள் விளங்காமல் அராபியில் திருக்குர்ஆனை ஓதும்போதே புத்துணர்வு பெற்றெழும் முஸ்லிம், தமிழிலே அதன் விளக்கத்தையும் புரிந்துகொள்ளும் பொழுது அடையும் ஆனந்தத்திற்கு அளவே இல்லை தமிழிலே அவனை ஒன்றித்து விடுகிறது!

தமிழ் சிதைவடைகிறது அல்லது அதற்கு ஓர் ஆபத்து வந்துவிட்டது என்றால் இஸ்லாமியத் தமிழர் வாழாவிருக்க முடியாது. தமிழ் என்கிறபோது அதில்எவ்வளவு அக்கறையுடையோனாகத் தமிழ் முஸ்லிம் திகழ்கின்றான் என்பதற்குச் செயல்பூர்வமான ஒரு முன்மாததிரியை சரித்திர உலகில் உலவவிட்டுச் சென்றுள்ளார்கள் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் ஸாஹிப் அவர்கள்!

ஏனென்றால் "இறைமறையாம் திருக்குர்ஆன் அந்தமொழியிலேய உண்டு ! அதற்கு எத்தனையே விரிவுரைகள், தெளிவுரைகள், சிறப்புரைகள் ! அம்மறை வழங்கும் மனித வாழ்விற்குரிய சட்டதிட்டங்கள் ! மாமறை பெற்றுத்தந்த மாநபியின் வாழ்வுச் சரிதைகள் ! அம்மறையைத் தொட்டும் எழுந்த பேரறிஞர்களின் சட்டத்தொகுப்புக்கள் ! வணக்கமுறைகள் பற்றிய விளக்கங்கள் நபிகள் நாயகத்தினுடைய பொன்மொழிகளான கதீஸ் தொகுப்புக்கள்! அந்த நாயகத்தினுடைய தோழர்கள் ஆயிரக்கணக்கானோரின் சரித்திரங்கள் ! இறைவனுக்கு முற்றிலும் அடிபணிந்து வாழ்ந்த அவுலியாக்கள் ஆயிரமாயிரமானோரின் சரிதைகள் ! முஸ்லிம்கள் நாளாந்த வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை விளக்கங்கள் ! என்றெல்லாம் இலட்சக்கணக்கான படைப்புக்கள் தமிழிலே உருவாக்கப்பட்டு அம்மொழிக்கு அணிசெய்து கொண்டிருக்கின்றன. அவை காலத்துக்ககு காலம் வளர்ந்து வரும் நடைக்கேற்ற முறையில் புதுப்புதுப் பொலிவுடன் திரும்பத் திரும்ப பதிக்கப்பட்டுக்கொண்டே வருகின்றன.

போதாக்குறைக்கு தமிழ்கூறும் நல்லுலகில் பிறந்த நாவலர்கள், பாவலர்கள், புலவர்கள் ஏராளமான இலக்கியப் படைப்புக்களைத் தந்துள்ளனர். தமிழ் முஸ்லிம் புரவலர்கள் அவற்றிற்காக பண, பொருளை அள்ளி இறைக்கின்றனர் என்றால் நான் நினைக்கிறேன் வேறெந்த வகுப்பாரும் இந்தளவிற்குச் சென்றிருக்க முடியாதென்று! இஸ்லாமியத் தமிழர்கள் தமிழுக்காற்றியுள்ள பங்களிப்பில் பூரணமான பெறுமதி இலைமறை காயாகவுள்ளது. பெரும் தத்துவ வித்தகர்களேயன்றி மற்றவர்களால் மட்டிடுவது கடினம். காரணம் நமது சூழல் அப்படித்தான் அமைந்துள்ளது.

ஆகவே தமிழ் முஸ்லிம்களை பொறுத்தவரையில் தமிழின் பெறுமதி அவர்களிடத்திலே அளவிடற்கரியது.

"தமிழின் வளர்ச்சிக்கு வளத்திற்கு ஏனைய சமுதாயத்தினர் ஆற்றிய பங்களிப்பை விட இஸ்லாமியர் ஆற்றிய பங்களிப்பு குறைந்ததல்ல. ..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பலரும் பேசக்கேட்டிருக்கிறோம். ஆனால், அந்தக்கருத்தில் எனக்கு உடன்பாடு கிடையாது. அதிலிருந்து மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருக்கின்றேன். என்னுடைய கருத்தெல்லாம் இதுதான்
தமிழ் கூறும் நல்லுலகிலே இஸ்லாம் பரவுவதற்கு முன்னால் சைவர்கள் சமணர்கள் வைணவர்கள் என்று பல்வேறுவகுப்பார் தமிழுக்குத் தொண்டாற்றியிருக்கின்றார்கள். இருந்தும் இஸ்லாமியர்கள் ஆற்றியுள்ள பங்களிப்பு இருக்கிறதே அதற்கு ஈடு இணைகிடையாது.

**அறபுத்தமிழ**

எந்தவொரு சமயத்தாரும் செய்யாத ஒரு அருஞ்சாதனையை இஸ்லாமியத் தமிழன் நிலைநாட்டியுள்ளான். அதுதான் அறபுத்தமிழ். சமஷ்கிருத எழுத்திலே தமிழ் பாசையை எழுதி அதையொரு கலையாக வளர்த்ததாகக் நாம் அறியோம்!

அதுபோல லத்தீன் எழுத்துக்களில் தமிழை எழுதி "இது லத்தீன் தமிழ்" என்று அறிமுகப்படுத்தியதாகவும் நாம் அறியவில்லை அவ்வாறே- ஆங்கிலத்தமிழ்! ஜேர்மன் தமிழ்! பிரஞ்சு தமிழ்! ரஷ்யன் தமிழ்! சீனத்தமிழ் ஹிந்தித் தமிழ்! குஜ்ராத் தமிழ்! வங்காளித்தமிழ்! சிங்களத்தமிழ்! என்று உலகிலே கிடையாது! ஆனால் இஸ்லாமியத்தமிழன் அறபுத் எழுத்துக்களில் தமிழை வடித்து அதனை அறபுத்தமிழ் எனறு கூறிப் பெருமைகொண்டான். தன்தாய் மொழியை அணிசெய்தான்!

இறைமறை கூறியது.----

(நபியே நீர் கூறுவிராக. உங்கள் தந்தையரும், உங்கள் மக்களும், உங்கள் சகோதரர்களும், உங்கள் மனைவியரும், உங்கள் குடும்பத்தினரும் எவற்றை நீங்கள் சம்பாதிக்கிறீர்களோ அத்தகைய (உங்களுடைய) பொருட்களும் அதனுடைய நஷ்டத்தையும் நீங்கள் அஞ்சுகிறீர்களோ அத்தகைய உங்களுடைய வியாபாரமும் எவற்றைக் கொண்டு நீங்கள் திருப்தி கொள்கிறீர்களோ அத்தகைய உங்களுடைய வீடுகளும் அல்லாஹ்வைவிட ரசூலைவிட அவனுடைய பாதையில் போரிடுவதை விட உங்களுக்கு மிக விருப்பமானவையாக இருந்தால் அல்லாஹ் தன்னுடைய தண்டனை பற்றிய கட்டளையை கொண்டுவரும் வரை நீங்கள் எதிர்பார்த்திருங்கள். பாவிகளான கூட்டத்தினரை அல்லாஹ் நேர்வழியில் செலுத்தமாட்டான்.

(- இல்குர்ஆன் 9:24-)

தன்னுடைய எல்லா நலன்களையும்விட ஏன் உரிமைகளையும்விட மேலாக இறைவனையும் இறைத்தூதரையும் நேசிக்கிறான் ஒரு முஸ்லிம்.
அத்தகைய நேசத்துக்ககுரிய இறைவனின் அருள்மறை குர்ஆனின் மொழி அறபு அந்த இறைவனின் தூதர் பேசிய மொழி அறபு அந்த அறபு மொழியினுடைய எழத்துக்களிடையே தமிழ் மொழியும் துலங்க வேண்டுமென்று இந்த எழுத்துக்களிலே தமிழை வடித்து அதற்கு அறபுத்தமிழ் என்று பெயரிட்டார்கள். இஸ்லாமியத் தமிழர்கள் என்றால் எந்தளவிற்கு தமிழ் பற்றுடையோராாக தமிழ் முஸ்லிம்கள் விளங்குகிறார்கள் என்பதை எண்ணிப்பார்த்திடல் வேண்டும்.
அந்த அறபுத்தமிழ்; முறையை விருத்தியாக்குவதற்கு இதுபோபன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்கள் உதவவேண்டும் என்று வினயமாக வேண்டிக் கொள்கிறேன்.

**முதன் மொழி எது**

"கல்தோன்றி மண்தோன்றாக்காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த தமிழ்க்குடி" என்று சொல்கிறார்கள். ஏதோ நாம் தமிழர்களாக இருக்கிறோம் என்பதால் அவ்வாறு எழுதி, பேசிப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஆனால், உலகம் அதனை ஏற்றுக்கொள்ளுமா? அறிவியல் ரீதியில் அது பொருந்துமா? கல்லும் தோன்றவில்லை மண்ணும் தோன்றவில்லை, அதனால் மனிதனும் தோன்றியிருக்க முடியாதென்பது சொல்லாமலே புரியும்.

மனிதன் தோன்றாயிருக்கும்போது மொழி எப்படித் தோன்றியிருக்கும்?

மிகப்பழமைவாய்ந்தது தமிழ் மொழியே என்பதை யாரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை, எனினும் உலகிலே முதலில் தோன்றிய மொழி தமது இன்பத் தமிழ்தானா?

இதனை நிருபிக்க - சரித்திர ஆதாரங்களோடு ஒப்பிட்டுப்பார்க்க - வெளி உலகில் எந்தவொரு தடையமும் கிடையாது.

ஆனால் தோன்றிய மொழிகளெல்லாம் முன்தோன்றி மூத்தமொழியாக - நமது தேனினும் இனிய இன்பத் தமிழ் இருக்குமோ என்று - கொஞ்சமாவது எண்ணிப்பாத்திட - ஆய்ந்திட உந்து சக்தியாக இருந்துகொண்டிருக்கும், ஓர் அடிப்படை ஆதார நூல் அல்குர்ஆன் மட்டுமே ஆகும்.! ஆதலால் தமிழ் பேசுவோர் அனைலவரும் தமிழின் பெருமையை மகிமையை மேலும் மேன்மையடயச்செய்திட திரு குர்ஆனின் பக்கம் தங்களின் கவனத்தை செலுத்த வேண்டியவர்களயாக இருக்கிறார்கள்.

அது ஏன் எப்படி என்பதை கவனிப்போம். மனித சமுதாயத்தின் தோற்றுவாய் அதாவது ஆதம், ஆதாம், சிவன் என்றெல்லாம் பல்வேறு சமயத்தினராலும் அழைக்கப்படுகின்ற அந்த முதல் மனிதர் இவ்வுலகிற்கு வந்து கால் பதித்தது இலங்கையில் உள்ள பாவாத மலை அல்லது சிவனொளி பாதமலை என்று சொல்லப்படுகின்ற அந்த மலை அதற்குச் சான்று பகிர்ந்து கொண்டிருக்கின்றது. திருக் குர்ஆனில் இருந்து எவ்வாறு ஆதாரம்தேடலாம் என்பதை இப்பொழுது பார்ப்போம். எல்லா சமுகத்திலும் இறைத்தூதர் வந்தே இருக்கிறார்கள்.

மனித தோற்றத்தின் தொடக்கத்தில் இருந்துசன்மார்க்கத்தைப்போதிக்கும் தூதுவர்கள் அனுப்பப்பட்டிருப்பதுடன் அவர்களில் பலருக்கு வேதங்கள் அருளப்பட்டிருக்கின்றன.

''நபியே! ஒவ்வெரு தூதுவரும் தன்மக்களுக்கு தெளிவாக விபரித்துக் கூறும் பொருட்டு அவ (ரவ) ருடைய மக்களின் மொழியைக் கொண்டே (போதனை புரியுமாறு) நாம் அவர்களை அனுப்பி வைத்தோம்..."(14:4)

என்று இறைவன் திருக் குர்ஆனில் கூறுகிறான். எனவே வெவ்வெறு காலங்களில் வேறுபட்ட நாடுகளில் மாறுபட்ட மொழி பேசிய மக்களிடையேயும் இறைத்தூதர்கள் தோன்றியிருக்கிறார்கள். அந்த தூதர்களின் எண்ணிக்கை 124000 எனறு சொல்லப்படுகின்றது. அத்தொடரில் முதல் மனிதராகவும் முதல் தூதராகவும் ஆதம் அலை அவர்கள் விளங்குகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே அந்த ஆதமனிதர்தான் ஆரம்பமாக ஒரு மொழியைப் பேச்சு வழக்கில் கொணர்ந்திருக்கிறார்.

> ஆதம் ஆலை "அல்லாஹ்" என்று முதலாவது வாயசைப்பும் பேசியதாக, குர்ஆனில் வசனமுள்ளது. அல்லாஹ் என்பது அரபுமொழி. ஆக ஆதம்போசிய மொழி அரபுதான் சமாதானம்" ஆசிரியர்

அது இறைவனால் அவருக்கு கற்பிக்கப்பட்ட மொழியாகும். அம்மொழியிலிருந்தே பிற்காலத்தில் வேறு மொழிகள் தோன்றலாயின!

ஆக மூல மொழி ஒன்றுதான்: அது எந்த மொழி
அகிலத்தினுடைய ஆதிபிதா ஆதம் அலை பேசிய மொழி தமிழ் என்கிறார்கள். அறிஞர் சிலர்!
கலைமாமணி கவி கா.மு. ஷரீப் தனது நூலில் ஆதம் நபிதான் உலக மானிடரின் தந்தை என்பதாலும் பாவமன்னிப்புக் கோரி இறைவன்பால் அவர் துதித்து வேண்டிநின்றிருந்த மலை இலங்கை ஹற்றன் பகுதியில்தான் உள்ளதென்பதாலும் இந்த இலங்கை, மூழ்கிய லெமூரியாக் கண்ணடத்தில் சிதறுண்ட ஒரு துண்டு நிலமே என்பதாலும் இலங்கையிலும் இந்தியாவின் தென்கோடியான தமிழகத்திலும் காலம்மறியாக்காலந் தொட்டே தமிழ் மக்கள் வாழ்ந்து வருவதாலும் ஆதியில் மனித இனம் தோன்றிய நிலம் தமிழ் நிலம் என்பதும்இவ்வினம் பேசிய மொழி தமிழ் மொழி என்பதும் ஏற்புடையதகவே உள்ளன.

லெமூரியாக்கண்டம் நீரில மூழ்கியபோதுகுமரி நாடு அதில் நின்று வடக்குநோக்கி செல்கின்ற நாவல் தீவு (இந்தியா)ம் தான் அன்றைய உலகின் கண்நிலவிய முதல் நிலப்பரப்பு என்கின்ற ஆய்வாளர்களின் முடிவு ஒப்புடைத்தென்றால் மனித இனத்தின் தோற்றுவாய் நிலம் தமிழ் இனமே என்பதில் ஐயமில்லை. இந்த இனம் பேசிய மொழி தமிழ் மொழி இம் மொழியில் இருந்தே ஏனைய மொழிகள் தோன்றின என்கின்ற கூற்றும் உண்மையாகும். தமிழகத்தில் இருந்தே இந்தியாவின் ஏனைய பகுதிகட்கும் உலகின் கண்ணுள்ளஎல்லாக் கண்டங்களுக்கும் மக்கள் சென்று குடியேறிப்பரவி நிலைத்து நின்று வாழலாயினர் என்பது கொள்ளத்தக்கதேயாகும். இதனை மெய்ப்பிப்பான் போன்றுள்ளதே கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த தமிழ்க்குடி." எனும் முதுமொழி. என்று குறிப்பிட்டுள்ளார்.

இக்கூற்றினை ஆதரித்தாற் போன்று பேராசிரியர் கேப்டன் என். எம். அமிரலி எம். ஏ அவர்களும் தமது நூலொன்றில் கருத்துவெளியிட்டுள்ளார். அதேபோல ஆதம் அலை அவர்கள் "சரந்தீபு" என்னும் இலங்கைத் திருநாட்டிலேதான் இறக்கப்பட்டார் என்பதை அறபி, பார்சி, உறுது ஆங்கிலம் முதலான மொழிகளில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புக்களை ஆதாரங்காட்டி நிருபிக்கின்றார் பேராசிரியர் எஸ். ஏ. இமாம் அவர்கள்.

மேலும் மருதூர் எ மஜீத் அவர்கள் தன்னுடைய "மத்திய கிழக்கிலிருந்து மட்டக்களப்புவரை" எனும் ஆய்வு நூலில், ஆதாம் பேசிய மொழி தமிழேதான் அவரின் சந்ததியினர் ஆரம்பத்திலேயே இங்கு குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறி வாழ்ந்தனர். என்பதாக எடுத்தெழுதியுள்ளார்! அதற்கு அவர்கள் காட்டும் ஆதாரங்கள் புறக்கணிக்க முடியாதுள்ளன.

ஆனால் சில தப்சீர் விரிவுரையாளர்களின் கூற்றுப்படி பார்க்கப்போனாலே ஹஸ்ரத் ஆதம் அலை அவர்கள் சரன்திப் எனும் இலங்கையில் இறக்கப்பட்டு அழுதழுது இரந்து இறைவன் பால் பாவமன்னிப்புன்கோரிய பின்னர் இப்பூமியில் பல இடங்களிலும் அலைந்து திரிந்து இறுதியாக அறபு நாட்டில் உள்ள அறபா.'. த் என்னுமிடத்தில் தன்னுடைய மனைவியாகிய உலகின் முதற்பெண் மனித குலத்தின் ஆதித் தாயார்- அவ்வா அலை அவர்களைக் கண்டு ஒருவரையொருவர் அறிந்து கொண்டதாகவும் அதனைத் தொடர்ந்து (இறை உத்தரவுப்படி) இவ்வுலகின் முதல் வணக்கஸ்தலமான புனித க.'. பத்துள்ளாவை நிர்மாணித்ததாகவும் தெரியவருகிறது. அதனைத் தொடர்ந்து பலஸ்தீனத்தில் வசித்ததாகவும் அறிகிறோம். அப்படியானால் அவர்களின் சந்ததி ஆரம்பத்தில் அரேபியாவில்தான் பல்கிப் பெருகிய பின்னர்தான் ஏனைய பகுதிகளுக்கு சென்றிருக்க வேண்டுமென்று கருதுவது இயல்பேயாகும்.

இந்த இரண்டு வகையான கூற்றுக்களுக்குமிடையே ஒற்றுமைக்கு இடமுண்டு என்பதையும் நாம் மறத்தல் ஆகாது.

சுவர்க்கத்தில் இருந்து தூக்கி வீசப்பட்ட அல்லது இறக்கப்பட்ட மனித குலத்தின் தாய் தந்தையர்களான ஆதம் ஹவ்வா அலை ஆகிய இருவரும்முறையே சரன் தீவிலும் ஜித்தாவிலும் வந்திறங்கினார்கள். ஆதம் அலை சரன்தீப் மலையில் தரித்திருந்து பாவமன்னிப்பு கோரிய பின்னர் அன்றைய அறபு தேசத்தை நோக்கிச் சென்று அங்கே ஹவ்வாவைச் சந்திக்கிறார். அதன் பின்னர்தான் பூவுலகில் இறங்கிய இடமான இலங்கைக்கு தன் மனைவியை அழைத்து வந்திருக்கலாமல்லவா? அல்லது அங்குமிங்குமாக மாறி மாறி வாசம் செய்திருக்கலாமல்லவா? ஆதம் தம்பதிகள் 40 தடவை இலங்கை வந்து சேர்ந்ததாகவும் செய்தியுண்டு! ஆதம்

அலை 950 ஆண்டுகளும் அதுபோல் ஹவ்வா அலை நீண்ட காலமும் இவ்வுலகில் வாழ்ந்திருந்தால் 40 முறை இலங்கைக்கு விஜயம் செய்தது ஆச்சரியமானதொன்றல்ல! இந்த வகையில் இன்றைய தமிழ் கூறும் நல்லுலகில் ஆரம்பத்திலேயே அவர்களின் சந்ததிகளில் ஒரு பிரிவினர் இங்கு குடியமர்த்தப்பட்டிருக்கலாம் என எண்ண இடமுண்டு! "இந்தியாவின் திசையில் இருந்து இஸ்லாத்தின் தென்றலை நுகர்கின்றேன்" என்று நபி ஸல் சொன்னதாக ஒரு அறிவிப்பும் காணப்படுகிறது.

**இஸ்லாத்தின் மூலம் தமிழ் மலர்கிறது.**

ஆக, தமிழினுடைய தனித்தன்மைக்கு உணர்வூட்டும் ஆய்வுக்குரிய தடயம் அல்லது கோடிட்டுக்காட்டுதல் திருக்குர்ஆன் மூலமாகவே நமது சிந்தையைத் தொடுகிறது..!

இஸ்லாத்தை படிக்க வேண்டுமென்பதற்காக தமிழைக் கற்று பின்னர் அதனை வீட்டு மொழியாகப் பாவித்து பிற்கால சந்ததியினர் தங்கள் தாய்மொழி தமிழ் என்று கருதுகிற நிலை இலங்கையில் உருவான சம்பவம் இஸ்லாம் பரவச் செய்துள்ளமைக்கு நல்லதொரு சான்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வட-கிழக்கு பிராந்தியங்களில் வாழுகின்ற நாங்களெல்லாம் தனித்தமிழ இனத்தில் தோன்றியவர்கள் என்னைப் பொறுத்தவரையில் சொல்வதானால் முக்குவர் குலவனிதையர் இஸ்லாம் தழுவி ஈன்றெடுத்த மறவர் வழிவந்தவர்களில் நானும் ஒருவன்.

ஆனால் இலங்கையில் தென்மாகாணம் மேல் மாகாணம் மத்திய மாகாணம் ஆகிய இடங்களில் வாழும் பெரும்பாலானோர் ஆரிய சிங்கள இன மங்கையர் இஸ்லாம் தழுவி அரபிகளை மணந்து அதன் வழி வந்தவராவர். அக்காலத்திலே அவர்களது தாய்ப்பாசை சிங்களமாகும் இஸ்லாம் படிப்படியாக அங்கு பரவவே இஸலாத்தைப் போதிக்கும் போதகர் அங்கு பெருமளவில் தேவைப்பட்டனர். அக்காலத்தில் தமிழில்தான் இஸ்லாமிய நூல்கள் பெருமளவில் இருந்தன. "லெப்பைகள்" என்னும் மார்க்க போதகர்கள் தமிழ் நாட்டிலிருந்து அங்கு சென்று "த..வா பணி புரிந்தனர். ஆதலால் அம்மக்கள் தமிழை கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்து கொண்டனர். அவர்களுடைய பிள்ளைகள் மார்க்க கல்வி கற்பதற்காக தமிழ் நாட்டிலுள்ள அரபு மதரசாக்களுக்கே வந்து கற்றனர். அந்த மாணவர்களும் "ஆலிம்" களாகப் பட்டம் பெற்றுத் தத்தமது ஊர்களுக்கு திரும்பியதும் அங்கே தமிழில்தான் போதனைகளை நடாத்தினார்கள்.
அன்றையக் காலத்திலே மார்க்கக் கல்வி என்றால் அது தமிழ் நாட்டில்தான் உள்ளது என்ற நிலை இலங்கையில் நிலவியது. நான் சிறுவனாக இருந்தபோது ஒரு விஷயத்தை அறிந்தேன். அதாவது, யாராவதொருவர் மார்க்க விடயத்தைபற்றி அதிகமாகப் பேசினால் "நீரென்ன கீழக் கரைக்குச் சென்று ஓதி வந்த ஆலிமா?" என்று கேட்பார்கள் இதிலிருந்து நாம் புரிந்து கொள்வது என்னவென்றால் மார்க்கக் கல்வி என்பது அன்று தமிழ் நாட்டிலேயே பெறப்பட்டது என்பதேயாகும். அதுமட்டுமல்ல சிங்களப் பகுதியிலிருந்து வந்த மாணவர்கள் அரபி மொழியை தமிழிலேயே கற்றனர். நாளாவட்டத்தில் அப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் வீட்டு மொழியாகவும் அரபுக்கு அடுத்த ஸ்தானத்தில் இஸ்லாமிய மொழியாகவும் தமிழ் விளங்கலாயிற்று. இன்று அவர்களது தாய்மொழி தமிழென்றே கருதப்படுகின்றது. ஒரு காலத்தில் இலங்கைப் பாராளுமன்ற சபாநாயகராகவிருந்த மா்ஹூம் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் அவர்கள் "முஸ்லிம்களின் தாய்மொழி தமிழல்ல" என்று ஒரு முறை பேசியிருந்தார். அதைக்கேட்டு ஆத்திரப்பட்டவர்களில் நானுமொருவன்.

பின்னர் தாம் எமக்கு விளக்கம் தரப்பட்டது. அதாவது, "அவர் தம்முடைய தென்மாகாணம் போன்ற சிங்களப்பகுதிகளில் வாழும் முஸ்லிம்களை மட்டும் கருத்திற்கொண்டே அவ்வாறு கூறினார்" என்று! அதுபோல வடநாட்டைச் சேர்ந்த உருது, குஜராத், போன்ற மொழிகளைப் பேசக்கூடிய "பாய்மார்" கொழும்பில் இருக்கிறார்கள். அவர்களின் சந்ததியினர் பெருகியுள்ளனர். அவாகளும் மார்க்க ரீதியில் இஸ்லாமிய தமிழர்களிடையே தொடர்புகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறாகள். எனவே அவர்களும் தமிழை படிக்கிறார்கள்.
அவ்வாறே- பிரித்தானிய ஆட்சி காலத்தில் இலங்கையில் குடியேறிய மலாயர்கள்சமய ரீதியில் இஸ்லாமிய தமிழர்களுடனேயே தொடர்பு கொள்ளவேண்டிய நிலை. அதனால் அவர்களும் தமிழை படித்தாகள். அவர்கள் இருசாராரினுடைய சந்ததிகளில் பலர் இன்று தமிழை முறையாகக்கற்று அம்மொழியிலேயே கவிஞர்களாகவும். எழுத்தாளர் களாகவும் திகழ்கிறார்கள் என்றால் அவையனைத்தும் இஸ்லாத்தினுடைய சாதனைகளேயாகும் அதுபோல இஸ்லாத்தை தழுவிய சிங்களவர்கள் தமிழைக்கற்று அதன்மூலம் இஸலாத்தை சரிவர விளங்கிக் கொண்ட சம்பவம் ஏராளம்!

ஆக. பிறமொழி பேசுவோரிடையே தமிழை அறிமுகம் செய்து அதைப்பரவிட வைத்த பெருமை இஸ்லாத்திற்கேயுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையையும், தமிழ்நாட்டையும் எடுத்துக்கொண்டால் இந்நிலப்பரப்பிலே இஸ்லாமும் இன்பத்தமிழும் பிரிக்க முடியாதவை. தமிழ்நாட்டுப்பத்திரிகை யொன்றிலே அதாவது "முஸ்லிம் முரசு", "மணிவிளக்கு", "பிறை", "மறுமலர்ச்சி" இவைநான்கில் ஏதாவது ஒன்றிலே படித்ததாக எனக்குஞாபகம்.

ஒரு முறை டெல்லி பாராளுமன்றத்திலே ஜவகர்லால் நேரு பிரதமராக இருந்தபோது அவர் "முஸ்லிம்கள் அரசியலில் மதத்தைக் கலக்குகிறார்கள்" என்று கூறிய நேரத்திலே, அதற்குப் பதிலெடுத்து கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் (ரஹ்) அவர்கள் பேசினார்கள்.

"பண்டிற் ஜீ ! ஒரு முஸ்லிம் பாராளுமன்றத்திற்குள் நுழையும்போது அவன் தன்னுடைய மார்க்கத்தைப் படிக்கட்டுகளிலே வைத்துவிட்டு வரமுடியாது அது அவன்கூடவே இருக்கும்!" என்று.
அதுபோல ஒரு முஸ்லிம் எங்கு சென்றாலும் இஸ்லாம் அவன்கூடவே இருக்கும் அவ்வாறே, இஸ்லாமியத் தமிழனைப் பொறுத்தவரை இஸ்லாமும், இன்பத்தமிழும் இணைந்து - இணைபிரியாது அவன்கூடவே இருக்கும்.

**நானிலத்தின் நடுமத்தியில் தமிழ் முழக்கம்**
உதாரணத்திற்கு - 'உலகத்திலுள்ள அத்தனை மொழிபேசும் முஸ்லிம்களும் மக்கமா நகரில் வந்து கூடுகிறார்கள் ஹஜ்ஜுக்காக!
சாதாரண கூட்டமல்ல 25 - 30 லட்சம் மக்கள் சமுத்திரம் தமிழ் முஸ்லிம்களும் வந்து அச்சமுத்திரத்திலே சங்கமமாகிறார்கள். அங்கே சகல மொழிகளும் ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ அந்தஸ்தைப் பெறுகின்றன. தமிழ் முஸ்லிம்களிலுள்ள அறிஞர்கள் - வழிகாட்டிகள், தத்தமது குழுக்களில் உள்ளவர்களை ஒன்று திரட்டி மார்க்கச்சட்டதிட்டங்களை விளக்கித் தமிழில் சொல்மாரி பொழிகிறார்கள்.

பின்னர் இறை ஆலையத்தின் - கௌபத்துள்ளாவின் மைதானத்தில் வந்து இறங்கி வலம் வந்துகொண்டிருக்கும் அந்த ஜன வெள்ளத்தில் சங்கமமாகி சுழல்கிறார்கள். அப்பொழுது விசேட கோரிக்கைகளும் வேண்டப்படுகின்றன. "இறைவனே ! எங்கள் பிழைகளைப் பொறுப்பாயாக! எங்களுடைய இந்த ஹஜ்ஜை ஒப்புக்கொள்வாயாக! எங்களுடைய பாவங்களை மன்னிப்பாயாக! எங்களுடைய நாட்டிலும் நாங்கள் வாழும் இந்த உலகெங்கும் அமைதியையும், சுபிட்சத்தையும் உண்டுபண்ணுவாயாக! சகல இன மக்களிடத்திலும் சௌஜன்னியத்தை ஏற்படுத்துவாயாக!

என்று பிரார்திக்கிறார்கள் என்றால் தமிழில் அர்ச்சனை செய்ய தமிழ் மண்ணிலேயே இடம் கிடைப்பது அரிதாகவிருக்கின்ற இந்தக்காலத்திலே அரபு மண்ணிலே தமிழில் இறைவனிடம் பிரார்த்திக்கப்படும் அற்புதந்தான், என்ன! அந்த அதி அற்புத சாதனையைப் படைத்தவர்கள் தமிழ் கூறும் நல்லுலகிலே இஸ்லாமியத் தமிழர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆக, தமிழைப் போதித்து, வளர்த்து, வாழ்வித்து வருவதில் தமிழ் முஸ்லிம்களின் பணிக்கு நிகரே கிடையாது! "இஸ்லாம் எங்கள் வழி! இன்பத்தமிழ் எங்கள் மொழி!"
என்று இஸ்லாமும், இன்பத் தமிழும் இணைபியாதவையாகிவிட்டன! ஆதலால் இஸ்லாம் எனும் போதினிலே - இன்ப நாதம் வந்து பாயுது காதினிலே - எங்கள் தாய்மொழி தமிழென்னும் போதினிலே - தேன் வந்துபாயுது நாவினிலே!
என்று. நாமும் நாதமிசைப்போமாக

வஸ்ஸலாம்
வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்ட சிற்றேடுகளின் தோற்றமும் வளர்ச்சியும்




**"வித்தியாவிளக்கு"**

1930 இல் எனக்குத் தெரிந்தளவில், நூற்றுக்கதிகமாக கையெழுத்துப் பிரதிகளே அக்காலங்களில் பனையோலை, தளப்பத்து ஓலைகளில் எழுத்தாணிகளாலும், மரப்பட்டை சாயங்களாலும், மயில் இறகு முனைகளால் தொட்டு, ஏடுகளில் எழுதப்பட்டுள்ளன என்று முதியவர்கள் சொன்னார்கள். சில ஓலைச் சிற்றேடுகளை நானும் தேடிப் படித்திருக்கிறேன். இவைகளில் இன்றும் என் நினைவினில் நிலைத்திருப்பது "வித்தியாவிளக்கு" எனும் சிற்றேடு என்பதாகும்.

**"ஏன் என்றால் பொருள் என்ன?"**

"உபாத்தியார் கோபித்தால் ஏட்டுக்கட்டைத்தான் பறிப்பார். அதில் கற்ற கல்வியைப் பறிக்க ஏலாது" என்றொரு பழமொழி உள்ளது. ஆதிகாலத்தில் மணல் பரவி, திண்ணையில் மாணவர்கள் வளைத்திருக்க, உபாத்தியார் படிப்பிப்பார். இன்றும் பாலகர்களுக்கு, மரநிழல்களில், மணல் பரவி விரல்களைப் பிடித்துப் படிப்பிப்பார்களே! களிமண் பிசைந்து, சிலைட் பலகையாக்கி, காய்த்துப் பதமாக்கி, வெண்சோக்கட்டி எழுது கோல்களினாலும் - கரும்பலகையிலும் எழுதி அழித்து திருத்திப் படித்திருக்கிறோம். கற்காலம் உலகம் தோன்றி மனிதர்கள் பிறந்த காலங்களில், அவர்களில் சிலரை இறைவன் அருள்பாலித்து, அ, ஆ, இ, ஈ எனும் வாயசைப்புக்களில் முதல் மனித மொழி அரபு பாஷை வந்ததாகவும், தமிழ் மொழி பிறந்ததாகவும் ஆராய்ச்சியாளர்கள் எழுதியுள்ளனர். கல் வெட்டுக்களில் ஏடுகள் இருந்துள்ளன. இப்போதும் அவைகளை அழியாமல் பாதுகாத்தும் வருகின்றனர்.

கல்லேடு, பனையேடு, தளைப்பத்தோலையேடு என வள்ளுவர், கம்பர், ஔவையார், உமறுப்புலவர் காலங்களிலும் சிற்றேடுகள் இருந்துதான்

உலகப்புகழ்பெற்ற அறிவு நூல்களையும் அவர்கள் இயற்றினார்கள். அவர்களின் கி.மு. 2000ம் ஆண்டுக்கு முன் தாள், பேனை, மை என்றெல்லாம் நமக்கிருப்பது போலில்லை. அக்காலங்களிலும் இச்சிற்றேடுகள் எனும் சொல் இருந்தது. அவைகளைப் போகுமிடமெல்லாம் அழியாமல் பாதுகாத்துப் படித்தும், பிள்ளைகளுக்குப் படிப்பித்தும் கலை, இலக்கிய அறிவுகளைப் படிப்பித்தும் வளர்த்தார்கள். இந்தப் பனையோலை படிவங்களுக்குப் பெயர்தான் சிற்றேடுகள் என்றும் பொருளாகும்.

இன்று தினகரன் ஏடு, சமாதானம் சஞ்சிகை, நவமணி வாரமலர், வீரகேசரி, தினக்கதிர் தினசரி என்பதெல்லாம் ஏடுகள்தான். ஆனால் சிற்றேடு என்பதன் பொருள் பணபலம் குறைந்த நாளைந்த பத்திருபது உழைப்பின் ரூபாய்களில் மிச்சம் பிடித்து, மாதம், வருடம் ஒரு புத்தகம் அச்சிடுவோமே.30, 40, 50, 100 பக்கத்துள், இவைகளுக்கு

பெயர்தான் சிற்றேடுகள். இந்த ஏடு, இதழ், சஞ்சிகை, வாரமலர், பத்திரிகை எனப் பலப்பல பெயர்கள் பாரால் வந்தன என்பதை நம்மில் பலருக்குத் தெரியாது. ஏன்? இன்றுள்ள ஆசிரியர், பட்டதாரிகள், கலாநிதிகள் பலருக்கே தெரியாது இனிமேல் நான் விளக்கியபின் "ஆ...... இதுவா" என விழிபிதுங்குவோரும் இருப்பார்கள்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் 1890ல் காரைதீவு கல்முனைப் பிரதேசத்தில் பிறந்தவர். அக்காலத்தில் இந்த மாதிரி தாள், புத்தகம், சஞ்சிகை, ஏடுகளே இல்லை. விபுலாந்தரின் முதாதையர் திராவிட, தமிழக, வேடுவ இனங்களைச் சேர்ந்த தமிழர்கள். யாரிந்த வேடுவர் வரலாற்றுப் பரம்பரைகள்? வரலாற்றைக் கூறி நேரத்தைக் கடத்தாமல், இந்த விபுலாந்தர் கல்வி மாணவர் காலத்தில் 1001களில் மதுரையில் படித்தவராம். அந்தகக காலம் பல வித்துவங்களைக் கற்றுவந்து காரைதீவினில், ஆசிரியராக கடமைபுரிந்த காலம். மருதமுனைக்கு வந்தாராம். 1930ம் ஆண்டு ஓலைக் கொட்டில் போட்டு, (இப்போது அல்மனார்) மருதமுனைக்கு முதலாவது உபாத்தியாயர். விபுலாந்தர் என்றழைக்கப்பட்டார்.

முஸ்லிம், தமிழ் கலவன் பாடசாலையென்று பிரிட்டிஸாரின் ஆட்சிக்காலம். சரிபுத்தீன், பழீல் மௌலானா, குத்துாஸ், சதக்கு லெப்பை, சம்சுத்தீன், பெரியதம்பி, செல்லமுத்து, சாமித்தம்பி, செல்லத்துரை, மயிலன்போடி, காத்தமுத்து என்றெல்லாம் விபுலானந்தரிடம் ஓலைக் கொட்டிலில் அரிச்சுவடி ஏடு படித்து வளர்ந்தனராம். இந்திய தமிழ் நாட்டில் இருந்து வித்தியாவிளக்கு என்னும் சாண் நீளம் மூவிரல் அகலம், இருபக்கமும் 150 பக்கம் எழுத்தாணியால் எழுதிய பனையோலை ஏடு கொண்டுவந்ததையே, மருதமுனைக்கும் கொணர்ந்து மாணவர்களுக்கும் படிப்பித்தார் விபுலானந்தர். அந்த ஏடு எப்படி எழுத்து வடிவம் இருந்ததென்று ஆ.மு.ஷரிபுத்தீன் தலைமை ஆசிரியர் (எனக்கு மாமா) 1945ம் வருடம் விபுலானந்தர் கொணர்ந்த வித்தியாவிளக்கு ஏடு கல்வி முறையை விளக்கினார்கள்.

அன்னம், ஆந்தை, இலை, ஈட்டி, உரல், ஊசி, எருமை, ஏணி, ஐவிரல், ஒரு மலர், ஓடம், ஔவையார் என்று அகர வரிசைப்படி படங்களுடன் வரையப்பட்டனவாம். இதற்குப் பெயர்தான் ஏட்டுக் கல்வி என்பதாகும். இதை முதலில் வித்தைகாட்டி விளக்கப்படங்களுடனும் அ, க, ங, ச.... வரிசைப்படுத்தியும் உருவங்கள் வரைந்தும் அதற்கேற்ப பாட்டிசை எழுதியும் பாடிக்கேட்டு இரசிக்கச் செய்தவரும் முத்தமிழ் வித்தகர் என்று பெரும் அறிஞர்களும், பேராசிரியர்களும் விபுலானந்தரை போற்றினர்.

பாடும் மீன், நீரர மகளீர், யாழ் நூல் என்றெல்லாம் பிற்காலத்தில் பாடிய நடன ஆசிரியராம் விபுலானந்தர் சுவாமிகளாகும். இவர்கள் மருதமுனை முஸ்லிம், தமிழ் மாணவர்களையும் கவிதை, கதை, கட்டுரைகள் எழுதச் செய்து பரீட்சித்து தெரிவுசெய்யப்பட்ட பிரதிகளை கையணைவுகளில் முதலில் திரட்டித் தொகுக்கப்பட்ட முதலாவது ஏடு "வித்தியாவிளக்கு" எனும் சஞ்சிகையாகும். அம்பாரை (கொண்டவெட்டுவான் 1950க்கு முன்பு) விபுலானந்தர் வாழ்ந்த காலப்பெயர். பிரதேசம் கரவாகுப்பற்று வெளிவந்த முதலாவது சிற்றேடு வித்தியா விளக்கு. கலங்கரை என்று விபுலானந்தரின் பேரர் கு.வைரமுத்து 1940ல் மருதமுனைக் கலவன் பாடசாலைக்கு வந்தபின் இரண்டாவது தலைமை ஆசிரியரானார்.

விபுலானந்தரைப் பேராதனைப் பல்கலைக்கழகம் பேராசிரியராக வரச்செய்தது. வைரமுத்து அவர்களின் முதலாவது மாணவரான ஆ.மு.ஷரிபுத்தீனை உதவியாசிரியராக நியமித்து "வித்தியா விளக்கு" என்னும் சிற்றேட்டை "கலங்கரை" என்று பெயர் மாற்றினாராம். இதில் முஸ்லிம், அமீன், மஜீத், சின்னத்துரை, லத்தீப், இஸ்மாயீல் போன்றவர்களின் கையெழுத்து விடயங்களை எழுதிப் பயிற்சி கொடுத்து வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம் 9

## கலங்கரை 1945 இன் பின்.

இன்று 2001களில் பிரபலமாகிக்கொண்டிருக்கும் எழுத்தாளர்களில் மருதமுனையில் பிறந்த எஸ்.எல்.ஏ.லத்தீப் 1960இல் "இசைவாணன்" பட்டத்தை அதே தலைமையாசிரியர் புலவர் ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள் (வட்டாரக் கல்வி அதிகாரியான காலம்) பெற்றார் ஆசிரிய சங்கச் செயலாளர் ஏ.எச்.எம்.மஜீத் ஆசிரியர் (மருதமுனை மஜீத்) அவர்களால் நீலாவணன், ஜே.எம்.எம்.அப்துல் காதிர் அதிபர் ஆகியோராலும் பட்டம் தெரியப்பட்டு விழாவொன்றில் வரவேற்புப் பாடியதற்காக கொடுக்கப்பட்ட இசைவாணன் பட்டத்திற்கு முன்பு எவருமே பட்டங்கள் பெற்றதில்லை. மேலும் 1947இல் "காகா காகா காகா என்று கத்துது காகம்..." என்ற கவிதைக்கும் முதல் பரிசு பெற்று "குட்டிப் புலவன் அப்துல் லத்தீப்" என்று புலவர்மணி பெரிய தம்பிப் பிள்ளை (சோதனைகார ஐயா) அவர்களினால் பட்டம் பெற்றவர் என்பதை கரிசனையுடன் நோக்க வேண்டும்.

மேற்கூறிய "காகா கவிதை"யையும் வித்தியா விளக்கு கலங்கரையில் கையெழுத்தாக எழுதப்பட்டுள்ளது. இதே பாடசாலையில் என்னோடு படித்த ஏ.எச்.எம்.மஜீத் ஆசிரியராகி அதிபராகிய வேளை 1988இல் அல் மனார் கல்லூரி 75 வது ஆண்டு விழா நிறைவு மலராகவும் கலங்கரைச் சிற்றேடு வெளியிட்ட பெருமையும் மருதமுனை மஜீத் ஓய்வு பெற்ற கல்முனைக் பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்பதும் குறிப்பிட வேண்டியவராகும்.

### கலையமுதம்

1950 களில் அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அதிபராக இருந்த ஐ.எல்.எம்.மஷூர் அவர்களால் கையெழுத்துப்பிரதியாக சிறுகதை, கவிதை, நாட்டுக்கவி, நாடகம் எப்படி எழுதுவது? எனும் பயிற்சிக்களமாக சிலகாலம் கலையமுதம் வெளிவந்தது. அப்துல்ஸமது முகம்மது சலீம், ஈழமேகம் பக்கீர் தம்பி, ஆ.மு.ஷரிபுத்தீன் போன்றவர்களால் கலையமுதம் அச்சுப்பதிப்பாகியும் வெளிவந்தது. 'மருதமுனை ஏ.ஆர்.ஏ.அஸீஸ் பீ.ஏ. அவர்கள் பீடாதிபதியாக இருந்து 2000ஆண்டு மலராகவும் வந்தது. மிக அழகிய பழபழப்பதிப்பாக கலையமுதம் மிளிர்ந்துகொண்டிருக்கின்றது.

### ஸாஹிறா

1960 களில் கல்முனை ஸாஹிராக் கல்லூரியிலும் 1:4 அளவில் கையெழுத்தாகவும் வண்ணச் சித்திரங்களும் சிறுகதை, கவிதை, விஞ்ஞானக் கட்டுரைகளும் ஆங்கிலம் அச்சுருவில் வந்தது. கவிஞர் அன்பு முகையதீன், எம்.ஏ.நுஃமான், மருதூர் ஏ. மஜீத், எஸ்.எச்.எம்.ஜெமீல், யு.எல்.ஆதம்பாவா, ஏ.யு.எம்.ஏ.கரீம் போன்றவர்கள் ஸாஹிறா ஏட்டில் எழுதிப் பயிற்சி பெற்றவர்கள் இன்றும் பிரபல எழுத்தாளராகியுள்ளனர்.

### அம்பு

இதுவும் கல்முனை ஸாஹிறாக் கல்லூரி மாணவர்களின் விஞ்ஞான ஏடாக 1980 களில் விலை போட்டு 1:8 அளவில் வெளிவந்தது.

### கலைமுரசு

1960 இல் சம்மாந்துறை ஏ.எம்.அமானுல்லா என்பவரால் 1:4 அளவில் 4.8.12 பக்கங்களில் துண்டு, துணுக்கு, கட்டுரை, சிறுகதை, கவிதைகளும் காத்திரமில்லாமல் வெளியிட்டு ஐந்தாறு சஞ்சிகை வெறும் பத்திரிகைகளாகவே வந்தது. மாதம், காலாண்டிதழ் என்று நின்றது கலைமுரசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950,60களில் என்னைச் சுற்றி இளசுகளும், மூத்த இளம் எழுத்தாளர்களும் சலாம் போட்டு வந்தார்கள். கொத்தன், கனி, மஜீத், பாரி, பாண்டியூரன், சசி, நூ. மான், நீலாவணன், சடாச்சரன், ஜீவா, அப்துஸ்ஸமது, இக்பால், முத்துமீரான், மாஸ்டர்மஜீத், சுழமேகம், அமானுல்லா என்று ஏகப்பட்ட அம்பாறை மாவட்ட இளந்தாரிகளும் அதிபர் ஆசிரியர்களுமாவர். காரணமென்ன? கல்கி, கலைமகள், ஆனந்த விகடன், சுதேசமித்திரன், குமுதம், கல்கண்டு, முத்தாரம், திராவிடன், திராவிடத்தான், தென்றல், தாருஸ்ஸலாம், மணிவிளக்கு.

பிறை, கலைச்செல்வி, கலைவாணி, புதினம், சங்கப்பலகை, விவேகி, கதம்பம், ராதா, ஜோதி, மித்திரன் என அக்கால சகல சஞ்சிகை ஏடுகளையும் அவைகளை 10.20.30 சத விலைகளில் வாங்கி வாசித்த மேற்கூறியவர்களிடம் நான் ஓடி அலைந்து கெஞ்சியும் அவைகளை அரைவிலைக்கும், இலவசமாகவும் வாங்கி ஒரு நடமாடும் வாசகர் சாலையே நடத்தி வந்தேன். வீசி கந்தையா, வித்துவான், நடராசா, பொன்னுதுரை, இரா நாகலிங்கம், அன்புமணி போன்றவர்களிடம் மட்டக்களப்பிற்கு பஸ்ஸிலே 75 சத டிக்கட்டில் போய் வந்து சிற்றேடுகள் சேமித்து தேடிவருபவர்களை ஆதரித்து ஆலடி மைதானத்தில் கலாலயம் நடாத்தி கலை இலக்கிய வளர்ச்சிக்காகவே வாழ்ந்து கொண்டு இருப்பவர்களில் ☛ இவ்விடத்தில் இவைகளை நான் புழுகுவதைவிட 1960 இல் புலவர் ஆ.மு.சரிபுத்தீன் வித்தியாதரிசகர் எனக்கு கிராமச் சங்க வாசிகசாலை மண்டப விழா ஒன்றில் இந்தியாவிலே ஒரு கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களைப்போல், இலங்கையிலேயும் ஒரு எஸ்.எல்.அப்துல் லத்தீப் குட்டிப்புலவன் இவர்களும் கூத்து, கும்மி, நாடகம், நாவன்மை, இசைகளிலும் நாமறிவோம். ஆதலால் இவரை இன்று இவ்விழாவில் "இசைவாணன்" என்ற பட்டத்தையும், பெற்றார் ஆசிரியர் சங்கச் சார்பிலும் பர்சும் கொடுத்துப் பாராட்டுகின்றேன் என்றார்கள் எனில், இச்சிற்றேடுகளை ஆராய்ச்சிகளில் உஷாத்துணைக்காகப் புடமிட்டுக் காட்டுவதில் தவறில்லையே.

இங்ஙனம் 50.60.70களிலும் சிற்றேடுகள் அரைவிலைகளில் வாங்கவும் விற்கவும் வந்தவர்களை முன்பு கூறினேன். இவர்களில் கலைமுரசு ஏ.எம்.அமானுல்லா அவர்களை அழுத்திக் கூற வேண்டியவனாவேன். 1970இல் "புதுப்பாதை" என்ற 12 பக்க 1/4 அளவு பத்திரிகையுடன் இதே அமானுல்லா வீடு தேடி வந்தார். அதுவும் கலைமுரசு பழையபாணியிலேயே மாருக்கொண்டை உக்குவளையிலிருந்தே அதுவும் சிங்களப்பிரதேச முஸ்லிம்கள் அரைக்கொச்சைத் தமிழ் பேசுவோர் மத்தியில் புதுப்பாதை பொருத்தமா? புதுப்பாதை என்பதன் அர்த்தம் அமானுல்லா வாழ்க்கையிலும் மறுதாரம் தேடியதன் பிரதிபலிப்பே இந்தச் சிற்றேட்டிற்கு மூலதனமாகும். இதுவும் நாலைந்து இதழ் விரித்துக் குவிந்தது. பின்னர் 1990 இல் "பிறைக்கவசம்" என்ற பெயரில் சித்தன்குட்டி ஆலிம், மௌலவி, ஏ.எம்.அமானுல்லா தாடியும் தொப்பியுமாக வீட்டுக்கு வந்தார். 56இல் 17 வயதினராக அரும்பு மீசை மாணவராக அரைவிலைக்கு ஏடுகள் பழசுகள் விற்க வந்த அமானுல்லா 60ல் கலைமுரசுடன் வந்தவர் 70,80 களில் புதுப்பாதை காட்டிவந்தவர் இப்போது 90ல் பிறைக்கவசம், மார்க்கஞானச் சிற்றேட்டுடன் முதிர்ச்சி பெற்ற நண்பராக வந்தாலும் 60ல் கலைமுரசு இருந்த தோற்றப்பாடுகள்தான் நவீன பிரசுர வசதிக காலங்களிலும் அமானுல்லா மௌலவியிடம் கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமாதிரி புத்தக ரூபங்களில் என்னைப்போல் தேன்மதி, சமாதானம் மாதிரியாவது 30-40-50 பக்கங்களில் வெளியிட்டால் என்ன? எனக்கேட்டதற்கு "ஆ..........அதெல்லாம் நம்மட சனங்களுக்கு சரிப்பட்டுவராது. இரண்டு ரூபா தப்பினா ஐந்து ரூபா அதுவும் பலர் வயித்தப்பொத்திக்கி. கலைமுரசு 10 சதம் விற்ற காலத்திலேயே ஓசில வாங்கிப்பாத்திட்டுத் தாறவங்களும் இப்பவும் பழைய ஓசிப்புத்தியிலேதான் புதுப்பாதையும். இப்போ பிறைக்கவசமும் ஹி....ஹி......ஹி... இந்தச் சிற்றேடு சுமந்து அலையுறதைவிட பிச்சையெடுக்கிறதே கௌரவம் போலயும் தெரியுது". இசைவாணர் மச்சான் என்று கண்கள் கலங்கிப் பேசும் நேச நண்பரின் கூற்றிலும் 90 வீதம் சரியெனத்தான் பட்டது. ஏனெனில் 56ல் புகழிசைப்பா 4 பக்கம் 10 சதம், 60ல் முரசொலி இசை 12 பக்கம் 25 சதம், இசைவிருந்து 25 சதம் என்று நானும் சிற்றேடு வரிசைகளில் ஹார்மோனியம் வாசித்துப்பாடியும் சனங்கள் ஓசியிலே கலை இலக்கியத் தாகம் தணித்தனரே தவிர புத்திஜீவிகள், முற்போக்குவாதிகள், கவிஞர்கள், கலைச்சுடர்கள் என்று எம்.பி.களை அரசினர்களை அன்னக்காவடி தூக்கிப் போலிப் பட்டயம் பெற்றவர்களும்

வாசித்து தாரேன் என்று பல நூல்களைச் சுளைய மாறிக் கலாநிதியானவர்களும் இன்றும் ஓசியிலேயே சிந்தக்கின்றார்களெனின் என்போன்ற இலட்சியவான்களும் பிச்சையெடுக்கப்போவது அமானுல்லா கூறியதுபோல்....

**"தேன்மதி"**

1956இல் கையெழுத்துப் பிரதிகளாக ஆரம்பித்து நாலைந்து வெளியிட்டேன். 65ல் மருதமுனை இளம்பிறை அச்சகத்தில் 1000 பிரதி 24 பக்கம் 300ரூபா 1:8 அளவில் கலைஞர் M.Y.M மணாப் முகப் படத்துடன் பிரசுரித்தேன். 50 சதம் விலையினில் கலைமுரசு, புதுப்பாதை, பிறைக்கவசம் விற்க அலைந்து தியாகம் செய்து வாழ்ந்த அமானுல்லாவை விட 24 பக்க சஞ்சிகை "தேன்மதி" யை கொழும்பு, கண்டி, திருகோணமலை, யாழ்ப்பாணம் என்றெல்லாம் பஸ், ரயில் பிரயாணம் செய்து அலைந்த கால நினைவுகளும் பட்ட துன்பங்களும் எழுத்தில் அடங்கா.

1950-60-70 களில் எனக்கொரு வைராக்கியம் ஒரு இலக்கியவெறி. பாரதியார், கல்கி, அகிலன், ஜெயகாந்தன், தமிழ்வாணன், அண்ணாத்துரை, கருணாநிதி போல் நானும் எழுதி உலகப்புகழ் பெற வேண்டும். எனப் பேராசைப்பட்டுக்கொண்டிருந்தேன். எனது இலட்சிய வெறிகளுக்கு களமாகக் கிடைத்தது தமிழரசுக்கட்சி தேர்தல் மேடைகள்தான். கவிஞர் காசி ஆனந்தன், "சுதந்திரன்" வாரமலர் ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகம், கோவை மகேசன், செ.இராஜதுரை போன்றவர்கள் எனது கவிதை, சிறுகதை, கட்டுரைகளை மாதம், வாரம்

பிரசுரித்து ஆர்வமூட்டி வளர்த்தனர். தினகரன் பிரதம ஆசிரியர் 1960ல் லேக் ஹவுஸிற்கு வரச்செய்து ஆரத்தழுவி நீங்கள் கலைவாணரைப்போலவேதான் விடாமுயற்சி நாளைய உலகம் உங்களைப் புகழும் எழுதுங்கள் இசைவாணரே என்று பல நூறு கவிதை, கட்டுரை, சிறுகதைகளை பிரசுரித்தார்கள். க.கைலாசபதி, ஆர்.சிவகுருநாதன், ஐயாமார்கள் எனது சிற்றேடு, தேன்மதி, சஞ்சிகைகளையும் பிரபலமாக்கி விமர்சித்தனர். 1978ல் கவிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புமுகைதீன் அவர்களின் முகப்புடத்தையும் முழுஅளவில் 'தேன்மதி' இதழில் பிரசுரித்தேன். கல்முனை எழுத்தாளர் சங்கம் கொடிகட்டிப் பறந்த காலங்களில் 60-70 இருகுள் என்னை இழக்காரம் பேசிய கொத்தன், சசி, நு.்மான், வரதன் போன்றவர்களும் 80களில் வீடு தேடி வந்தும் பாராட்டினார்கள். இவர்கள் அடுத்துக்கெடுக்க வருகிறார்கள் என நான் சிறிதும் நினைக்கவில்லை.

1973இல் கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் சாகித்திய மண்டல விழா நடந்தது. சாண்டில்யன், மு.வரதராஜன், சேக்ஸ்பியர், டால்ஸ்டாய், கருணாநிதி, பாரதியார், பாரதிதாசன், தமிழ் வாணண், கே.ஏ.அப்பாஸ், அபுல்கலாம் மௌதூதி, பேராசிரியர் கா.அப்துல் கபூர், ஜெயகாந்தன், ஜானகிராமன், தீபம் மணிவண்ணன் போன்றவர்களின் நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகளை பெட்டிகளில் அடுக்கி கார்களில் ஏற்றிப்போனார்கள். மறுநாள் எஸ்.பொன்னுத்துரை, எம்.ஏ.நுஃமான், பித்தன்ஸா, டாக்டர் கைலாசபதி, டொமினிக் ஜீவா, இளங்கீரன் போன்றவர்களும் என்னைப் பேசவைத்தும் விழாக்கண்காட்சிக்கு நூல்களைப் பார்வையிட்டும், மருதூர்வாணனின் கலை இலக்கியச் சேவைகளைப் வித்ந்தும் புகழ்பாடினார்கள். மூன்று தினம் விழா சாஹித்திய மண்டலம் பரிசளிப்புக்கள் முடியுமுன் தருவதாக வாங்கிச் சென்று 50 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க நூல்களில் எதனையுமே திரும்பத் தரவில்லை. அடுத்த தினங்களில் கவிஞர் நீலாவணன் அவர்களின் வீடு சென்றேன். "புத்தகங்களை பாரோ கைமாறிவிட்டனராம். சற்றுப் பொறுங்கோ வாணன் தம்பி ஒரு வாரத்துக்குள் நு.்மான், கொத்தனைக் கேட்டு வாங்கித்தருவேன்" என்றார் நீலாவணன். ஐயகோ இதுவரை கிடைக்கவில்லை.

இவர்களெல்லாம் இலக்கியவாதிகளா? மோசடிப் பேர்வழிகளா? என்னை அடுத்துக் கெடுத்து புத்தகசாலையை பகல் கொள்ளையடித்து மூடிவிடச் செய்தவர்களே இப்போ கலாநிதிகள், கலா பூசனங்கள் இவர்கள்தான் முற்போக்கு இலக்கிய மேதைகளா?

**பாடும் மீன்**

1963இல் கல்முனை எழுத்தாளர் சங்க காலாண்டிதழாக கவிஞர் நீலாவணனை பிரதம ஆசிரியராக வைத்து வண்ணார் வெழுப்பது போல் முகப்பும் முழு 50 பக்கம் 1:8 அளவில் 2 ரூபா விலையில் வெளியிட்டனர். நான் முந்தி நீ முந்தி எனப்போட்டி போட்டு அவர்களே எழுதிக்கொண்டிருந்தனர். நீலாவணன் என்னை மிக நேசிப்பவர். எனினும் கல்முனை எழுத்தாளர் சங்கத்தினர் எனது படைப்பை பாடுமீன் சஞ்சிகையில் போட மறுத்தனர். அதற்கு சகுனிகள் பலருளர். அக்காலங்களில் தேன்மதி வெளியிட்டமை, தினகரன் வாரமஞ்சரியில் சுதந்திரன், ராதா, கதம்பம், விவேகி என்னும் பிரபல ஏடுகளிலும் எனது படைப்புகள் வெளிவந்தமையும் இவர்களுக்கு நெஞ்சுகளில் நஞ்சுகள் கலந்த வேக்காடுகள். காலவினை நீலாவணன் மனம் சோர்ந்தது. சம்பளத்தில் மனைவியின் சம்பளத்தில் பாடுமீன் சஞ்சிகைக்கு எருவூட்டாமல் புதுவீடு கட்டுவதிலேயே கண்ணாயிருந்தார்கள். 1975இல் நீலாவணன் புது வீடு வேளாண்மை வெட்டிடுக் குடிபுகுந்து சில வருடத்துக்குள் தை பிறக்கும் முதல் நாள் மாரடைப்பால் காலமானார். நீலாவணனோடு பாடும் மீனும் செத்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிஞன்**

1976களில் நீலாவணன் நினைவுக்கவிதையுடன் பலரின் கவிதைகளை 40 பக்கம் 1:8அளவில் பிரசுரித்தது. எம்.ஏ.நு·.மான் பிரதம ஆசிரியராகி 5, 10 ரூபா விலையில் 5,6 இதழ்களோடு பல்கலைக்கழகம் புகுந்ததும் கவிஞன் கூக்குரல்களும் அடங்கிவிட்டது. பலபேரின் சந்தா பல ஆயிரங்களை நு·மான் ஏப்பம் விட்டுப்போனாராம் என்று பலபேர் சிலேடையாகச் சொன்னார்கள்.

**காலரதம**

1976-80களில சண்முகம் சிவலிங்கம், உமாவரதராஜன் கூட்டுழைப்பில் 50 பக்கம் 1:8 அளவில் பாடுமீன் பாணியில் வெளியிட்டனர். சக பிரபலமானவர்களை நையாண்டி செய்வதையே ஆர்வமாகக் கொண்டிருந்தனர். உதாரணமாக என்னையும், அ.ச.அப்துஸ்ஸமது அவர்களையும் நையாண்டியாகவே எழுதியிருந்தனர்.

1970இல் எனது "பெருநாள் பரிசு" குறுநாவல் அமேரிக்கா வொசிங்டன் நூலகம் மொழிபெயர்ததுப் பாராட்டிதழும் பணமும் அனுப்பியது. "முதலிரவு" சிறுகதைத் தொகுதிக்கு அணிந்துரை எழுதிய அ.ஸ. பின்னர், 78ல் இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு மலர்களில் ஒன்று "பிறைப்பூக்கள்" சிறுகதைகள் ஆசிரியர்களைப் பற்றி அப்துல் சமது அவர்கள் வியந்து எழுதிய எனது "முதலிரவு" சிறுகதைத் தொகுதியைப் பற்றி இலங்கையில் தனிநபர் முதலாவது தொகுதி மருதூர்வாணரின் சிறுகதைகள் மிகவும் சுவையான மண்வாசனை கமழ்கின்றன.

இந்தியத் தமிழ் நாட்டில் சிறுகதை மன்னர்கள் என்று புகழ் கொடிகட்டிப்பறக்கும் ஜெயகாந்தன், ஜானகிராமன் போன்றவர்களின் மண்வாசனைக் கதைகளை விட மருதூர் வாணனின் சிறுகதைகள் மிகமேன்மை வாய்ந்தன. குறிப்பாக பிறைப்பூக்கள் தொகுதியின் 27 சிறுகதைகளில் ஒன்று மருதூர்வாணரின் "கலிமத்து நாச்சி"யை ஜெயக்காந்தன்

ஜானகிராமன் வாசித்தால் யாருடைய மண்வாசனை சுவை மிக்கனவாக இருக்கின்றன என்பதை அவர்களே தீர்மானிக்க முடியும். என மேலும் பல காத்திரமான புகழாரங்களை அறிஞர் அப்துஸ்ஸமது விதந்துரைத்து எழுதியுள்ளதை "காலரதம்" குழுவினர் குடுவித்தலை பனங்காய்ப் பாரம் தாங்குமா? யாரிந்த மருதூர்வீணர் அப்துஸ் ஸமதுக்கு டி, சிக்கரட் செப்புக் கொடுத்து காக்காபிடித்து எழுதவைத்தாரன்றோ.. என்றும் நக்கலடித்துள்ளனர்.

**வியூகம்**

80 - 90களில் சசி, வரதன், நு·மான், சோலைக்கிளி, சடாச்சரன் இதிலும் என்னனைப்பற்றி சரக் சரக் சைக்கிள் வண்டி, கால்மிதிக்கவும் பெலமில்லை, கெண்டிலில் கிழிஞ்ச புத்தகப்பை, தோழிலே சாயம் போன சால்வை, இலக்கியப்பயணமா? கோழிமுட்டைக் கவிஞரைத்தேடியோ..... பீ நாறும் வாயூறித்தனமாக இன்னும் கருபண்டா கோயிலுண்டியலைக் கருவறுத்து கறுப்புச்சாமி ஐயர் வானோசை கத்துதாம். அண்டங் காகம் யோகர், சாமி வேசம் போடுகிறான் டா என்றெல்லாம் வீம்பிசை பாடியவர்கள் எல்லாம் பிற்காலங்களில் எம்மைக் கண்டு வெட்கித் தலைகுனிந்து மனங் குளறித்திரிவதைக் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வானோசை**

க.ஐ.யோகராஜா அவர்கள் வானொலி ரசிகர்களுக்காக புதுமையாக அப்துல் ஹமீது ராஜேஸ்வரி சண்முகம், சர்வானந்தா, மதியழகன் போன்றோர்களை பரபரப்பாக எழுதி வெளியிட்டார். பின்னர் இந்துமதி, அர்ச்சனா என்று இன்னும் சிவஸ்ரீ கணபதி ஐயர் யோகராஜா ஐயரானதும் மாத இதழாகவும் வெளிட்டுவருகிறார்.

**அறிவாலை அல்-அரப்**

60-70களில் கல்முனை சாய்ந்தமருதுகளில் சிலரால் வெளியிடப்பட்ட கலை முரசுப்பாணி சிற்றேடுகள் வந்த வேகத்தில் நின்று போயின.

**பொய்கை**

70-75களில் ஏ.எம்.அபூபக்கர் அவர்களால் 1:8அளவு 40 பக்கங்களில் ஓரளவு இலக்கியத்தரமாக வெளியிட்டு வந்தார். டாக்டர் படிப்புக்காக தலைநகர் சென்றதும் பொய்கை சில இதழ்களுடன் நின்றது. இன்று ஏராளமான நூல்களை எழுதி வெளியிட்டுக் கொண்டிருக்கிறார் டாக்டர் அபூபக்கர் அவர்கள்.

**சமத்துவம்**

1976ல் முஸ்லிம் ஐக்கிய முன்னனி தலைவர் பஸீல் ஏ.மஜீட் நிந்தவூர், சட்டத்தரணி எம்.எச்.எம்.அஸ்ரப் கல்முனை அவர்களிருவரும் ஆசிரியராக அரசியலில் பிரவேசிக்கவும் சட்டத்தரணி ஏ.எம்.சம்சுதீன் அவர்களை தமிழர் கூட்டணியின் கால்களைப் பிடித்து M.P ஆக்கிடவும் முனைந்து மாதாமாதம் வெளியிட்டனர். நானும் சில கட்டுரை எழுதினேன். பின்னர் அன்புமுகையதின் ஆசிரியரானார். சம்சுதீன் தேர்தலில் தோற்றதும் சமத்துவம் சிறிமாவோ பிரதமரை வரவேற்று கல்முனை நகரில் ஓய்வுற்றது.

**முஸ்லிம் காங்கிரஸ்**

1985இல் இதுவும் சட்டத்தரணி எம.எச்.எம். அஸ்ரப்பை எம்.பி. ஆக்கிடவே நானும் ஏணியாகி தேவை முடிந்ததும் இனக்கலவரத்திற்கு துணை போகாமல் தடுத்த காரணத்தால் அவர்கள் என்னை ஓரம் கட்டினர்.

சுயநலம், அரசியல் பேதமையால் குறுக்கு வழியில் தமிழர் முஸ்லிம் மோதல்களை ஏற்படுத்தினர். ஆயிரக்கணக்கில் உயிர்களும் உடமைகளும் பழிக்குப் பழியாகின. பல ஆபத்துக்களிலிருந்து முஸ்லிம் காங்கிரஸினரைக் காப்பாற்றினேன். சமாதான மகாநாடுகளில் கூறிவந்தேன். குறுக்கு வழியில் அரசியலில் இலாபமீட்டுவதால் முடிவுகள் என்னையே பயங்கரவாதி என்று ஓரங்கட்டினார்கள். முடிவுகள் நான் இன்று "எல்லா இனங்களும் இணைந்தன்பு கொள்வோம்" என்றே சமாதானம் வளர்த்து வருகின்றேன். முஸ்லிம் காங்கிரஸ் சிற்றேடும் ஆசிரியர்களும் இப்போது எங்கே? இனவாத வெறியர்களே நாளைய நிலை இதுதான்.

**எரிமலை**

1965ல் அக்கரைப்பற்றில் வெளிவந்து எரிந்து விட்டது.

**களம்**

அக்கரைப்பற்று சிவயோகமலர் அவர்கள் 70-80-90 களில் பணத்தைக் கரைத்து காத்திரமாகவே வெளியிட்டனர். களமும் கலைகொல்லிகளுக்குப் பலியாகிவிட்டது. பிறரை வறையாண்டி செய்ததும், கொப்பியடித்த விடயங்களாலும் காத்திரத்தைக் களங்கப்படுத்தியதால் அது நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதுக்குரல்**

76இல் கவிஞர் ஒலுவில் அமுதன் இவர்களால் கலைமுரசுப் பாணியில் சில இதழ்கள் வெளிவந்தது. எனது அரவணைப்பிலும் அமுதன் வளர்ந்தார். வங்கிவேலை லிகிதரானதும் நாலைந்து இதழ்களில் நின்றது. எனினும் இன்றுவரை பல தொகுதிகளை வெளியிட்டும் சமாதானம் வளர்ச்சிக்கும் உரமூட்டி வரும் ஒலுவில் அமுதன் பிரபல இலக்கிய வாதியாகிக்கொண்டிருக்கின்றார். பல இலக்கியவாதிகளாலும் புகழப்பட்டு வருகிறார். வாழ்க நீடுழி.

**தடாகம்**

1990களில் சாய்ந்தமருது கலைமகள் ஹிதாயா அவர்களினால் தொடர்ந்தும் வெளிவந்துகொண்டிருக்கும் காலாண்டிதழ் 1:8 அளவில் அழகிய பதிப்புக்களாகும்.

**சரம்**

1978இல் இரண்டு இதழ்கள் என்னை மேற்பார்வையாளராக்கிப் பதிபித்து இதன் இணையாசிரியர்களான றகுமான் ஏ ஜப்பார் பீ.ஏ., அறநிலா பீ.ஏ., சத்தார் எம் பிர்தெளஸ் பீ.ஏ., அ.மு.அப்துல் ஜபார் பி.எஸ்.சியாகி உத்தியோகம் கிடைத்ததும் சரம் நின்றாலும் ஏராளமாக இன்றும் இலக்கிய உலகில் எழுதிக்கொண்டிருக்கின்றனர். இவர்களில் றகுமான் ஏ ஜப்பார் பிரபலமாகிக் கொண்டிருக்கின்றார்.

**வெண்ணிலா**

1980இல் எஸ்.ஏ.கப்பார் என்னையும் துணையாசிரியராக்கி வெளியிட்டு சில இதழ்களுடன் நின்றுவிட்டது.

**முனைப்பு**

90இல் இதன் ஆசிரியர் மருதூர்பாரி முனைப்பு அச்சகம் நிறுவி 1:4 அளவில் எட்டு இதழ்களை காத்திரமாக வெளியிட்டும் நின்றதற்கு வழிநடாத்தத் துணிவின்மையும் பொருள் நட்டமுமே காரணம் என்று இதன் இணைப்பாசிரியர் றகுமான் ஏ ஜப்பார் கூறினார்.

**சமாதானம்**

1988இல் ஆரம்பித்து ஒன்பதாவது இதழும் அச்சாகிக் கொண்டிருக்கிறது. அரசியல்வாதிக்ள் வரை பாராளுமன்றத்திலும் ஞாபகப்படுத்தப்பட்டு வரும் சமாதானம் புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன், ஈழமேகம், ஜே.எம்.எம்.அப்துல்காதிர், பாவலர் பஸீல் காரியப்பர், அக்கரை மாணிக்கம், மணிக்கவிராயர், ஒலுவில் ஜலால்தீன், க.ஐ.யோகராஜா ஐயர், மருதூர் ஏ மஜீத், இலக்கியமணி செ.குணரெத்தினம், கலாபூசணம் எஸ் முத்துமீரான், அன்புமணி, ஜீவாஜீவரெத்தினம், கலாபூசணம் கரீம், ஹாஜி உஸ்மான்சாஹிப், எம்.வை.எம்.மீயாத், பொன்நவநீதன், குணரெத்தினம் வாசுகி, கவிஞர் பரதன் கந்தசாமி, ஈழத்துப் பூராடனார், மீராஉம்மா, கவியரசு நீலாவணன், தேவராஜ், ஒலுவில் அமுதன் போன்ற உலகப் புகழ் பெற்று வரும் பிரபல எழுத்தாளர்களின் முகப்படங்களை சமாதானம் முகப்புக்களில் பொலிவுறுகின்றதெனில் அம்பாரை மாவட்ட சிற்றேடுகளின் தோற்றங்களும் அவைகளின் வளர்ச்சிகளுக்கும் சமாதானம் சிற்றேடு ஆசிரியரின் விடாமுயற்சியும் இலட்சியங்களுமே கட்டியங்கூறும். எனது ஆரம்பகால 50களில் இருந்து பலநூறு இளசிகளை ஆர்வமூட்டி வளர்த்து வருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணிலை வாதம் பேசிவரும் பேடிகளே பதில் கூறுங்களே.......



மாவலி



அபலைகளாய் அலைந்தவர்களை ஆதரித்தான் ஆறுமுகம்!
அதிலொருத்தி விட்டவன் பெண்டி ஏழைபாவம் மணம்முடித்தே.
சுபுமுகுர்த்தம் பார்க்காமல் சல்லி வீடும் வாங்காமலே.
சுறுசுறுப்பாய் உழைத்தவளை சுகம் அனைத்தும் கொடுத்தாங்கே.
அபகீர்த்தியும் விபச்சாரியாம் அத்தனையும் வசை பேசியோர்.
ஆறுமுகம் மனையானபின் அனைவருமே அதிசயித்தே.
சபலமெலாம் இனி அவளுக்கில்லையடா சுகத்தினிலே.
சறுக்கினோரும் பிற்காலம் சந்ததி நல் பிறந்தம்மோ

இப்படித்தான் இனங்கண்டார் அன்னவளை அயலவரே.
இலைமறைவில் இன்னுமவள் விபச்சாரிதான் என்பதனை.
எப்படித்தான் பத்தினிபோல் நடித்தாலுமே அறுமுகம்
எத்தர்களை கையியும் களவும் பலர் பிடித்தவனாம்.
தம்பிலிகள் தந்தபிள்ளை தகப்பன்கள் போலிருக்குமாமே
தணிகாசலம் கஞ்சாவாத்தி தலையசைத்து நடப்பதுபோல்
செப்புங் குரல் அவன் தொனிதான் செய்கைகளும் தாள் புரட்டிச்
செய்வதெல்லாம் படிப்பு வாசிப்பெல்லாம் தணிகாசலம் போலே

தட்டியவன் கேட்டு உதைத்தால் தம்பி சுற்றம் கூட்டிவந்தே
தண்டா முண்டா போர்க்களந்தான் தரணி கேலி பேசினடா,
பட்டது போதும் இவளாலே பட்டினத்தாரும் பாடினாற்போல்
பக்கத்தூரே பறந்து போனால் பத்தினி போலவே தேடிவாறாளாமே
"விட்டவன் பெண்டியா? ஏனவன் விட்டவன்? அவள்
விபச்சாரம் செய்வதை விழிகளால் கண்டவனாமே"
கெட்டவள்களும் வாழ்ந்திடக் கை கொடுத்து மறு தாரமாக்கினால்
கெட்ட விபச்சாரக் கள்ளி அவள் விடவில்லை கீழ்சாதியே

நாய்களின் வால்களை நிமிர்த்திட முனைந்தோரில்
நாதியாம் ஆறுமுகம் நாலைந்திற்கும் பதிவு பிள்ளைகளே
ஓய்வில்லா உழைப்பாளி ஓடோடியும் உழைத்தவனே
"ஓ இவள் புடவைக்கடை ஒந்தி வெள்ளையன் வீட்டினிலே
நாய் போல ராப்பகலாப் போகிறாள் வரும்போ சுமையுடன்
நாசுக்காய் பவுடர் மணம் நகையுடுப்பபும் ஆறுமுகம் பேயனே
சீய் இவள் பரம்பரைச் சீலங்கள் அயலவர் தூசிப்பே.
சீய் பெண்ணிலைவாதம் பேசிவரும் பேடிகளே பதில் கூறுங்களே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள் வேலிகளைக் கடந்து

## 01 சிங்களம் பேசினால் பௌத்தன் தமிழ் பேசினால் கொட்டிணா



காரைதீவுச் சந்திக்கும் பாலத்துக்குமிடையில் பஸ்நின்றது. அதிகாலை. ஆறுமணி. விடிந்தும் விடியாத பூபாளம் மழை. மாரி. மப்பு மந்தாரமான வேளை என்பதனால் பிரயாணிகளுக்கு பயமும் பீதியும் இராணுவமும். பொலிசும் பிரயாணிகளின் பொதிகளைச் சோதிப்பதையும் மடி அடிவயிறுவரை துலாவி ஆராய்வதையும் சதானந்த தேரோ அவதானித்தவாறு விரைரென வந்தார். ராணுவங்களும் பொலிசாரும் "புத்தஞ் சரணம் கச்சாமி - சாது. சாது. --- எனத் தேரோவின் கால்களில் விழுந்து கைகளை கூப்பி வணங்கிக் கொண்டிருந்தனர்.

"ஆ இதிங் எனக்கு தேவையில்லை எனத் தமிழில் பேசியவாறு சினப்புடன் முகங்கலங்கிப் பார்த்தவாறு ஒதுங்கிநின்றார் சதானந்தத் தேரோ அவர்கள்.

"சாது சாது .... ஆ ...... நாங்கள் புத்தங் சரணங்" தேரோ தமிழில் பேசியதும் தமிழ் தெரிந்த இராணுவக் கோப்ரல் பயந்து மரியாதைக்குரிய பாவனையில் தேரோவின் கால்களை விட்டு எழுந்து நின்று கேட்டார்.

"மனிசங் என்றால் தமிழங். முஸ்லிங். சிங்களவங் எல்லாரும் மனிசங்தாங். அது என்ன நீங்கலெல்லாம் பெண்களையும் அடிவயிறுவரையும் தடவிப்பார்க்கிறது. சினப்பாகத்தான் தேரோ பேசினார்.

"அதிங் தமிழ் கொட்டியா வெடி மருந்து குண்டு கடத்திக்கி" கோப்ரல் தயங்கி சலிப்பாக பயபக்தியுடன் கூறினார்.

"ஆ தமிழ் பேசினால் கொட்டியா சிங்களம் பேசினால் புத்தஆள் இதிங்தானே அரசியல்வாதி. பேரினவாத அரசாங்கங்களோ ஏமாற்று வேலைகள் அவங்களுக்கு நீங்கெல்லாம் பாதுகாப்பு நாங்கலெல்லாம் மனசசாதிங்க. இப்படியே ஆளையாள் குரோதம் பார்பதனால்தான் சாதாரண தமிழனும் புலியாக மாறி மாற நாடெல்லாம் சண்டை உயிர்ப்பலிகள் இனிமேல் இப்படி சனங்களை மடி மாரு அடிவயிறுவரை நிர்வாணமாக்கி சோதிக்கக்கூடாது" கூறியவாறு சதானந்தத் தேரோ சந்தியை நோக்கி நடந்து கொண்டிருந்தார்.

"ஆ.. இவரு தமிழங் கொட்டியா. புலிகளுக்கு சப்போட் தேரோ உம் உம். சரி சரி அவங்க புறகால போங்குவா" என உறுமியவாறு கோபரல் துப்பாக்கியைத் தோழில் மாட்டி ஒப்ஸூல் நடந்தார். அனைய பொலிஸ் ராணுவங்களும் முள்சாட்டமாக பயணிகளை சோதிக்காமல் நின்றனர் சதானந்தத் தேரோ சந்தி பேருந்நிலையுள்ள அரசங்கன்றினடியில் வட்டறவுண்மேசை மேல்புத்தபெருமான் கண்ணாடிப் பெட்டியினுள் நிஷ்டானமாக வீற்றிருப்பதைக் கண்டதும் கண்கள் கலங்கியவாறு முற்றத்தில் நின்று கைகளைக் கூப்பி மனமுருகினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புத்தஞ் சரணங் கச்சாமி சங்கஞ் சரணங் கச்சாமி : ஐயா மகாஞான சித்தார்த்த சீலரே உங்களின் மானுட நேசம் காருண்ய சீலங்களை மறந்து உங்களின் புனித மார்க்க சீலங்களை ஒதுக்கிவிட்டு தேரோக்களும் பிக்குமாரும் அரசபோகங்களுக்கு ஆசைப்பட்டு நாடெல்லாம் பெரும்பாலானோர் அரசியல் பேரினவாதிகளின் பின்னால் தமிழர் முஸ்லிம்களை ஏனைய மத மக்களையும் அடிமைப்படுத்தி அவர்களின் நிலங்கள் பொருள் ஆடு,மாடு, சகல வளங்களையும் சுவீகரித்து அன்பு,அறம், கருணை மானுட நேசம் மறந்து மனம் போனபடி பேராசையில் மூழ்கிக் கொண்டிருக்கின்றனரோ ஐயா மகா ஞானப் போதிமாதவனே.. நீங்கள் உயிரோடிருந்தால் இத்தனை கொடூரங்களையும் பார்த்துக்கொண்டிருப்பீர்களா உரத்த தொனியில் புத்தரைப் பார்த்துச் சதானந்ததேரோ, கூறிப் புலம்பிக் குலுங்கி அழுது கொண்டிருப்பதை ராணுவங்களும் பெரியாரும் அருகருகே நின்று மாய்மாலமாக அழுத வண்ணம் நின்றனர்.

பஸ்ஸில் ஏறக்காத்துக் கொண்டு நின்ற பயணிகளும், தேரோவின் புலம்பல்களைக் கேட்டுப் பார்த்துப் பீதியுடன் கண்களைக் கரங்களால் கசக்கியும், முந்தானை துவாய் கைலேஞ்சிகளாலும் முகங்களைத் துடைத்துப் பரிதாபமாக சதானந்தத் தேரோவைப் பார்த்து மனங்கனிந்து கொண்டு நின்றனர்.

"மஞ்சுளா..... வாடிமகளே.... பஸ்வருது ......... ஏறுவம்.....

"இல்லம்மா....... பக்கத்துக் கண்ணகயம்மன் ரோட்டிலானே நம்ம வீடிருக்கு நடந்தே போவோம். இந்த தேரோ.... நம்மதெருவுக்குத்தானே போறாரு

"நம்ம... கண்ணகயம்மன் தெருவில ...... இவருக்கு...."

"உஹூம்.....அதோ.....தேரோ.......போறாரு சனங்களும் தொடர்ந்து போகுதுகள்........ நாமளும் யாரைப் பாக்கப்போறாரு.... என்னதான் செய்கிறாருன்டு ...... பாத்திற்றுதான் வீட்டே போவோம் அம்மா...."

"ச்சேய் ........... இவரத் தொடர்ந்திட நமக்கென்ன வேலை வெட்டி இல்லையா? நீயும், பாடசாலைக்குப் போகனுமில்லையா...... குளிக்க பசியாற நேரம் காணாது உடன் வா கெதியா......"

தாயும் மகளும் தடைமுகாமுக் கெதிராகப் பயணிகளுடன் நடந்து கொண்டிருக்கின்றனர். என்ன ஆச்சரியம் தடைமுகாமில் இப்போ யாரையும் பொலிஸ் ராணுவம் சோதிக்காமலே போகவிட்டு கைகளை அசைத்துக் கொண்டிருக்கின்றனர். இது இந்தச் சதானந்த தேரோவின் முன்னே சற்று நேரம் பேசிய அனுசாசனங்களின் பக்திப்பாடா கட்டுப்பாடா வெறும் சமயப் பாசாங்கு நடிப்புகளா?

**02. தமிழ் பேசும் இனங்களை நேசித்து வாழும் தேரோ**

மஞ்சுளா ரீச்சர் அம்மாளுடன் வீட்டுக்குச் சென்றாள். கையிலிருந்த பையை வறாந்தா மூலையில் வைத்துவிட்டு, லேடிச்சைக்கிளை எடுத்து ஏறி விபுலாந்த தெருவுக்கு வந்தாள் தூரத்தே தேரோ போவதும் பொலிசார் இருவர் தொடர்வதும் தெரிந்தது. சைக்கிளில் ஏறியவர் பிள்ளையார் கோயில் வீதியினால் ஓடிக்கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தன்சிங்கள இன அரசுகளையும் பாதுகாவலர்களையும் கடுகடுப்பாகப் பேசினார். இப்போ யாரைத்தேடி? எங்கட பொடியங்கள் கண்டால் முன்னேயும் பல ஊர்மக்களே ; பிக்குமாரை கண்டதும் சுட்டிருக்கீனம் இவரை......? மஞ்சுளா பீதியுடன் சுற்றிவளைத்து விபுலானந்த மணிமண்டப உள்வழி வீதியினால் வந்தவளின் செவிகளில் மணிமண்டபத்துள் பாடும் குரல் துல்லியமாகக் கேட்டது தேரோ நடைதளர்ந்து மெல்லமெல்ல வந்து வேப்பு மரத்தின் கீழ் நின்று பாட்டை அவதானித்தார். மஞ்சுளாவும், சற்றுதூரம் நாவல் மரத்தில் பழம்பறிக்கும் சாக்கில் நின்று பாடலைக் கேட்டவாறு ஆ...... என்ற அத்தான் ஜெயசேனா பாடுகிறாங்க..... மனதுள் மஞ்சுளா ரீச்சர் கிரகித்துக் கொண்டு நாவல் பழங்களைப் பறித்தார்.

"......வாவா .................... சுவாமியே வாவா
விபுலானந்த சுவாமியே வாவா.....' வா

நீங்கள் பிறந்த பூமியைப் பாருங்களோ.....
நீசர்களின் கொடுரங்கள் காரைதீவினிலே......
நீண்ட காலங்களாக அடக்கு முறையினிலே......
நீங்கள் கைப்படக் கட்டிய கோயிலெங்கே.....

வாவா ............ சுவாமியே ....... வாவா
விபுலானந்த சுவாமியே வாவா..... வா

பக்கத்து மாளிகைக் கர்ட்டவர் முஸ்லீம்களே
பள்ளிவாசலும் கட்டினார். கோபிலின் தூரத்திலே
திக்கெலாம் பலவூரின் தெருவெலாம் பயணிகளே
தின்றுபசி யாறியும் தொழுதும் வணங்குவார்களே!
தமிழரும் முஸ்லிமும் இருகண்களைப் போலவே
திக்கெல்லாம் தாய்மொழி தமிழ்பேசி வாழ்ந்த காலமே
பலநூறு ஆண்டுகள் பரம்பரை உறவுகளாகும்மே.....
பாவிகளின் ஆட்சிகளில் பள்ளியும் கோயிலும் அழித்தனரே!

வாவா ........... சுவாமியே வாவா
வரலாற்றுக் கொடுரங்களைப் பார்க்கவா
விபுலானந்த சுவாமியே பார்க்கவா!

நூற்றுக்கதிகம்மேல் நால்வகைக் கடைகளே!
நூற்றாயிரம் தமிழ் முஸ்லிம் வாரலாற்றுக் கலைகளே
தோன்றச் செய்தும் தோழமையுறவுகளை வளர்த்தீர்களே
தேசத்தை ஆக்கிரமித்த சிங்களாட்சிப் படைகளிங்கே..
கல்லோயாப் போர்வையில் வந்தவர் யாவையும் அழித்தனரே
கல்முனை நவுண்டபோட் தமிழர் முஸ்லிம்கள் மத்தியிலே
கச்சாமி புத்தர்சிலை கால்மண்டபமும் வைத்தார்களே
அனைத்தும் இராணுவர் ஆதிக்கம் காவலரணிலே
அடிக்கடி தமிழர் முஸ்லிம்களைப் பகைப்புலமாக்குகிறார்களே!
வாவா...... சுவாமியே வாவா
விபுலானந்த சுவாமியே வாவா
நீசர்களின் கொடுரங்களைப் பார்க்கத்தான் வாருங்களே..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவர் சேர்ந்து பாடும் ராகமாலிகை கீதத்தைச் செவிமடுத்துக் கொண்டு நின்ற சதானந்த தேரோ விக்கி, விம்மி அழுதுகொண்டிருப்பதை மஞ்சுளா கண்டு சைக்கிளை உருட்டியவாறு பக்கத்தில் வந்து ஐயா ....... நீங்கள் ஏன் கண்கலங்கி நிற்கின்றீர்கள்? யாரைப் பார்க்க வந்தீர்கள்? "சலிப்பான குரலில் கேட்டாள்

"ஆ.....அவரைத்தான் யாரோ இருவர் புலம்பிப்பாடினார்களே அந்த உத்தமரெத்தினம் முத்தமிழ் வித்தகர் விபுலானந்த சுவாமிகளைப் பார்க்கத்தான்....." சதானந்தத் தேரோ அவர்கள் கண்களை கைலேஞ்சியினால் ஒத்தியவாறு கவிதாரசனையுடன் பதிலளித்தார்.

" விபுலானந்த சுவாமிகள் என்றன் மூத்தபாட்டனார். அவர் காலமாகி நூற்றாண்டுக்குமேல் .... நீங்கள் பார்க்க வந்ததென்றால்.."

"ஆமாம் நங்கையே! விபுலானந்த அடிகளாரிடம் நானும் நாப்பதாம் ஆண்டுகளில் பேராதெனியா பல்கலைக்கழகத்திலே படித்த மாணவர். அவரிடம் குருதிஷ்டஞானப்பட்டமும் பெற்றவன். என்னைப்போல் பலநூறு சிங்கள மாணவர்களை தமிழ் ஆங்கிலம் பண்டிதம் புலமை பெறச் செய்தவர். இந்து கிறிஸ்து, இஸ்லாம், பௌத்தம் யாவிலும் பல்லாயிரம் மாண்வர்களை அறிஞர்களாக்கிய மகாஞானியவர். விபுலானந்த சுவாமிகளை இன்று உங்கள் முகங்களிலும் தமிழ் மலரக் காண்கின்றேன். " என்று தன்னைச் சூழ நிற்கும் ஆண்பெண் யாவரையும் அன்பு முகம் மலர்ந்து புன்னகை சிந்திடப் பார்த்து மகிழ்ந்தார். தேரோ

"இப்போது நீங்கள் எங்கே யாரைச் சந்திக்க வேண்டும் ஐயா?" மஞ்சுளா நாணயத்துடன் வினாவினாள்

"இப்போது விபுலானந்த சுவாமியாரைப் பற்றிப் பாடினார்களே அவர்கள் பெரும் புலவர்களாகத்தான் இருப்பார்கள் ஐம்பதாண்டுகட்குமுன் இந்தக் காரைதீவுக்கு விபுலானந்த சுவாமிகளைப் பார்க்க அடிக்கடி வருவேன். அக்காலங்களில் காரைதீவுச் சந்தியில் பிள்ளையார் கோயிலும் முஸ்லிம் மசுதியும் மேற்குப் பக்கமாக இருந்தன. தமிழர். முஸ்லிம் கடை கல்வீடுகளும் நகரம்போல் பஜாராக இருந்தது. இப்போது அவைகளை அழித்துவிட்டு ராணுவங்களும், பொலிஸாரும் புத்தபகவானை விகாரையுள் வைத்துக் காவல் புரிவதையும் கண்டு மனம்கலங்கினேன். இப்போது விபுலானந்த சுவாமிகளை நினைத்து மனமுருகிப் பாடினார்களே... அவர்களிடம் நான் மன்னிப்புக்கேட்க வேண்டும். அரசினர் காட்டுமிராண்டிகளை ஏவி விட்டு இப்பிரதேசங்களை அழித்தொழித்து சிங்கள பௌத்தமயமாக்கி வருகின்றனர். "தேரோ கூறும் போது கடும் சினமாகவும் புலம்பினார்.

"வாங்கள் குருவே ...... ஐயா..... நீங்கள் மற்றப் பிக்குத் தேரோக்களைப்போல் காவியுடைக்குள்ளிருந்து வேஷம்போட வில்லை; அவர்கள் இப்போது பாடியவர்கள் இருவரும் தெரிந்தவர்கள். ஒருவர் எனது மனதைக் கவர்ந்தவர். ஜெயசேனா... நல்ல குரல்வளம் மிக்கபாடகர் மற்றவர் எனக்கும் குருவானவர் பாரதிவாணர் பெரும்புலவர் "எனக்கூறிக்கூறி சைக்கிலை உருட்டியவாறு தார்வீதியினால் விபுலானந்த மணிமண்டப வாயிலுக்கு மஞ்சுளா ரீச்சர் நடந்தாள் சதானந்ததேரோ தொடர்தார். மேலும் சிலரும் தொடர்ந்து மண்டபத்துள் சென்றுகொண்டிருந்தனர். அதிசயப் பெண்மஞ்சுளாவையும்; பிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரையும் கண்டவுடன் ஆச்சரியப்பட்டவாறு புன்முறுவல் பூத்து விடுப்பாகப் பார்த்தான் ஜெயசேனா. மஞ்சுளாரீச்சர் வந்த விடயங்களைச் சற்று மறந்தநிலையில்; சந்தனப் பொட்டும் மல்லிகைமாலையும் கழுத்துமாக கன்னபிரானை சிலாகிப்பதுபோல ஜெயசேனாவைப் பார்த்து மனதுள் ஆலிங்கனமாகக் காதலித்து நெருங்கி அவனின் கைகளைப் பற்றி முத்தமிட்டாள் "என்ற மச்.........சோ ........" எனமகிழ்ந்து சலிப்புற்றாள்.

"ச்சே.... இதென்ன மஞ்சு.... ஐயா பெரியவர் எங்களைப் பார்க்கிறார் வினோதமாக" என்று ஜெயசனோ இரக்கமாக குழைந்து பேசும்போதே கரகரப்பிரியா ராகம் போலினித்தது. தலையை நிமிர்த்து திரும்பினார்.

"ஆ இலங்கதான் சற்று முன்னே விபுலானந்த சுவாமிகளை நினைத்து மனமுருகிப் பாடியவர்கள் எனது மச்சான் முறையானவர். பெயர் நான் இப்போ கூற நாவு" என நாணிக் கோணி மஞ்சுளா ஒதுங்கி நின்று குறு நகைத்து நோக்கினாள்.

"ஐயோ பிக்குவே குருவானரே தமிழர்களும் சிங்களவர்களும் போர்க்களத்தில் இரத்த ஆறுகளில் தத்தளித்து ஆளையாள் வெறிகொண்ட கொடூரக் கொலைகளும் பழிக்குப் பழியும் தீர்த்து வரகின்ற இந்த மரணாவஸ்த்தை காலத்தில்."

"நான் துணிந்துதான் ராணுவம் பொலிஸார் தடுக்க தடுக்க எனது குருநாதர் விபுலானந்த அடிகளைப்பார்க்க அவரின் பிறந்தகத்துக்கு வருகிறேன்" தேரோ தேனிலுமினிய தமிழ் பேசியதும் ஜெயசேனோ ஆச்சரியத்தில் மூழ்கிப்போனார்.

03. தேரோ கூறிய வரலாற்று உண்மைகள்..

பூச்சரங்கள் கொண்டைகளில் பொட்டும் விபுதியும் திலகமிட்ட பெண்களும் ஆண்களும். மொக்காடும் பர்தாக்களும் துருக்கித் தொப்பி ஜின்னாத்தொப்பி அணிந்தவர்களும் விபுலானந்த மணிமண்டபத்துள் குழுமிய வண்ணமிருந்தனர். தேரோவின் கண்ணோட்டத்தில் மகிழ்ச்சிப் பெருக்குடன் வியூகித்துக்கொண்டு மஞ்சுளா ஜெயசேனா இருவரையும் பார்த்தார்.

"ஐயோ. எங்களைப் பார்த்து ஏதோ யோசிக்கிறீர்கள்"

"தேரோ ஐயா எங்களை எதிர்பாராமல் விபலானந்த சுவாமியின் மணிமண்டபத்தில் கண்டதும். ஏதோ யோசிக்கிறீர்கள். என்று மஞ்சுளா ரீச்சரும் உங்களை கேட்கிறா போல! உங்களுக்கு என்ன கற்பனை தோன்றுகிறது ஐயா!"

"இப்போ நாடெல்லாம் சிங்கள தமிழர் சண்டைகள் முஸ்லிம்களும் தமிழரும் சச்சரவுகள் இங்கே பார்த்தால் சமாதானம் சகவாழ்வு ஏதோ நடக்கின்றன."

"தேரோ ஐயாவின் கண்ணோட்டம் சரியான கருத்துத்தான். நீங்களும் மற்ற பிக்குமார் போலில்லை. நன்றாக தெமதுரத் தமிழ் பேசுகின்றீர்கள். உங்கள் பெயரென்ன ஐயா?"

"...எங்கப்பா ஆனந்த திஸ்ஸ. என்ற பெயர் சதானந்த திஸ்ஸ அம்மா ரம்மெனிக்கா. அப்பா நாயக்க பரம்பரை மேல்சாதி பாகுபாட்டுக்காரர். அம்மா மீனவப்பரம்பரை. அப்பா சாதிபேதம் பிடிக்காதவர். அம்மா அழகிலே முடித்து நாலு பெண் ஒரு ஆண் என்னை பாலபிக்குவாக்கினார். அப்பா என்னை ஒரு இலட்சிய பிக்குவாக கல்வி மான்களிடம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல சாஸ்த்திரங்களும் படிக்கச் செய்வித்தார். 1940ம் ஆண்டு கண்டிப் பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமாமணிப் பட்டப் படிப்புக்குச் சென்றவேளை எங்கப்பாவின் தமிழ் நண்பரான விபுலாந்த தேவரிடம் அறிமுகமாக்கி அன்றிலிருந்து தமிழும் ஆங்கிலமும் படித்து பி.ஏ பட்டதாரியாக்கினார். பின்பு இந்தியாவுக்கு விபுலாந்தர் சென்றபின்- தேரோ சுருக்கமாக கூறினார் கேட்டுக்கொண்டு நின்றவர்கள் அதிசயப்பிறவியாக சதானந்தர் தேரோவைப் பார்த்து பூரிப்படைந்தனர்.

மஞ்சுளா ரீச்சர் காலையில் நடந்த நிகழ்ச்சிகளைய விபரித்தாள். "தேரோ ஐயாவுக்கு ராணுவப் பொலிசார் பயந்து பணிந்து ஒதுங்கி வழிவிட்டனர். ஐயா இந்த அகால மரணப் பயங்கரச் சூழலில் யாரைத்தேடி வருகிறார் எனப் பின்தொடர்ந்தேன். மச்சானின் பாட்டைக் கேட்டதும் உங்களை நேரில்" மஞ்சுளா ரீச்சர் விளக்கினார்.

"ஆ உங்கள் பெயரென்ன தம்பி பாடகர்" இங்கே நீங்கள் பாடிய வாவா சுவாமியே ... விபுலானந்த சுவாமியே என்ற பாடலை நான் வழியில் கேட்டதும். வெட்கித்தேன் விழிப்புற்றேன். அழுதேன். அசந்து போனேன். நல்ல கருத்தாளம் மிக்க பாட்டு இதை இற்றியது? இரண்டுபேர் பாடிய மாதிரிக் கேட்டது?"

"ஓ! என்பெயர் ஜெயசேனா இந்தப் பாடலை எழுதியவர் என் இதயங்கவர்ந்த பெரும்புலவர். அவரும் என்கூடவேதான்.."

" ஆ... ஆ... அவரிப்போ.." துடிதுடிப்பாய் கேட்டார் சதானந்ததேரோ அவர்கள்.

"இதோ சர்வாணி உடுப்பும் தொப்பியுமாக பக்கத்தில்" ஜெயசேனா சுட்டியதும் ஆச்சரியப் பெருமகிழ்வுடன்

ஆ நீங்களா? எங்கையோ கண்ட நினைப்பு? உங்கள் பெயரென்ன புலவர் பெருமானே? "நிறைகுடம் தளம்பா" தென்ற பொன் மொழிக்கேற்ப புன்னகை பூத்துக்குலுங்கும் முகத்துடன், கிளீன் சேவுடன் மொட்டான முகப்பொலிவு.

"ஆம் ஐயா சமதர்மத் தேரோ ஐயா இவர்களைப் பற்றி தமிழ் கூறும் கலை இலக்கிய ஏன் நமது நாட்டின் அரசியல்வாதிகளுக்கும் நன்கு சிலருக்கு பயங்கரவாதிப் புலவனென்று.."

" ஜெயசேனா மெய்யாகவா பெயரென்ன?"
" இசைவாணர் புரட்ச்சிக்கவி, ஈழபாரதி - மருதூர்வாணர்
" ஆ..ஆ என்பெருமானே போன வருடம் அம்பாரைக் கச்சேரிக்கு நெமிநேசன் 4.9.2000ம் திகதி வந்தவேளை சமாதானம் சஞ்சிகைகளும் தந்து என்னிடம் பேசியும் பாடியும் மகிழ்வித்த பாரதி வாணரா..? என் நேசங்கவர்ந்த நெஞ்சகரே.... மார்போடு அணைத்து மகிழ்ந்து துடிதுடியாக் கொஞ்சித் திக்குமுக்காடினார் சதானந்த தேரோ அவர்கள்.

ஐயா, உங்களிடம் சில சந்தேகங்களைக் கேட்டுத்தெரிய வேண்டும். சமாதானம் பாரதி தேரோவை மறுதலித்துக் கேட்டார். மஞ்சுளா ஜெயசேனா ஆச்சரியமாக நோக்கினார்கள்

"கேளுங்கள் தெரிந்த வற்றுறைக் தெளிவுறச்செய்கிறேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" முற்கால ஜனாதிபதி ஜெயவர்தனா அவர்கள் தமிழும், சிங்களமும் என்னிரு கண்களைப் போன்றவை. என தேர்தல் காலங்களில் வடக்கு, கிழக்கு, மலை நாட்டிலும் கூறினார்கள். இறுதியாக ஜனாதிபதியானதும் தமிழ் பேசும் முஸ்லிம் தமிழ், கிறிஸ்தவ சிறுபான்மை மக்களின் கலை, நிலம், மொழி, அரச கருமங்களை நிறைவேற்றாமல் மக்கள் கொதிப்படைந்து போராடிய காலம் போர் என்றால் போர், சமாதான மென்றால் சமாதானம் என்றார்.

முஸ்லிம்களும், தமிழர்களும் பயங்கரவாதிகளுக்கு ஒத்துழைப்பவர்கள் U.N.P யின் கொள்கையை விரும்பாதவர்கள், வெளியேறுங்கள் என்றார்.

"ஆ........ இதெல்லாம் ஜேயாரின் நரித்தந்திரம். பண்டா - செல்வா ஒப்பந்தம் 58ல் நிறைவேறி இருந்தால் இப்போ நாடெல்லாம் மனித பலிகள் போராட்டம் பயங்கரவாதம் நிகழாதே?"

'ஆமா ஐயா..... இதே ஜெயவர்தனா சாவதற்கு சில மாதங்களுக்கு முன் நான் ஒரு கனவு கண்டேன். 87இலே வடக்கு யாழ்ப்பாணம் வான மண்டலம் பிளந்து கீலம் கீலமாக வெடித்து, மின்னல்கள் அடிக்கும்போது இரத்த அருவிகள் ஓடின. பின்னர் கமுக்கட்டில் வி வடிவில் பொல்லுடனும் கையில் கூசாவும் பிக்குபோல் வழியில் வரக்கண்டு, ஐயா பழைய ஜனாதிபதியவர்களே! நடடெல்லாம் இரத்தக்கடலாக்கி விட்டு, நீங்கள் மட்டும் துறவிக் கோலம் - அதுவும் நிர்வாணக்கோலம்..." என்று சுள்ளாய்ப்பாய்க் கேட்டேன்.

ஆ...... புலவர் பெருமானே... என்னை மன்னியப்பா...... நானினி... அரசியலிலே விழவே மாட்டேன் என என் கால்களைக் கட்டிப் பிடித்தார். பக்கெனக் கண்விழித்தேன். மேலெல்லாம் பதறியது. வெளிச்சத்தில் நேரம் பார்த்தேன். இரா 3 மணி அடுத்தநாள் பலரிடம் சொன்னேன். சிலர் நம்பினார்கள் சிலர் நம்பவில்லை. உண்மையிலேயே அம்மாதமே ஜேயார் பிக்கு வேடத்தில் பன்சாலையுள் போதி மாதவன் முன்பு நிலத்தடையில் இருப்பதைப் பத்திரிகைகளிலும் பார்த்தேன்.

"......... எம்பெருமானே.... பாரதிவாணரே, சமாதானச் செம்மலே நீங்கள் கண்டது கனவில்லை. ஆத்துமார்த்த தத்துவச்சிந்தனைகளின் நிதர்சன தீர்க்கதரிசன வெளிப்பாடு இப்படியான கனவுகளும் நாட்டிலே நடக்கப்போகின்றன. என்பதை இறைவன் ஏவிய கனவுகள்தான் நானும் இம்மாதிரி கனவுகள் கண்டு சிலரிடம் சொல்லியுமிருக்கிறேன். என்னைப் பித்தம் பிடித்த பிக்கு என்றனர். உண்மையில் இலங்கை மணித்திருநாட்டின் புனிதமான அரசியலை அடுத்துக் கெடுத்துக் கொண்டிருப்பவர்களே பெரும்பாலான பிக்குமாரே தான். அவர்களை என்போன்றவர்களால் திருத்தவே முடியவில்லை வெட்கித்து வெயர்வைச் சுனைப்பு மேனிமுகத்தில் அரும்பத்தொடங்கின கையிலிருந்த சாதுக்களின் பனையோலை விசிறியினால் காற்றசைத்தார்.

"தேரோ ஐயாவுக்குக் கஷ்டமான சங்கடத்தைக் கேட்டு மனம் வருந்தச் செய்துவிட்டேன் மன்னியுங்கள் பெருமானே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊஹூம் .... நீங்கள் கேட்டது சரியான. உண்மைகள் நல்ல அறிவாளி நீங்கள் இறைவன்மேல் அல்லாஹ்வை நன்கு விசுவாசம் கொண்ட பக்திமான்களால்தான் அப்படியான தீர்க்கதரிசனமான கனவுகளைக் காண முடியும் மனிதர்களுக்கு நல்வழி உபதேசம் செய்தும் புனிதமாக வாழும் வழி வகைகளைக் காட்டுவதற்காகவே கடவுள் அல்லாஹ் நல்ல மனிதர்களைப் படைத்துள்ளான். ஏசு, புத்தர், முஹம்மது நபி, போன்ற மகான்களைப் படைத்து அவர்களின் மூலம் நன்நெறிகளைக் கல்வி மூலமும் ஊட்டி, ஒழுக்க சீலங்களை எவர் எவர் பய பக்தியுடன் நேரிய வழிகளில் பிசகாமல் வாழ்ந்து வழிகளை போதித்து நடந்து காட்டுவார்களே அவர்களுக்கு பின்னே நடக்கப் போவதை முன்னே கனவுகள் மூலம் வஹி மூலமும் கறாமத்து சிலாக்கின மூலமாகவும் தெரியப்படுத்துவான்.

"ஐயா, நீங்கள் மிகமிக ஆழ்ந்த சிந்தனையாளர் பல மத அனுஷ்தானங்களையும் ஐயம் திரிபறக் கற்றிருக்கிறீர்கள். இன்னும் ஒரு சந்தேகம் ...." எனத் தயங்கினார் பாரதிவாணர்.

"கேளுங்கள் ... சந்தேகப் பட்ட விடயங்களைத் தெரிந்தவர்கள் தெரியாவர்களுக்கு விளக்கப்படுத்துவதே நல்ல போதனையாகும். எனக்குத் தெரிந்தவற்றைத் தெளிவுபடுத்துவேன். தெரியாதவைகளை..... கட்டுக்கதையாகப் பொய்பேசி நம்பச் செய்தால் நானே நரகவாதியாக நேரலாம்.

"விகாரமாதேவி மசக்கையாக இருந்தவேளை தமிழரின் இரத்தத்தைச் சுவைத்துப் பார்க்க ஆசை என்றாளாம் உடனே துட்டகைமுனு அனுராதபுரத்துக்கு வந்து எல்லாளமன்னனின் படைவீரன் ஒருவனின் தலையைக் கழுத்தால் வெட்டி கொணர்ந்து கொடுத்து மசக்கையிலிருந்த விகாரமாதேவிக்குக் கொடுத்தாராம்...... இது...?

"ஐயகோ... இது மாபெரும் அபாண்டமான பொய் வரலாற்று கட்டுக்கதை இதுவும் சிங்கள இனவெறியர்களால் தமிழ் மன்னர்களுக்கு எதிராக எல்லாளன் மன்னருக்கு எதிராக பாமரச்சிங்கள மக்களையும் இனவெறியர்களால் தூண்டுவதற்காகவும், வரலாற்றைத் திரிவு படுத்திய கட்டுக்கதைகளில் ஒன்றுதான் இதற்குப் பல சான்றுகளை என்னால் கூற முடியும். எல்லாளன் பௌத்த பிக்குகளை தனது அரச ஆலோசகர்களாகவும் வைத்திருக்கிறார்

இன்னும் ஒரு சம்பவத்தைக் கூற முடியும். ஒரு நாள் தன்குதிரை வண்டி புத்தவிகாரைக் கட்டி முடி அருகில் அச்சாணி உரசியதாகவும் அதற்குத் தண்டனையாக தன் தேரோட்டியின் (குதிரை வண்டியின்) கை ஒன்றைத் துண்டிக்குமாறு ஆணையிட்டதாகவும் பிக்குமார், மன்னித்து அந்த விகாரையைத் திருத்தி அழகு செய்துதந்தால் போதும் எனவும் வரலாற்றிலுள்ளது. அப்படியான நல்லமனித அரசர்தானே எல்லாளன் எனிப்படி துட்டகைமுனு செய்ததாகப் பகைமை பாராட்டிப் பொய் வரலாற்றை எழுதினார்கள்? இதுமட்டுமில்லை மஹாவம்சம் சிங்களவல்லி சிங்கபாகு சிங்கத்துக்குப் பிறந்த மனிதர்கள் என்றும் இயற்கைக்கு முரணாகவும் வரலாற்றுக்களைத் திரிவுபடுத்தி மிருகக்குணமாகியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா கூறுவதை ஆராய்ந்து நோக்கினால் உங்களின் சிங்கள மகா வம்சத்தினரின் வரலாற்றுக்களை நீங்களே உண்மை என்று நம்பவில்லையாயின் நீங்கள் அவைகளை விளங்கப்படுத்தி ஏன் வரலாற்றுக்களைப் படைக்கவில்லை.?"

"ஆ.... பாரதி வாணர் பெருமான் கேட்பது சரியானவை நான் 1940ல் இருந்து சிங்களவர், தமிழர், அராபியர் இலங்கைக்கு வந்தேறு குடிகள் என்று ஒரு அய்வு நூலை எழுதியுள்ளளேன். அதை அச்சிட எங்கள் பிக்குமார் சபை அனுமதிக்கவே இல்லை இவை பற்றிக் கருத்தரங்குகளில் பிரஸ்தாபித்து வருகிறேன். சில பத்திரிகை நிருபர்களும் எழுதியுள்ளனர்."

ஆமா ஐயா நாங்களும் மகாவம்சம் ஒரு புரட்டான வரலாற்றுத் திரிபு நூல் என பல விமர்சகர்களும் எழுதியுள்ளனர்.

சரி... சரி... இப்போது நேரம் காலை 10.00 மணி காலைச் சிற்றுண்டி விபுலாந்த மணி மண்டபத்துள் தயார் நிலையில் வைத்துள்ளனர். வாங்கள் தேரோ சதானந்த ஐயா என ஜெயசேனா தேரோவின் வலக்கரத்தை இரு கைகளாலும் கூம்பிப் பிடித்து அழைத்து உள்ளே சென்று ஆசனத்தில் அமரச் செய்தான் மஞ்சுளா பரிமாறிக் கொண்டிருந்தாள்.

## 04. கல்முனையில் சிங்கள குடியேற்றங்கள்

நாட்டில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்களின் இன ஐக்கியங்களை வளர்த்துவரும் வாணர் சேனா சதானந்தா, மஞ்சுளா போன்றவர்களுக்கு சில ரகசியங்களை காலநிலை சூழ்நிலைக்கேற்ப செயற்படவேண்டியுள்ளன. கல்லோயா குடியேற்றத்திட்டம் முதலில் இஸ்மாயில் துரை காரியப்பர்,

மேர்சா போன்றவர்களாலும் 1950 திலிருந்து அரசியல் ஆரம்பகால இளைஞர்களால் சேனா முகாந்திரம் சில்வா எனும் நீர்ப்பாசன இஞ்சினியர்களால் காடுகளை அழிக்கு ஆலோசிக்கப்பட்ட செய்திகளாகும். அக்காலம் ஐக்கிய தேசியக்கட்சி முதலாவது பாராளுமன்றம் சேனநாயக்க பிரதமராகிய காலம் நீர்ப்பாசன இஞ்சினியர்களுக்கு காடு, மலைகளை கழித்து நிலந்திருத்தி பாய்ச்சல் வளத்தில் விவசாயம் கமம், தோட்டம் பெருக்குந் திட்டத்தை ஆலோசனை சபை நடாத்திய காலம்.

பண்டார நாயக்க அவர்கள் காணிநீர்ப்பாசன உள்ளூராட்சி மந்திரிக்கு சேனை முகாந்திரமாக சில்வா இருந்தகாலம் இஸ்மாயில் காரியப்பர் மேர்சா மூவரும் கரைவாகுப்பற்று கொண்டைவெட்டுவான் விவசாயச் சங்க மேற்பார்வை நீர்ப்பாசன அருவி நீரோடை ஆறுகளுக்கும் பொறுப்பாளராக இருந்த காலம்.

அமெரிக்க, பிரிட்டன், ஜேர்மனியர்களின் ராட்சத மெசின்உழவு இயந்திரங்களின் இலவச உதவிகளுடன் காடு, மலை, புதர்களை அழித்து தரைமட்டமாக்கி களனி வயல்களாக்கி வீடுகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் கச்சேரிகள் யாவிலும் 70 சதவீத முஸ்லிம், 20 சததமிழர், 10 சதவீத சிங்களவர் குடியேற்ற ஒப்பந்தங்கள் இருந்தவை.சிங்கள அரசுகளின் பார்வைகளுக்கு இருண்ட காடு மலைகள் வெட்டி வெளிசாக்கி நகரம் போலாகவும் ஏமாற்றுத்தனங்களும் தட்டிப்பறித்தலும்சண்டை சச்சரவுகளும் அடிக்கடி ஏட்படுத்தி பொலிஸார் ராணுவங்களை ஏவிவிட்டுஅடக்கி ஆண்ட நேரங்களில்தான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனனாயக்க மரணமானார் 1951இல். சர்ஜோன் கொத்தலாவலை காபந்தில் பிரதமாராகிவிட பண்டாரநாயக்காவுக்கு பிடிக்காமல் விலகி 1954ல் சுதந்திரக் கட்சி அமைத்து தான் பிரதமாராகும் தந்திரோபாயங்களில் கல்லோயாக் குடியேற்றத்திட்டத்தில் நாட்டிலுள்ள சேனைக்காட்டு மக்களை குடியேற்றுவேன், சிங்களமயமாக்குவேன், எனப் பிரசாரம் செய்து பிரதமராகுமளவுக்க உறுப்பினர்களை வென்றெடுத்தார். 21 M.P கள் ஐ.தே.கட்சியினர் சிங்கள வெகுசன லாபங்கருதி எதிர்த்துப் பேசாமல் வாளா விருந்தனர்.
தமிழர் முஸ்லிம் பாரம்பரிய காணி, வயல், முதுசொம்யாவையும் சிங்களவர் கொண்டைவெட்டுவான், அல்லை கந்தளாய்ப்பகுதிகளைக் கொள்ளையடித்தனர். தமிழரசுக் கட்சி செல்வநாயகம் தலைவர் முதல் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் பொன்னம்பலம். வரை பண்டாரநாயக்க அரசை எதிர்த்தனர். இந்த ஆரம்ப கால சிங்கள மயப் பேரினவாதிகளால் கொண்டைவெட்டுவான் பிரதேசம் அம்பாரைப் பிரதேசமாக சிங்களமயமாக்கியது வரலாறுண்மைகளாகும்.

40 சிங்கள வேடர்கள் தமனைப் பகுதியில் சேனை வெட்டி குரக்கன், சோளம், மரவள்ளி சாப்பிட்ட காலம் மாறி இன்று 1955 ல் 2 இலட்சம் சிங்களவர் மயமாகி. 1 இலட்சம் முஸ்லிம் 60 ஆயிரம தமிழர் வாழ்ந்த மக்கள் சிறுபான்மைக்குள்ளாகி அடக்கி ஒடுக்கப்பட்ட வேளைகளில் காரியப்பர், மேர்சா அரசு எம்.பி களாக மாறினர். எதர்மன்ன சிங்கம், தம்பிராசா போன்ற தமிழர்களும் எம்.பி யானதும் சிங்கள அரசுகளின் எச்சிலைகளப் பொறுக்கினர்.

இனிமேலும் கிழக்கிழங்கையில் திருகோணமலை, மட்டக்களப்பு நகரங்களைச் சிங்களக் குடியேற்றம் செய்து பெரும்பான்மையாக்க முயன்று வந்தனர். கல்முனை நகரில் நாற்பதைம்பது சிங்களவர் கண்டி காலி பச்சைப்பாக்கு மலைவெத்திலை வியாபாரத்திற்கு வந்தவர்களைப் பயன்படுத்தி காரியப்பர் மூலம் தரிசுநிலங்களில் சிங்களவர்களை நாளாந்தம் குடியேற்றி வந்தார்கள். பண்டாரநாயக்கா ஆட்சிகாலம் இதை நன்கு அறிந்தவர்களில் பாரதி வாணரும் ஜெயசேனாவும் வேல்முருகு ஏகாம்பரம் உதுமாலெப்பை அப்துல் ஹமீது ராஜா முகம்மது போன்ற இளைஞர்களும் தமிழரசுக்கட்சி தொண்டர்களாகும். இவர்கள் சிங்கள இரகசியக் குடியேற்றம் முளைவிட் காலங்களில்அவைகளைக் கிள்ளி எறிந்து போராடிவந்த இரகசியங்கள் அரசுகளுக்கே மர்மமாகி இருந்தது.

இன்று சதானந்த தேரோவின் புனிதப்பயணத்தில், இங்கு காரைதீவு விபுலானந்த மணிமண்டலக்கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கவேண்டியிருந்தது.

ஐயா, 1950 லிருந்து 2001ல் இதுவரைக்கும் நான் தமிழரசுக் கட்சித் தொண்டனாகவே வாழந்து கொண்டிருக்கிறேன்.

நானும் செல்வநாயகமும், ஐயாவுக்கிட்டப் பழகியதான் அவங்கள் கொழும்பு அல்பிரட் ஹவுஸிலே, அடிக்கடி சந்திப்பேன் சிங்களப் பிக்குமாரிலே நீங்கள் சதானந்தா தமிழிலே பற்றும் பாசமும் நீதி தவறாத நியாயம் பேசுகிறீங்கள் என்று பராட்டுவார்கள். நானும். கல்முனை வாடிவீட்டுக் கடற்கரை வீதி, தமிழரசுக்கட்சி மகாநாட்டிலையும் சமஷ்டி ஆட்சிமுறைதான் இலங்கைக்கு நல்லது என்று பேசினேன். அக்காலம் 1956ல் காரியப்பர் M.P தலைமையில் மாநாடு நடந்தது பிறகு பண்டாரநாயக்கா பிரதமராகி கல்போர்ட்குடியேற்றத்திட்டத்திற்கு சிங்களவர் 70 சதக் குடியேற்ற காரியப்பர் சம்மதித்து கட்சி மாறிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும், அவர்ட துரோகத்தையும், பண்டாவின் அரசின் துரோகத்தையும், தமிழர் முஸ்லிம் பரம்பரைக் காணிகளில் அத்துமீறிக் குடியேற்றியதையும், கண்டித்து பல கட்டுரைகளைப் பத்திரிகைகளில் எழுதினேன். அதுக்கு என்னை கல்முனை பன்சலை விகாரையிலிருந்து காரியப்பரும், தபால், வானொலி அமைச்சராக்கியதும், விலக்கி விட்டனர். கல்முனை நகரில் எல்லைத் தூண்டிவித்துச் சில சிங்களப் பணக்காரர்களைக் குடியேறச் செய்தனர். பின்னர், அரசினரும் அம்பாறை கொண்டவெட்டான் தமிழ் முஸ்லிம் முதுசமான காணி பூமிகளைச் சுவிகரித்ததுபோல் சோமரத்தினா, தயாரத்தினா, கலப்பதி, வீரவன்ச போன்ற M.P மந்திரிமாரும் ரகசியமாகச் சிங்கள முதலாளிமார் கல்முனை நகரில் குறைந்த விலைக்கு கடைபஜார், காணிகளை வாங்கி முன்னூற்றி ஐம்பது சிங்களவர்களைக் குடியேற்றினர். தமிழரசுக்கட்சியினர் அறிந்து பார்லிமென்டிலும் எதிர்த்து சட்ட மறுப்பு நடத்தினார்கள்.

"ஓ.... தேரோ... ஐயாவுக்கு இவ்வளவு தூரம் தமிழர், முஸ்லிம் காணி முதுசொம்... அரசினர் ஏமாற்றுச் சங்கதியெல்லாம் நல்ல வாலாயம்.... உம்..... இன்னும் எவ்வளவோ... இரகசியங்களைத் தெரிந்து வைத்திருப்பீர்கள். இப்போ, மணியும் 11 உச்சிவெயில் வருவதற்குள் சமாதானயாத்திரைக்கு ஆயத்தம்.... கல்முனை நகருக்கு சந்தாங்கேணித்திடலில், சர்வமதமகாநாட்டிலும், ஐயாவும் எங்கள் கூடவந்து நாட்டுமக்களுக்கு விழிப்புணர்வு வரச் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டும், சட்டுப்பொட்டெனப் பேசிப்பேசியவாறு, விபுலானந்த மண்டபத்தை விட்டு வீதியூர்வலமாகச் சென்றனர். பொலிசார் துப்பாக்கிகுண்டாந்தடிகளுடன் எதிரே வந்தனர்.

**5. மஞ்சுளாவுக்கும் ஜெயசேனாவுக்கு ரகசிய...**

கல்முனை யானைக்கோயில் தெருவினில், வேல்முருகுமாஸ்டரைக் கடத்தி வந்து பயங்கரவாதிகள் இரவு சுட்டு மரணமான செய்திகள். பொலிசார் தீவிர ரோந்து வீதிகளில் சனப்புளக்கம் பீதி. கடைகள்பல திறக்கவில்லை. சமாதானயாத்திரை தொடங்கிக் காரைதீவுகண்ணகைச் சந்திவரை வரும்போது...

"......நிலைமை, இன்னும் பயங்கரப் பீதியடையலாம் ஊர்வலத்தைக் கண்டால் பொலிசார்..." தலைமைதாங்கிச் சென்ற பாரதிவாணர், பிக்கு சதானந்தாவை அணுகிக் குசுகுசுத்தார்.

"ஆமாம் புலவரே! நாம சமயோசிதமாகக் கலைந்து போவோம். இன்னுமொரு சுமுகமான நேரம் யாத்திரையைத் தொடரலாம். கூடும் நாளை எனக்கு அறிவியுங்கள் அம்பாரைக் கச்சேரி முன்தான் விகாரையிலிருக்கிறேன். அதோ் பஸ்ஸும் வருது... வணக்கம் சலாமு அலைக்கும்....." எனத் தேரோ கூறியவாறு வீதி ஓரம் வந்தார்.

" ..... ஆ... புத்தமகா தேரோ.... சதா...னந்த...." ரைவர்முணு முணுத்தவாறு பஸ்ஸை நிறுத்தினான். தேரோ ஏறியவாறு, கூட்டத்தினருக்கு கைகளை அசைத்தார். பஸ் இரைந்து சென்றது.

"பார்த்திங்களா ஜெயசேனா.. மஞ்சுளா சிங்களவர்களில் அவர் தமிழ் பேசும் மக்களை நேசிக்கும் புனித வழிதவறாத தேரோ சதானந்தா ஐயா" பாரதி வாணர் மகிழ்ந்துரைத்தார்.

" பொலிஸ் ரோவர் வருகிது நாம மாறுவோம் அத்தான். புலவரண்ண வாங்கள் எங்க வீடு பக்கத்திலேதான். "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ...ஓ... மஞ்சுளா பயந்து நடுங்குகிறா வா்ங்க ஜெயசேனா மஞ்சுட வீட்டே போய் மற்ற ஆலோசனை.."

"வந்து புலவரே; இதுதான் தரணமென்று மஞ்சுளாவின் பெற்றோர்கள் உறவினர்கள் என்னை வரன்.."ஜெயசேனா மஞ்சுளாவின் செம் மலா் வதனத்தை விடுப்பாகப் பார்த்து முறுவலித்தான். புலவரும் இருவா்ின் சம்க்கையான சாடைப்பாவ முகங்களை அவதானித்தார். "வயசும் சோடியும். காலநேரம் பயம் அறியுமோ? சரி சரி நானே பேசி இருவருக்கும் மாலையணிந்து நீடூழி வாழ்த்துப்பாமாலையும் பாடுகிறேன்.. வாங்க வாங்க"

மூவரும் விபுலானந்த வீதியின் தெற்கு யானைக் கோயில் வீதியினால் நடந்து கொண்டிருந்தனர். வீட்டுக் கடவலில் அம்மாவும். காசிநாதா் அப்பரும் இவா்களின் வருகையைக் கண்டு பேரானந்தம் புளகம் கொண்டு துடிதுடிப்பாய் வீட்டுக்குள் ஓடினார்கள்.

ஆறு அறைக் கல்வீடு. சாதாரண கோயில் கலச்சார வடிவமைப்பு. உள்ளே 2 குசினி குளியலறை. மண்டபம். படிப்பறை. கதிரைகள். மேசை மேல் பூச்சாடி. புத்தகங்கள்.. தொலைபேசி. மஞ்சுளாவின் டீச்சர் சான்றிதழ். பரிசளிப்புவிழாவில் எடுத்த படங்கள். சுவர்களை வளைத்து பல படப்பிறேம்கள்.

" ஆ பார்ப்பதற்கு கலா மண்டபம் போலிருக்கிறது. பார்த்திங்களா ஜெயசேனா .. இவ்வளவும். மஞ்சுளாவோடு நீங்கள் மணம் முடித்து வாழக்கொடுத்து வைத்தவா்..." புலவா் பாரதிவாணா் பேசியதை மஞ்சுளாவும் பெற்றோரும் செவிகளைக் கூர்ந்தவாறு தேனீா் பலகாரங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தனா்.

" நான் இவைகளுக்குப் பேராசைப் படவில்லை. புலவரே இன்று நாடெல்லாம் தமிழ் பேசும் இனங்களை சிங்கள அரசுகள் மாறி மாறி அடக்கி ஒடுக்கி கொண்டிருப்பதால் எத்தனையாயிரம் புதுப் புது தம்பதிகள் கொல்லப்பட்டும் பல்லாயிரம் விதவைகள். கன்னியா்கள். மாணவிகளும் கற்பிழந்து அடித்துக் கொன்று குழிதோண்டிப் புதைக்கப்பட்டனா்; என பத்திரிகைகளிலும் கண்டு கதறியழுது துடித்துக் கொண்டிருக்கின்றனா். இந்த நாடெல்லாம் சமாதான ஆட்சி வரும்வரை நான் குதுகலித்து வாழ.."

ஜெயசேனா ஆத்திர மேலீட்டால் அழுது சலித்து குமுறிப் பேசுவதைக் கேட்டவாறு. ஓய்வு பெற்ற அதிபா் காசிநாதரும் சலித்த முகத்துடன் பலகாரத்தட்டை ஏந்திவந்தார். பின்னால் தண்ணீரை மஞ்சுளா டீச்சரும் கலங்கி கசிந்த மூக்கு முகபாவனையுடன் வந்து சிறு மேசையில் வைத்து விட்டு சுவரில் ஒதுங்கி நின்று விசித்து விக்கினாள்.

" புலவா் தம்பியே நீங்களும் ஐம்பதுகளில் மருதமுனை அல்மனார் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலையில் என்னிடம் படித்த மாணவா். அதனாலும் தமிழ் இனத்தை இன்று வரை நேசித்தும் தமிழரசுக் கட்சி மேடைகளில் பேசிப் பாடி உலகப் புகழ் பெற்று வரும் பெரும் கவிஞா். புலவா். தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகவே சிங்கள அரசுகளுடன் நீதி. நியாயம் கேட்டு எழுதி வருபவா். உங்களின் பாடல்களை மருமகன் ஜெயசேனாவும் என்றமகள் மஞ்சுளாவும் பல தோ்தல் காலங்களிலும் தமிழின விடுதலைக்காக எழுச்சிப் பாடல் பாடி வந்தவா்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம் அந்த உறவு தயவு காரணமாகத்தானே நானும் மஞ்சுளா டீச்சரை சகோதரியாக நேசித்து வீடு தேடிவருகிறேன். இன்று காலையிலே விபுலானந்த மண்டபத்திற்குள் வந்த மஞ்சுளா ஜெயசேனாவைக் கண்டு சனங்களை விலக்கிவிட்டு ஓடிவந்து கையைப் பிடித்து கொஞ்சியழுதாவே.. இதிலிருந்து அனுமானித்துக் கொண்டேன்.. இல்லையா ஜெயசேனா மச்சானே..?"

பாரதிவாணர் மஞ்சுளாவையும் ஜேயசேனாவையும். சிண்டு முடித்துப் பேசியதைக் கேட்டு. விழிகள் மருண்டு புன்முறுவலித்தவராக அதிபர் காசிநாதர் வெளிவிறாந்தைக்கு வந்து வாங்கின் மேலமர்ந்தார்.

"புலவர் மச்சான் எனது இலட்சியங்களை மஞ்சுளாவின் காதலுக்காக விடச் சொல்கிறீர்களா? இன்று கேள்விப்பட்டோமல்லவா. எனது ஆருயிர்த் தோழர் வேல்முருகு மாஸ்டரை கடத்தி வந்து சுட்டதாமென்று.. இப்படியே பயங்கரவாதம் நாடெல்லாம் பெருகும் போது நான் மஞ்சுளாவிற்காக இலட்சிய சமாதான சகவாழ்வு சமதர்ம வழிகளை விடச் சொல்கிறீர்களா?"

'இன்று நடந்து கொண்டிருக்கும் போர்க் களத்தில் நாம் சமாதான வாழ்வில் மக்களை மனம் மாற்றி சிந்திக்கவைத்துக் கொண்டிருந்தாலும் நல்லவர் கெட்டவர் என்று தெரியாமலேயே; ஏன் வேல்முருகு மாஸ்டரும் எமது சமாதானம் வழிவந்து வாழ்ந்து வழிகாட்டி வாழ்ந்த இலட்சியவாதிதானே? அவருக்கு மூன்று பிள்ளைகளுண்டு. இவருக்கு மனைவி அரசியலிலும் ஆலோசனைகூறி இருவரும் ஒரு மனமொத்து வாழ்ந்தவர்கள்தானே."

" ஆ.. நீங்கள் ஒப்பு நோக்கிப் பேசியது மிகச்சரியான கருத்து .. புலவர் ..மகனே ....பாரதி" விசுக்கெனப் பேசியவாறு காசிநாதர் உள்ளே வந்தார்.

"ஜெயசேனா மச்சான் உங்களின் இலட்சியம் மேலும் நிறைவேற வேண்டுமா இல்லையா? இன்றிருப்போர் நாளை...? அதற்கிடையில் மஞ்சுளாவின் தீராத காதல். அவளை நீ கட்டாயம் இப்பவே கைப்பிடி.. மண....உன் இலட்சியங்களுக்கு ஆணும் பெண்ணும் குழந்தைகளைப் பெற்றெடுங்கள் இங்கே 'வாங்க மஞ்சுளா டீச்சர்.." பக்கத்தில் புலம்பி புன்முறுவலுடன் கடைக்கண் பார்த்து நின்றவளின் வலக் கையைப்பிடித்து இழுத்து "இந்தா மச்சான் அன்போடு பிடியுங்கோ" என்று ஜெயசேனாவின் கைகளை இழுத்துப் பிடிக்கச் செய்தார் பாரதி வாணர்.

"புலவர் மச்சான் சமாதானம் சஞ்சிகைக்கு மட்டும் ஆசிரியரல்ல.. காதலர்களுக்கும் கல்யாணம் முடித்து.."

"ஆமாம் ஒரு பக்கக் காதலை இருபக்கம் இணைப்பதும் கல்யாணம் முடித்து வாழவைப்பதும் சமாதான வழிதானே... உம் சந்தோசமாக அன்றில் பறவைகள்போல். மயிர்நீப்பின் உயிர் மானங்காக்கும் கவரிமான் சோடிகளைப்போல் ஆசைக்கொரு ஆணும் ஆஸ்த்திக்கொரு பெண்ணும், இலட்சியம் வளர்க்க ஒரு ஆணும் பெற்று நீடூழிகாலம் பலநூறாண்டுகள் நோய் நொடியின்றி வாழுங்கள் ஜெயசேனா மஞ்சுளா தம்பதிகளாக.."

'இஹ்ஹிஹி..." வெளிவிறாந்தையில் சிலர் சிரிக்கக்கேட்டதும், மஞ்சுளா சட்டென நிமிர்ந்து பார்த்தாள். தன் சக ஆசிரியர்கள் புஷ்பா. மல்லிகா நிற்பதைக்கண்டு வெட்கித்தும் மகிழ்ந்தும் கைகளை விடுவிக்க முனைந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்போ மஞ்சளா டீச்சர் தங்கச்சிக்கும் ஜெயசேனா. மச்சானுக்கும் சந்தோசமில்லையா..?" மல்லிகா டீச்சர் கூறியவளாக மண்டபத்துள்ளே வந்தாள்.

"..ஓ மல்லிகா டீச்சர் மச்சாளும் மோப்பம் பிடிச்சு கேள்விப்பட்டு வந்துற்றீங்க போல...?" ஜெயசேனா குத்தலாகக் கூறினான்.

" அப்படி மோப்பம் பிடிக்குமளவுக்கு. நாங்கள் அரசாங்க அல்ஸேசன் நாய்களில்லே. மச்சான் உங்கள் சமாதான ஊர்வலத்திலே நாங்களும் தொடர்ந்து வந்தோமில்லையா? புலவர் பாரதிவாணர் இப்போ வராவிட்டால். உங்களின்ட மனசை மாத்தி மஞ்சுளா டீச்சர்ர காதலும் வேண்டாம் கத்தரிக்காயும் வேணாம் என்று உதறித் திரிஞ்சீங்கல்லவா? புலவரண்ணையின்ற வசிகரப் பேச்சில் மனம் மாறி மஞ்சுளாவின் அழகு முகத்திலே மயங்கிற்றீங்கள். உம். சரிசரி இனிமேல் உங்களுக்கும் ஒரு உத்தியோகம் ஆசிரியர் பதவி நாங்களெல்லாம் எம்பிமாரைப் பிடித்து எடுத்துத்தருவோம்."

"அதெல்லாம் பிறகு பார்ப்பம். இப்போ சூட்டோடு சூடாக உங்களின் இந்து சமயப்படி சிக்கனமாக சீர்திருத்த கல்யாண ஒப்பந்தங்களை ஆடம்பரமில்லாமல் நடத்துங்கோ"

"ஆமாமா நீங்கள் ஒரு முஸ்லிம் மார்க்கமா இருந்தும் எங்கள்ர ஐயர்மார் வண்ணாக்கர்மார்கள்ர பேச்சுக்கள ஆச வார்த்தைகளையும் கேட்டு மனம்மாறாம இலட்சியம் தமிழர் சமாதானம் என்றென்று ஏழெட்டு வருசமா மஞ்சுளா நெருங்கினாலும் ஐயோ ஆபத்து காதலா? கல்யாணமா? என்று தூரவிலகித் திரிஞ்சவர் எங்கள்ர ஜெயசேனா பாடகர் மச்சானை ஒரு நாளைக்குள்ள அதுவும் ஒரு மணிக்கிடையில் எப்படி வசிய மந்திரத்தினாலே மனசை மாத்திட்டீங்க?! அதுவே சமாதான சமரச முயற்சிக்கு பெரும் வெற்றியண்ணே புலவரண்ணே பாரதிவாணர்"

"அவர்களின் பேச்சு வன்மைகளுக்கும் புரட்சிக் கருத்துப் பாடலுக்கும்தானே மட்டக்களப்பு நகர முதல்வரும் எழுத்தாளருமான செழியன் பேரின்பநாயகமும். தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பீடாதிபதி கலாநிதி காலிதீனும். இலக்கிய வேந்தர் சட்டத்தரணி முத்துமீரான் அவர்களின் தலைமையிலே இசைவாணருக்கு இலக்கிய விழாவிலே ஈழபாரதி பட்டமே கொடுத்தும் பொன்னாடை போர்த்தியும் பணமுடிப்பும் கொடுத்தார்களே...."

"எனது ஆரம்பகால ஆசிரியர் காசிநாதர் ஐயாவின் வாயினாலேயே புகழ்ந்துரைத்துக் கேட்பதற்கும் இன்று அவரின் மகள் மஞ்சுளா ரீச்சரினாலேதான். இல்லை இல்லை எனது இளமைக் கால நண்பன் ஜெயசேனாவிலேயும்தான்.."

"உம் சரி சேர். கடவுளின் விதிப்படிதானே நாங்கள் எதிர்பாராத காரியங்கள் நாடெல்லாம் நம் கண் முன்னே நடந்து கொண்டிருக்கின்றன. எல்லாரும் பழம். பலகாரங்களை எடுங்கோ" என்று ஓய்வு பெற்ற அதிபர் காசிநாதர் பலகாரத் தட்டை ஏந்தி வலம் வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவரின் சிந்தனைகள் கடந்த 1950 இலிருந்து தமிழரசுக் கட்சியின் தேர்தல் மேடைகளில் பட்டிருப்புத் தொகுதியுடன் மருதமுனை- பாண்டிருப்பு- மணச்சேனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பும் 60க்கு முன்பிருந்து 11 வயது முதல் தேர்தல் கீதம் பாடுபவனாகச் சேர்ந்து ஒரு தரம் பாடினால் 2 ரூபாய் ராணித்தலைமுடிபோட்ட பிரவுண்தாள் கிடைத்த காலம் முதல் வேல்முருகும், கணபதிப்பிள்ளையும், சின்னத்துரையும், பாடசாலைக்கால நண்பர்கள் அக்காலம் மகூர் மௌலானாவும் அப்துல் மஜீதும் விதானையார்களின் மக்கள். மட்டக்களப்பு கல்லடி சிவானந்த வித்தியாலத்தில் படித்த 16 வயதினர். மாகாத்துப் புலவரும் அகமது லெப்பை அண்ணாவியாரும் எழுதிய நாட்டுக்கூத்துப் போன்ற கும்மி, தெம்மாங்கு, விருத்தப்பாடல் மெட்டுக்களில் தேர்தல் சின்னம் வீட்டுக்கு நேரே புள்ளடி போட்டிடுவீரே!

"காகம் கரையுதடி கண்ணாடி உடையுமடி
வீடுதான் வெல்லுமடி
விரும்பிதான் புள்ளடி போடுங்கடி
தங்கமே தங்கம்"

சிங்களவரின் ஆட்சியிலே சிறந்த காணித்தோட்டங்கள்லே எங்கள் ஆடுமாடுப் பட்டியெல்லாம் எங்கிருந்தோ வந்த சிங்களவர் கொள்ளையடிச்சி ஆளுராங்கடி நாங்களெல்லாம் தமிழர் முஸ்லிம் நாளும் பொழுதும் ஒன்று சேர்ந்தே சிங்களவர் ஆட்சிக்கெதிராய் நீதி கேட்டு உரிமை பெற தமிழரசுக்கட்சி சின்னமான வீட்டுக்கு நேரே புள்ளடி போடுங்கடி தங்கமே தங்கம். "ஆ அருமையான பாட்டடா தம்பி லத்திபு குட்டிப் புலவன்" என்று வேல்முருகு அண்ணனும் பாராட்டுவார்.

சின்னத்துரை அண்ணனும் வன்னியசிங்கமும் ஒரு நாளிரவு என்னை கூட்டிக்கிட்டு தாளைவெட்டான் தீப்பள்ளய ஒழுங்கையினாலே நடந்து ஆஸ்பத்திரி ஆலமரச்சந்திக்குப் போய் லாமபெண்ணெய் டின்னிலே நாலஞ்சி போத்தல் வாங்கி காட்டுவழி அதர்களாலே கல்முனை சந்தாங்கேணி ஓரமெல்லாம் சிங்களாக்கள்ர குடில்கள்ல எண்ணை ஊற்றி ஐம்பது அறுபது குடில்களுக்கு நெருப்பு வெச்சிட்டு ஓடிட்டோம் காட்டு வழியே. அடுத்த நாள் கேள்விப்பட்டோம் தமிழருக்கும் சிங்களவருக்கும் சண்டை முற்றி வெட்டுக் குத்து நடந்ததாம் என்று.

காரியப்பரும் M.P யாகி தமிழரசுக் கட்சியிலே வென்று சுதந்திரக் கட்சில மாறி கால் மந்திரியாகி 500 சிங்களாக்களுக்கு கல்முனையிலே சந்தாங்கேணியிலே ஒவ்வொரு ஏக்கர் காணிக்கி விண்ணப்பம் விற்றவராம் என்று லஞ்சக் கொமிசனிலே பிடிபட்டவர். அன்று தமிழரும் முஸ்லிமும் ஒற்றுமையா இருந்து சிங்களாக்களைத் துரத்தின காரணத்தினால் இன்று கல்முனை நகரப் பகுதியிலே சிங்களக் குடிப்பெருக்கம் இல்லாமல் போச்சுது.

இங்கே புலவர் அண்ணே நித்திரக் கண்ணிலே வாய் அரட்டுரீங்கபோல வராந்தாவில் சாக்குக் கட்டிலினில் சாய்ந்து படுத்துப் பேப்பர் வாசித்த சொற்ப வேளைக்குள் கண்ணயர்ந்தார். மஞ்சுளா தேனீரும் பலகாரத்தட்டும் கொண்டாந்து பக்கத்துச் சிறு மேசையில் வைத்து விட்டு வாயராட்டியவரைச் சத்தம் போட்டு எழுப்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆய்ஹறாவ் ஆ நித்திரயா கனவு பழைய நினைவுகள் ஆவேல்முருகு. சின்னத்துறை. வன்னியசிங்கம்.
"ஓ ஓ என்னிட்ட ஐம்பதாம் ஆண்டில அல்மனார் முஸ்லிம் தமிழ்க்கலவன் பாடசாலையில் படிச்ச பொடியன்மார்ர பெயர் இந்த நேரம் .."
"ஓமையா என்ட கூட்டாளிமாராலேதான் நானின்று உலகப்புகழ் பெறுமளவுக்கு புலவனாகிவாறன். சின்னத்துரை நீலாவணன் பெருங்கவிஞர் கணபதிப்பிள்ளை பாண்டியூரன் கவிஞர். வேல்முருகு பெரும் அரசியல் வேங்கை. இன்றிரவு யாரோ சுட்டுக் கொலை செய்ததாம் அவர்ர நல்லடக்கத்திற்கு நாம.."
"ஓமோம் வேல்முருகு மாஸடரினாலதான் கல்முனை காரைதீவு பிரதேசங்களில சிங்களவர்களின் அத்துமீறல் குடியேற்றங்களை 50-60-70 களில் இருந்து தமிழரசுக் கட்சி தலைவர்களின் உதவியினால் முளையிலே துரத்தி அடிக்கச் செய்தவர்.

"ஓமோம் மாமா நானும் வேல்முருகு அண்ணனும் வாணர் புலவரும் சேர்ந்து வெலிகம ஹோட்டல், சிற்றி ஹோட்டல், அப்புஹாமி ஸ்டோர் போன்ற கல்முனை நகரிலே பல சிங்கள முதலாளி மார்களும் கட கண்ணி வைத்து சிங்கள மயமாக்கத் திட்டங்கட்டின வேளைகளில் இது மாபெரும் ஏகாதிபத்திய அடக்குமுறை அரசினரின் தூண்டு:தலால் நடத்தி வாறிங்கள். ஜிஹாத் படையினரும் சங்கிலியன படையினரும் உங்களுக்கெல்லாம் எச்சரிக்கை விட்டு வருகின்றனர். எந்த நேரம் அதிரடித்தாக்குதல் நடாத்துவீனமோ? என்று இரகசியமாகச் சொல்லி வந்தோம். திடீரென 83ல் ஜுலைக்கலவரம் நடந்த வேளை.."
"ஆ நல்லகாலம் சிங்களாக்களுக்கு உயிர்ச்சேதங்களே வராமல் தப்பி ஓடிட வேல்முருகு அண்ணரே முன்கூட்டியே எச்சரித்து வந்தார். தப்பி ஓடிற்றினம் சிங்கள முதலாளிமார். இப்போ ஒரு சில தமிழ்ப் பெண்களை அந்தக்காலத்தில் வந்து மதம் மாறிய சிங்களக் கிறிஸ்தவ ஆக்களைத் தவிர ஆயிரத்துக்கதிகமான சிங்கள முதலாளிமார் ஓடியே.."
"நமது தமிழர்களும் முஸ்லிம்களும் தமிழ் பேசும் மற்ற கிறிஸ்தவ மக்களும் இன ஐக்கியமாக ஒற்றுமையாக இருந்து நமது காரைதீவு. கல்முனை, சம்மாந்துறை. அக்கரைப்பற்று, பொத்துவில் வரை நமது பிரதேசங்களைப் பாதுகாப்போம்."
" இடைக்கிடையே சிங்கள அரசுகளில் சேர்ந்து M.P யாகிமந்திரியாகி சுகபோகம் அனுபவித்து வரும் நமது முஸ்லிம் தமிழ் அரசியல்வாதிகளால்நமது பிரதேசங்களில் தமிழன் வேறு முஸ்லிம் வேறு என்றெல்லாம் பகமை பேசி வந்து கலவரங்களும் பல உயிர்ச்சேதங்களலும் வந்துள்ளன."
"இனிமேல் நாமெல்லாம் சமாதான விழாக்களை நடாத்தி இன ஐக்கியங்களை மாதாந்தம் நடாத்தியே விழிப்பாக வாழ வேண்டும் மக்களே.." காசிநாதர் விழிமருண்டு கூறினார்."
"ஓமோம் அதிபர் காசிநாதர் ஐயாவின் ஆலோசனை மிகவும் தேவையானது.." என ஈழ பாரதிவாணர் மகிழ்ச்சி தெரிவித்தவாறு சாக்குக்கட்டிலை விட்டு எழுந்து தெருப்படலைக்கு நடந்து கொண்டிருந்தார்.
"மஞசுளா பார்த்தீங்களா முஸ்லீமகளில் புலவர் மிகவும் தமிழ் நேச ஐக்கியங்களைப் பற்றியே பேசி மகிழ்கிறார்.
"ஆமா அத்தான் நாமெல்லாம் ஆயுள் காலமெல்லாம் பாரதிவாணர் புலவர்பெருமானுக்கும்சமாதானம் சகவாழ்வு நாடெல்லாம் பெருக ஒத்துழைத்து வாழவேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதற்காகத்தானே உங்களை இப்போ எனக்கு கைப்பிடித்து நீடூளி வாழச் சொல்லி வாழ்த்தினவர்".
"அதுமட்டுமா ஆசைக்கொரு ஆணும் ஆஸ்த்திக்கொரு பெண்ணும் இஹ்ஹி..ஹி..." மஞ்சுளா ஜெயசேனாவின் மார்பில் முகம்புதைத்துக் கொஞ்சினார்.
"ஓ இச் இச் உம்மா என்ன ஆசை உனக்கு இரவாகட்டுமே பொறு..."
"எதுக்காம்?, என ஜெயசேனாவின் மார்பில் மஞ்சுளா முகம் முத்தி மகிழ்ந்தாள்.அவளை அரவணைத்து இடையை வருடி நெகிழ்வித்துக் கொண்டிருந்தான். ஆசைக்கொரு ஆணும், ஆஸ்த்திக்கொரு பெண்ணும் மட்டும்தானா புலவர் ஈழபாரதி நம்மைப் பெறச் சொல்லி ஆசிகூறி வாழ்த்தினார்..?" மஞ்சுளாவின் ரோஜா முகத்தின் இதழ்களை வலக்கர விரல்களினால் மலர்த்திக் கேட்டான்.
"ஓ வேறென்னவோ. ஓ ஞாபகம் வந்திட்டுது மச்சான் உங்க இலட்சிய சமாதானம் வளர்க்க ஒரு ஆணும் பெற்று நூறாண்டு காலத்திற்கு மேலும் நீடூளி வாழச் சொல்லி வாழ்த்தினார். உங்களின் இலட்சியம் வளர ஒன்றல்ல ஏழெட்டு ஆண்மக்களை உங்களுக்கு இஹ்ஹி..ஹி" என மஞ்சுளா கல கல வென சிரித்தாள்.
"ஆ அடேங்கப்பா? இவ்வளவு பெரிய ஆசைகளை மனசுக்குள்ளே மறச்சி வைச்சிக்கிட்டுத்தானோ என்னைப் பிராயப்பட்ட காலம் கூடிக் காதலிச்சு வந்தாய்.."
"உங்களை மட்டுமா காதலிச்சேன்.."

"அப்போ வேற எவனையும் காதலிச்சு.."

"ஐயையோ அப்படி ஒருத்தனையும் நான் கிட்ட நெருங்கினதே இல்லத்தான். உங்களைக் காதலிச்சதப்போல உங்க தேனிலும் இனிய ரீங்கார குரலையுமல்லவா காதலிச்சு ரெண்டுபேருமே தமிழரசுக்கட்சி மேடைகளிலும் கலைவிழா, கோயில் விழா, மீலாத் விழா யாவற்றிலும் பல நூறு பாட்டுக் கச்சேரிகளிலும் பாட்டுப்பாடியல்லவா பத்துப்பண்ணிரெண்டு வருசமா உங்களையும் உங்க குரலையும் காதலிச்சு வளர்ந்தோமே.."
"ஆமாமா நீங்கதானே காதலிச்சீங்களே தவிர நான் உங்களை ஒரு போதும் காதலிக்கவுமில்லை கல்யாணம் முடிக்க ஆசைப்படவுமில்லை.."

"அப்போ நான் அழகி இல்லையா...அல்லது"
"மஞ்சுளா நீங்கள் இப்போ அழவும் வேண்டாம் ஆத்திரவுப்படவும் வேண்டாம். என்னைப் போல் நூறு இளைஞர்கள் ஒரு சங்கம் அமைத்தோம். நாடெல்லாம் சமாதானம், சகவாழ்வு, சமஸ்டி, சமஉரிமை ஆட்சியாளுங்காலம் வந்த பின்புதான் காதலோ கல்யாணமோ கத்தரிக்காயோ பண்றது என்று ஒரு சத்தியம் செய்தோம்."

"ஓ அப்படியா அப்போ இதை முன்கூட்டி ஏன் என்கிட்ட. இல்லை பகிரங்கமா மேடைகளிலே.."

"அதெல்லாம் தேர்தல் வெல்லும் வரை மேடைகளிலே அபேட்சகர்களைப்போல் பொய்ச்சத்தியம் வாக்குறுதி சொல்வது போலில்லை மஞ்சுளா.."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்போ அந்தச் சத்திய இலட்சியம் என்னாலே கெட்டுப்போச்சுதென்று அழுகிறீங்களா அத்தான்.."

"இல்லல்ல எங்கள் ஆருயிர்த் தோழர் வேல்முருகு அண்ணனை நினைச்சுத்தான் அழுது கொண்டிருக்கின்றேன்.." மஞ்சுளாவும் ஜெயசேனாவும் மனம் விட்டு மகிழ்ச்சியாக பேசிய வேளை அப்பாவும் புலவரும் வறாந்தாவுள் ஓசைப்படாமல் சாக்குக்கட்டிலின் மேலிருந்தனர். இடையில் ஏன் ஜெயசேனா மஞ்சுளாவைக் காதலிக்காமல் ஒதுங்கித்திரிந்து காலம் கடத்தினான் என்பதை இப்போது அவர்கள் அனுமானித்துக் கொண்டிருந்தனர்.

"சரி சரி ஜெயசேனா மச்சான் நீங்க கவலைப்படாதீங்க. உங்கள் சங்கத்து நண்பர்களை வர வழைத்து ஒரு சமரசக்கூட்டம் போடுவோம். இப்போ நாடெல்லாம் போர்க்களத்தில் மட்டும் மரணங்களில்லை. சாதாரண பாமரமக்களும் கண்ணிவெடிகள், செல்லடிகள், பீரங்கி, விமான, ஏவுகணை, தற்கொலைக் குண்டுத்தாக்குதலிலும் ஆயிரமாயிரம் பேர் அனாவசியமாக மடிகின்றனர். மடத்தனமாக கல்யாணமே பண்ணமாட்டோம் என நூறு இளைஞர்கள் சத்திய விரதமிருப்பதென்றால் நூறு கன்னியர்களின் வாழ்வுகள் வருடத்தில் நூறு நூறு பிள்ளைகள் பெறாமலேயே மனித குலம் வளர்ச்சியில்லாமல் சேச்சே! அல்லாஹ்வின் இலட்சியங்களில் முதன்மையானது மனித உற்பத்திதான்.நமது பெற்றார் செய்த தவப்பேறினால்தான் நாங்களின்று அதிபராக, ஆசிரியராக, பாடகனாக, உலகப்புகழ், பெறும் சமாதானப்பேரரசனாக..."

"ஆ ரொம்பச் சரியண்ணே ஈழபாரதி வாணரண்ணே உண்மையின் தத்துவம் காதல் கல்யாணம் பிள்ளைப்பேறு பின்னர்தான் கடவுள் பக்தி அரசுகள் யாவுமே.." மஞ்சுளா ரீச்சர் சாதுர்யமாகப் பேசினாள்.

"ஆ என்ற கண்மணி மகளே மஞ்சுளா நீ இவ்வளவு தத்துவமான பேச்சுக்களை அடேயங்கம்மோய்.."

என காசிநாதர் அப்பா மகளை உச்சி முகர்ந்து மகிழ்ந்து பேசினார்.

(யாவும் கற்பனை)


**கௌரவ S. K. வீரபாகு**

*கல்முனை இலங்கை வங்கி முகாமையாளர்*

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் இன ஐக்கியம் ஒற்றுமையாக இணைந்துவாழவேண்டும் என்ற இலட்சியத்துடனேயே கைகளைக் குலுக்கி சமாதானம் புறாச்சின்னம் படங்களை அச்சிட்டு சஞ்சிகையை வெளியிட்டு வருகிறார் ஈழபாரதி மருதூர்வாணர். நாம் எல்லோரும் சமாதானம் வளர்க்க நிதியுதவிகளை மனம்விரும்பிக் கொடுக்கவேண்டும். 09-01-2001ல் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி (தேசியபாடசாலை) கௌரவ அதிதியாகக் கலந்து சமாதானம் சஞ்சிகை வாங்கியபின் சொற்பொழிவாற்றினார்.

நன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிஞர்திலகம் அஷ்ரப், புலவர்மணி சரிபுத்தீன், கணபதிப்பிள்ளை பாண்டியூரன் நினைவுக்கவிதை போட்டி 24-05-2001ல்**

1ம் பரிசு 250 ரூபா பெறுபவர்
கவிஞர், கலர்பூஷணம் A.U.M.A. கரீம்,
பழைய தபாலக வீதி, சாய்ந்தமருது - 10

## நீதிகள் நிலைபெற வேண்டும்.

□□

நாட்டினிலே அமைதியின்று நடைபயிலக் காணோம்!
நாகரிக சமுதாயம் வெட்கியின்று போனோம் !
போட்டிகளும் பொறாமைகளும் புதுப்பொலிவு பூண்டு
போனதினால் அந்தியது அதிகமாகி அவலம்
ஆட்டியிங்கு படைக்கின்ற அராஜகம் நீங்கி
அவனியிலே நிரந்தரமாய் அரசியலில் தீர்வு
கேட்டிடவே கிளுகிளுப்பை மூட்டிவிட என்றும்
கிளர்ந்தெழுந்து குரல் கொடுப்போம் நீதிக்காய் நாமே!

□□

அதிகாரப்பரவலாக்கம் அனைவருக்கும் நன்றே
அதற்கென செயல்வடிவம் அவசரமாய்ப் பெற்றால்
சதிகாரர் திட்டமெல்லாம் சயனித்துப் போகும்.
சத்தியத்தின் கண்களிலே சந்தோசக் கண்ணீர்
புதிதான இரத்தமது புகுந்துவிட்ட தெம்பும்
புவிமீது எழுந்துவந்து புனர்வாழ்வு கொள்ளும்
அதிகாரம் பெற்றுவிட்ட ஆனந்தத்தால் மக்கள்
அனைவோரின் உள்ளங்களும் நீதிவழி செல்லும்

□□

மானிலத்தில் சுயாட்சிதன் மக்களெல்லாம் மகிழ்ச்சி
மாண்புபெறு காட்சிகளால் மனமோங்கும் மகிழ்ச்சி
தேனிலுமேல் தெவிட்டாத தித்திக்கும் இன்பம்
தேசத்தில் மகிழ்வலையே தெளிந்தநீர் போலே
தோன்றுகின்ற அநியாயம் துப்பாக்கி வெடிகள்
தொலைந்தோடும் கொலை கொள்ளை இரத்தப் பிரவாகம்
தோன்றிடாமல் நல்லவற்றைத் தேடிப்பெற்றே நாமும்
தேசமெல்லாம் நீதிகளை நிலைபெறச் செய்வோம்.

□□

காட்டிவரும் இன ஒற்றுமை கவின்பெற்று விளங்க
காதலிப்பர் சிங்களவர், தமிழ்மக்கள் முஸ்லிம்
போட்டிகளும் அற்றதொரு புகழ்பூத்த சமுகம்
பொன்னேபோல் தோற்றமுறும் நாகரீகம் பூக்கும்
வாட்டுகின்ற வரட்சிநிலை வழியற்றுப் போகும்.
வாழ்த்திடுவர் அயல்நாட்டவர் வண்ணமுறும் இலங்கை
நாட்டினிலே சிறந்ததென்று நன்மக்கள் போற்ற
நாற்திக்கும் புகழ்பரக்க நிலைத்திருக்கும் நீதி

----- □□ -------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிஞர்திலகம் அஷ்ரப், புலவர்மணி சரிபுத்தீன், கணபதிப்பிள்ளை**
**பாண்டியூரன் நினைவுக்கவிதை போட்டி 24-05-2001ல்**




2ம் பரிசு 150 ரூபா பெறுபவா
கவிஞர் "அக்கரைச்சக்தி" S. சக்திதாசன்,
கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு

## நீதிகள் நிலைபெற வேண்டும்.

□□
பாதியுயிர் போனபடி பதைபதைக்கும் ஆட்சியினர்
பாரெங்கும் பறந்தோடிப் பணப்பிச்சை கேட்கையிலே
மீதி ஏதும் இல்லாது விலையுயர்த்தி எதிர்கால
மீட்சிக்கே இடமின்றி வெறிச்சோடப் பண்ணுகையில்
ஓதிவந்த "சமாதானம்" உளறுபடி ஆக்கிடவே
உக்கிரமாய் யுத்தமதை உருவாக்கித் தூண்டயிலே
நீதிகளும் நிலைபெறுதல் வேண்டுமெனும் நினைப்பெங்கே
நீசத்தனம், சந்தேகம், நீதிகெட்ட போர்தானோ?
□□
சிறைக்கூட்டம் யாவும் கொடும், கொலைச்சட்டம் ஆகிவந்தே
சித்திரவதை வல்லுறவே செல்வியின்னைத் தமிழனமே
குறைகூறித் திருத்தப்புறப் பட்டவருக்குக் கொலைமிரட்டல்,
குறைமதியர் கூட்டத்தின் கொள்கையென ஆகுதிங்கே........
நிறைவேறி பேரினவாதம் நியாயமென்று கூறுவோரின்
நீதிகளும் நிலைபெறுதல் வேண்டுமென நினைக்கின்றனரோ!
இறைவா நீ, மனப்பலம் தா என்றிறைஞ்சிக் கேட்கின்றேன்.
இருப்பதையும் இழக்காமல் இருக்கவிட்டால் அதுபோதுமே!
□□
எங்கணுமே அகதிமுகாம்! இருந்தாலபோல் தேடுதல்கள்!!
இரவு, பகல் சாமமில்லை, எப்போதும் அச்சமேதான்!
தங்களுக்கே சாதகமாய் வானொலிகள் தம்பட்டமே!
தாராளமாய்ச் சுரண்டிவாழும் தட்டுவாணித் தனங்கண்டோம்!
உங்களுக்கும் எங்களுக்கும் ஒரே நீதி தானென்றே........
உரைத்திடவே வாய்திறப்பின் உயிர்ப்பறக்கும் சதிவேலை
திங்களுக்கே போய் மனிதன் திரும்பித்தான் வந்தாலுமே
தம்புத்தி செம்மறிகள் திருந்தியபா டில்லைத்தானே?
□□
குடியரசாம், சோஸலிசம், கொள்கை கடைப் பிடிப்பதுவாம்.....
செங்கோலாம்! சொல்லக்கூச வில்லையா நாவுகளே?
அடிமையெனச் சிறுபான்மை இனம் அடக்கும் நரித்தந்திரிகள்
அரசியலால் இலங்கை நாடு ஆட்டங்காணு கின்றனவே!
கடிநாயின் குணங்கொண்ட காவலரால் இளைஞர்களே!
காணாமல் போகின்ற கதைதானே தொடர்கிறதே!
விடிவேதும் இலங்கைக்கு வேண்டுமெனில் சமநீதி
விளக்கினையே ஏற்றுங்கள்! மேன்மை வழி காட்டுங்களே!

----- □□ -------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிஞர்திலகம் அஷ்ரப், புலவர்மணி சரிபுத்தீன், கணபதிப்பிள்ளை பாண்டியூரன் நினைவுக்கவிதை போட்டி 24-05-2001ல்**

3ம் பரிசு 100 ரூபா பெறுபவா
கவிஞர் "மூதூர் முகைதீன்"
நொக்ஸி வீதி, மூதூர்-05




## நீதிகள் நிலைபெற வேண்டும்.

உண்மைகள் நேர்மை உயர்வாய்க் கொண்டு
நன்மைகள் புரிந்து நானிலம் மீதில்
அன்பாய் அனைவரும் அமைதியில் வாழ
என்றும் நீதியின் வழியில் நடப்போம்.
□□
ஊட்டிப் பகைமை உணர்வை வளர்த்து
வாட்டி வதைக்கும் வன்செயல் புரிந்து
ஆட்டிப் படைப்போர் அதர்மம் அகல
நாட்டில் நீதிகள் நிலைபெற வேண்டும்.
□□
உழைப்போர் இனத்தை உறிஞ்சிக் குடிப்போர்
இழைக்கும் கொடுமை இல்லா தொழிக்க
அலையாய்த் திரண்டு அனைவரும் நின்றே
நிலைத்திடும் நீதியை நிலத்தில் பெறுவோம்.
□□
வறுமைப் பட்டு வளமே இன்றி
சிறுமை கொண்டு சிதைந்தே எங்கும்
வெறுமை நிலையில் வாழ்வைக் கழிப்போர்
பெருமை காணப் பெறுவோம் நீதியாம்
□□
வன்முறை தனிலே வாழ்வை இழக்கும்
பெண்கள் உரிமை பெற்றே உலகில்
கண்ணீர் சிந்தும் காட்சிகள் மாறிட
மண்ணில் நீதிகள் மலர்ந்திட வேண்டும்.
□□
மாற்றார் என்றே மற்றொர் இனத்தை
தூற்றி நாளும் துயர்கொடுப் போரை
ஏற்றிக் கூண்டில் அடைத்திடும் வகையில்
ஏற்ற நீதிகள் எழிதிட வேண்டும்.
□□
சித்தம் நொந்து செத்து மடியும்
யுத்தம் இனியும் இல்லா திருக்க
புத்தம் புதிய புவியைப் படைத்தே
நித்தம் நீதிகள் நிலைபெறச் செய்வோம்.
□□
சாதி மதமெனச் சண்டைகள் செய்து
மோதி நாளும் மாளும் நிலையை
ஓதி உணர்ந்தோர் ஒழித்தே உலகில்
நீதிகள் நிலைபெற உழைத்திடல் வேண்டும்.




ஆவதும் பெண்ணாலே உலகம் அழிவதும் பெண்ணாலே!
காதலும் பெண்ணாலே வயிட்டில் வளர்வதும் பெண்ணாலே!

ஆண்களுக்கும் பெண்களுக்கும் கற்புநிலை சரிசமமே
ஒருத்திக்கு ஒருவன் என்று இருவருமே
கற்பொழுக்கம் பேணிநிதம் வாழ்ந்து வரின்
காலமெல்லாம் அழிவில்லையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்திலகம் அஷ்ரப், புலவர்மணி சரீபுத்தீன், கலைமணிப்பிள்ளை
பாண்டியூரன் நினைவுக்கவிதை போட்டி 24-05-2001ல்

புதுக்கவிதை 1ம் பரிசு 250 ரூபா
பெறுபவா
"பாத்திமா மூக்தார்"
39 ஏ, அரபு வீதி, பேருவலை.

## பெண்களுக்கு முதலிடம்

வண்டியில் முண்டியடித்தே
ஏறிடும் ஆண்களே!
கொஞ்சம் நில்லுங்கள் !
பேதையவள் பாதங்கள் பதறுவதை
கவனிக்க வில்லையா?
உங்களின் கண்கள்; நீங்கள்
அமருவதில் அவளுக்கு
கொடுத்தால் என்ன முதலிடம்?
பாவம். அவள் பலவீன மானவளா?

□□

ஹதீஸ்களில் பகர்ந்துள்ளனர்..
"புருஷனுக்கு மாறு செய்வதும்
பகட்டாடை பண, நகைக்கும்
விபச்சாரம் செய்பவரெல்லாம்
போகுமிடம் நரகந்தானாம்
முதலிடமே! அப்படியெனில்..
ஆண்களுக்கு...?

□□

"அன்னையின் பாதக்கீழ் சொர்க்கம்"
அண்ணல் நபி அரிய வார்த்தைகள்
மின்னலாய்த் தாக்கவில்லையா?
உங்களின் நெஞ்சங்களை?
நாணத்தோடு சேர்த்து
ஞானத்தையும் கலந்து விடுங்கள்
அவளின் உதிரத்திலே...
ஏனென்றால்
நாளையத் தலைவர்கள், மேதைகள்
மார்க்க அறிஞர்கள் வளரவேண்டும்
அவள் பால்குடித்து நாளைய
அன்னையை வளர்த்து விடுங்கள்!

□□

அறிவுசார் பாசறையமைத்து
உயர் கல்விக்கு முதலிடம் கொடுத்து
நாளைய உலகம்
அவளின் மலர்க்கரத்திலே
கணவன், மக்கள், பக்தி, ஒழுக்கம்.
தொழுது வாழும்
பெண்களுக்கு முதலிடம்தான்

புதுக்கவிதை 2ம் பரிசு 150 ரூபா
பெறுபவா
"பற்றோனிலா மேகநாதன்"
இ.மி.ச. வீதி, நற்பிட்டிமுனை-03

## பெண்களுக்கு முதலிடம்

தாலி கட்டியவன் ஏழையாகினும்
பிணி, பசி, கஸ்டங்கள் வந்தாலுமே
மாற்றான் பணபொருள் காட்டியுனை
காமாசை வெறிக்கிழித்தாலும்
"போடா பேயா" என விரட்டும்
வீராங்கனைக்கெ முதலிடம்!.

----- □□ -------

மலரிலும் மென்மையான மங்கை
அவளுக்கு கனவிலும் மனதினில்
மணவாளன் நினைவிலெ முதலிடம்.

----- □□ -------

கணப்பொழுதில் கடமை தனை
களிப்புடனே செய்திடும் காரிகை
அவளுக்கு கந்தோரிலும் முதலிடம்.

----- □□ -------

தைரியமாய் இயேசுச பிரான்-வதனம்
தனைத் தொட் டெழுந்த
தை யளவளுக்கு பைபிளிலும் முதலிடம்.

----- □□ -------

மன்னவன் மனக் களைப்பில்
மனை நோக்கி வந்தவுடன்
மகளிடம் வினாத் தொடுப்பான்
மாதா எங்கே? என்று..

----- □□ -------

அலை மோதும் பிச்சைக்காரன்
"அம்மா தருமம்" எனக் கேட்பான்
அங்கும் பெண்களுக்கு முதலிடம்.

----- □□ -------

மலர்ந்திட்ட மங்கை அவளுக்கு
மகிழ்வுடனே பூப்பு நீராட்ட
மனையாள் தேடுவதும்
மங்கை ஒருத்தியையே.. எனவே
அங்கும் பெண்களுக்கே முதலிடம்.

----- □□ -------

மெழுகாய் உருகி மேனிசுகம்
பாராமல், கஷ்டப் பட்டு உழைத்தே
வாழ்ந்தும் வழிகாட்டும் பெண்களுக்கே
மறுமையிலும் முதலிடம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் திலகம் அஷ்ரப் புலவர்மணி சரிப்தீன். கணபதிப்பிள்ளை
பாண்டியூரன் நினைவுக்கவிதை போட்டி 24 - 05 -2001

3ம் பரிசு பெறும் கவிதை

"அ.மு.பௌசுத்தகியா"
மொழி கலாசாரத்துறை
தென் கிழக்கு பல்கலைக் கழகம்
ஒலுவில்.

## பெண்களுக்கு முதலிடம்

பெண்களுக்கு முதலிடம்
தந்திடத்துணிந்து முன்வந்த
"சமாதானம்" ஆசிரியர் ஈழபாரதி
மருத்தூர்வாணரைப் பாராட்டும் நானும்
ஓர் இலட்சியப் பெண்ணே!

கம்பனின் கற்பரசிப் பெண்!
பாரதியின் புரட்சிப் பெண்!!
இக்பாலின் இலட்சியப்பெண்!!!
உத்தம நபிஸல்லமின் மகளார்
பாத்திமா வழிவந்த நாங்கள்
அன்றோ!

ஆண்களின் உயர்வுக்கு களம்
அமைக்கும் அவள் - அவனியில்
நாதம் இழந்த வீணையாய் புழுதியில்
வீசப்படும் பெண்ணில்லை
ஆண்களுக்கும் நிகரா மென்போம்!

சமுதாயம் சீர்கல்வி பெற்று
சமதர்மம் மேலோங்கி வாழ்ந்திட
பெண்கள் தான் களமே என்போம்!
அவர்களுக்கே வழங்கிடுங்கள்
சமூகத்தில் முதலிட மின்றே!!

கல்வியிலும் அரசியலிலும் - ஏன்
கலைஇலக்கியம் கணணியிலும்
ஆணுக்குச் சரிநிகராய்
கடமையிலும் முன்னின்று பணியாற்றும்
புதுயுகப் பெண்களுக்கே முதலிடம்!!

ஆலமரமாய் நிழல் பரப்பி
வாழைமரமாய் பயன் கொடுத்து
பொறுமையிலும் பூமியைப் போன்றே
புருசன் பிள்ளை யாவர்க்கும்
பணிசெய்யும் பெண்களுக்கே
முதலிடம்!!

## புறப்படுங்கள் சமதர்ம வழிகாட்ட!

கவிஞர் "மஜிதா"

சமயத்தை சமூகத்தை சாடுவோரை
சந்தர்ப்ப வாதங்கள் பேசுவோரை
சாட்டுதல், மூட்டுதல் செய்வோரரை
சொல்லால் திருத்துவோம் புறப்படுங்கள்!

சட்டங்கள் திட்டங்கள் சொல்லிவிட்டு
சத்தமே இல்லாமல் சமயம்பார்த்தே
சதிசெய்யும் கூட்டத்தை இனமேகண்டு
சாத்வீகத்தால் வெல்லலாம் புறப்படுங்கள்!

இந்துவாய் இஸ்லாமாய் பௌத்தராய்
ஒன்றுக்குள் ஒன்றாய் இருந்த எம்மை
சதிசெய்து பிரிதிட்ட சண்டாளரை
சமதர்ம வழிகாட்ட புறப்படுங்கள்!

தாயாக மகளாக தமக்கையென
தரிசிக்க வேண்டிய பெண்குலத்தை
துச்சமாய் இழிசெய்யும் துன்மார்க்கரை
தூயவழி காட்டப் புறப்படுங்கள்

தேசத்தை காப்பதாய் வாக்குச் சொல்லி
மோசமே செய்கின்ற மூடர்களின்
நாசத் தனங்களை நாம் திருத்தி
நலமோடு வாழலாம் புறப்படுங்கள்!

இனங்களை ஒன்றாகச் சேர்த்து வைக்க
இரவாகப் பகலாகப் பாடுபடும்
இனிய நல்மனிதரை இழிவு செய்யும்
ஈனரைத் திருத்துவோம் புறப்படுங்கள்!

சீரான கல்வியைப் பெற்றுக் கொண்டு
சின்னத்தனமாக நடந்து வாழும்
சிறு புத்திக் காரரை சினங் கொள்ளமல்
சிந்தனை யூட்டி வாழப் புறப்படுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுட நேசங்கள்

*இன ஐக்கிய சிறுகதை....*

"அன்புமணி"

சோதனைமிகுந்த அந்த நாட்களின் நிகழ்வுகள்....
நகரமே வெறிச்சொடிக்கிடந்தது. தேன்கூடு போன்று சுறுசுறுப்பாய் இருக்கும் மட்டுநகர் பட்டணம் இப்படி வெறுமையாகுமென்று எவருமே நினைத்திரக்க முடியாது.
வெறுமையை ஊடறுத்து அதோ, ஒரு பழைய ஜீப், அதனுள் கவலை தோய்ந்த முகங்கள் பலநெருக்கியடித்துக்கொண்டு ஜீப் கச்சேரிக்குள் நுழைகிறது. அங்ககு கூடியிருந்த சிலர் கசமுச வென்று விறாந்தைகளில் உலாவித்திரிகின்றனர். வேலைகளை யாரும் கவனித்ததாக தெரியவில்லை.

"எப்படி வந்தீர்கள்? எப்படி வந்தீர்கள்?"

"வழக்கம் போல் ராணுவ ஜீப் காவலுடன்தான்.."

"வழியிலி எதுவும் நடக்கவில்லையா"

"எதும் நடக்க வில்லைதான் ஆனால் எந்நெரத்திலம் எதுவும் நடக்கலாம். உயிரைக் கயில் பிடித்துக் கொண்டுதான் ஜீப்புக்குள் கொழிக் குஞ்சுபோல் உட்காந்து கொண்டிருந்தொம்."

அது நடந்தது 1990ல் ஜுன் மாதத்துக்குப் பின்..
கார் பஸ் எதுவுமே போக்குவரத்து இல்லை. முஸ்லிம்கள் தமிழ்க்கிராமங்களுக்கோ, தமிழர்கள் முஸ்லிம் கிராமங்களுக்கோ செல்லமுடியாத பயங்கரக்காலம். நேற்றுவரை ஒருதாய் வயிற்றுப் பிள்ளைபொல் வாழ்ந்த மக்கள் காத்தான்குடி முஸ்லிம்களும் தமிழர்களும் புதுக்குடியிருப்புப் பகுதிகளில் ஒரே இரவில் கொல்லப்பட்டனர். ஜன்மப் பகைவர்களாக கொலைவெறியர்களும் தலைவிரித்தாடிக் கொண்டிரந்தனர்.
பிட்டும் தேங்காய்ப்பூவும் என வர்ணிக்கப்பட்ட தமிழ் முஸ்லிம் கிராமங்கள் நாயும் பூனையுமாக மாறிவிட்டன.

திடீரென மாடிப்படிகளில் இறங்கிவந்தான் கச்சேரிப் பியோன். "எல்லோரையும் ஜி. ஏ. கூப்பிடுகிறார்." என்றான். விறாந்தையில் கசமுச வென்ற கூட்டம் பரபரப்புடன் மேலே படியேறிச்சென்றனர். ஜி.ஏ. யின் அறையில் கூட்டம் நடந்தது.
நகரில் இருந்த பல பண்டகசாலகைள் சூறையாடப்பட்டுவிட்டன. தனியார் கடைகள் ஒற்றைப்பலகை திறந்து யானைவிலை குதிரைவிலை, மக்கள் வந்து முறைப்பாடு செய்துள்ளனர்.

இப்பிரச்சினையைத் தீர்ப்பது எப்படி.

எல்லோரும் கையைப் பிசைந்தனர். சாதாரண நேரத்தில் ஆளுக்கொரு ஐடியாகூறி தத்தமது மேதாவிலாசத்தைக் காட்டி வந்தவர்கள் இன்று வாய்மூடி மௌனியாகிவிட்டனர். அப்போது மேலதிக அரசாங்க அதிபர் ஒரு ஆலோசனை கூறினார். அம்பாரைச்குச் சென்று சிடபிள்யுவில் தம்குத் தேவையான பொருட்களை வாங்கி மட்டக்களப்புக்க கொண்டவந்து... இதற்கான பணத்தைப் எப்படிப்பெறுவது? லொறிகளை எப்படிப்பெறுவது மட்டக்களப்பில் இருந்து அம்பாரைக்குச்செல்வது எப்படி? செல்வது யார்? நடக்கிறகாரியமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈற்றில் மேலதிக அரசாங்க அதிபரே அப்பொறுப்பை ஏற்றார். அப்துல்லா நாலைந்து சிரேஸ்ட உத்தியொகத்தர்களுடன் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார். தான் ஒருவனாகவே காத்தான்குடியில் இருந்து லொறிகளை ஏற்பாடு செய்தார்.
மறுநாட் காலை 16 லொறிகள் வரிசையாகப் புறப்பட்டனர் ராணுவம், பொலிஸ் ஜீப் பாதுகாப்பினில் அம்பாரைக்குப் பறந்தனர். லொறிகளில் அரிசி, மா, சீனி யாவையும் கொள்முதலாக்கினர். பிறபகல் ஐந்துமணிக்குள் மட்டக்களப்புக்கு வந்தனர். டவுனில் உள்ளவர்கள் கச்செரியில் இரவைக்களிக்கலாம். ஆரையம் பதிக்குச் செல்லவெண்டியவர்கள் கச்செரியில் தங்விடலாம். வீடுகளில் மனைவிமக்கள் துடிதுடித்துச் செத்துக் கவலைப்படுவார்கள். செய்திகளை பேசவும் தந்திகள் இல்லை.

மேலதிக அரசாங்க அதிபர், அப்துல்லா காத்தான்குடி, இவர்களை அழைத்துச்செல்ல முன்வந்தார். ஆரையம்பதியைச் சேர்ந்தவர்களை எல்லையில் விடுவதாகக்கூறினார். வேறுவழியில்லை அனைவரும் ஜீப்பினில் புறப்பட்டனர். பேய் அறைந்தவர்களைப்போல் இருந்தனர் முகங்களில் பிரேதக்கலை எந்நேரமும் எதுவும் காத்தான்குடி செல்லுமுன் கல்லடி, உப்போடை, நாவற்குடா, மஞ்சந்தொடுவாய் முதலிய தமிழ்க்கிராமங்களைத் தாண்டி..... திடீரென ஜீப் நின்றது அனைவரும் திடுக்கிட்டனர். கலவரத்துடன் வெளியே எட்டிப்பார்த்தனர். மஞ்சந்தொடுவாய் அது செக்பொயின்ட் 3 ராணுவங்கள் ஜீப்புக்கு குறுக்கே லைட் வெளிச்சத்தில் இயந்திரத்துப்பாக்கிகளை தயார் நிலையுடன் அழுத்தமாக வந்தனர். அரசாங்க அதிபர் நிலமைகளை சிங்கள ஆங்கிலத்தில் எடுத்து விளக்கினார் ராணுவம் சாந்தம் அடைந்தனர்.

"ஓ கே கபாய் மே வெலாவட்ட யண்ட இட தென்ட யப்பா (எல்லாம் சரி இந்த வேளையில் இதற்கு மேலே வாகனம் செல்ல அனுமதிக்க முடியாது.)

"அப்படியானால் நாங்கள் இங்கேயே இரவைக்கழிப்பதா? அரசாங்க அதிபர் சற்று சூடாகக் கேட்டார். "

"அதைப்பற்றி தெரியாது. இதற்குமேல் நீங்கள் செல்ல முடியாது. பாதையில் எதுவும் நடக்கலாம் நன்மைக்காகதான் சொல்கிறோம். ராணுவம் கடுமையாக எதிர்த்தார்கள்.

"நான் காத்தான்குடி இவர்கள் ஆரையம்பதி. எங்களுக்கு எதுவும் நடக்காமல் பார்த்துக் கொடுக்கிறேன்.

"நீங்கள் லேசா சொல்கிறீர்கள் இங்கே இரவில் என்ன நடக்குதென்று உங்களுக்குத் தெரியாது ஆட்கள் காணாமல் போகிறார்கள். காலையில் பார்தால் கிணறுகள் பாழ்வளவுகளில் பிரேதம்கள் கிடக்கின்றன."

"ஆனால் கத்தான்குடிக்குள் எங்களுக்கு எதுவும் நடக்கவிடமாட்டேன். இதற்கு நான் உத்தரவாதம்."

ராணுவவீரர்கள் இணங்கவில்லை. அரசாங்க அதிபர் அப்துல்லா சிங்களத்தில் தலைமை அதிகாரியிடம் கசமுசத்துவிட்டு வந்தார். சரி நீங்கள் போங்கள். ஏதாவது நடந்தால் நீங்கள்தான் பொறுப்பு. உங்களைத்தவிர வேறு வாகனங்கள் போக நாங்கள் விடவில்லை. என எச்சரிக்கும் குரலில் ராணுவத்தலைவன் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓகே ஓகே! தலைவன் கூறி முடிப்பதற்குள் ஜீப் புறப்பட்டு பறந்து கொண்டிருந்தது. உரையாடல் சிங்களத்தில் நடந்ததால் எங்களுக்கு எதுவுமே புரியவில்லை. ஆனால் ஏதோ சிக்கல் அபாயம் பயங்கரம் போலிருந்தது. ஜீப் ஓடிக்கொண்டிருக்கும்போது அரசாங்க அதிபர் அப்துல்லா நடந்தவைகளை மிகவும் சாதர்ரணமாக கூறினார். கூட இருந்தவர்களுக்கு மிகவும் பயங்கரமாகிவிட்டது. ஜீப் காத்தன்குடி எல்லைக்குள்வந்து ஆரையம்பதியைச் சேர்ந்தவர்களை தவக்கென இறக்கிவிட்டுச் சென்றது.

"அப்பாடா" என இறங்கியவர்கள் பெருமூச்சு விட்டனர். அவர்கள் சில அடிதூரம் நடந்திருக்கமாட்டார்கள் கத்திகள் பொல்லுகளுடன் ஒரு கும்பல் இருளிளிருந்து வந்தனர்.
"டேய் தமிழன்களடா......"
"விடப்படா பிடியுங்கடா எல்லாரையும்" ஆபாச வார்த்தைகளுடன் கத்திகளும் பொல்லுகளும் சுழன்றன. வந்தவர்களுக்கு வாயடைத்து விறைத்துப்போய் நின்றவர்களுக்கு இரண்டொரு அடிகள் விழுந்தபின்னர்தான் ஐயயோ, கடவுளே.... எங்களைக் கொல்லுறானுகள் காப்பாத்துங்கோ...." அந்தக் குற்றுயிரும் கூக்குரல்களும் கேட்டதும், தீடீரெனக் கத்தான்குடிப்பக்கமிருந்து நாலைந்துபேர் ஓடோடி வந்தனர். அந்த கும்பலுக்குள் பாய்ந்து விலக்கினார்கள். "டேய் இவங்கெல்லாம் கச்சேரி ஆக்கள்டா.... தொடாதிங்கடா.... விடுங்கடா.. அடியாதேங்கடா...." என்று சக்திக்குமீறி விலக்கவந்தவர்களுக்கும் அடித்தான்கள் இப்படியான பயங்கரச் சூழ்நிலையில் விலக்குவது கஷ்டமான காரியம். அடிதடிக்கு வந்தவர்கள் வாயபாறிக்கொண்டு சென்றனர்.
"ஐயா ஆறுமுகம் தங்கத்துரை, கணபதிப்பிள்ளை இந்த ஆபத்தான நேரங்களில் ஏனையாமாரே இங்கு வந்தீர்கள். நாங்களிப்ப தற்செயலாக வந்தவர்கள் நாங்க வராமலிருந்தா உங்க நிலைமை எப்படியிருக்கும்.."
"ஓங் காக்காமாரே, எண்ட கூட்டாளி ஆதம்முதலாளிக் காக்கா, செயினுத்தீன் ஹாஜியார்க் காக்கா மாரே.."
"பாருங்க ஐயாமாரே, எல்லா ஊரிலேயும் நட்டாமுட்டிகள் இருக்கானுகள்.
அவனுகள்தான் குழப்பங்களை உண்டாக்கிறவனுங்கள். உங்கள்ர ஊர்லயும் வழிப்பறிகார நட்டாமுட்டிகள் நம்ம ஆரிட்ட சொல்ர அண்ணாமாரே"
"நீங்கள் சொல்லுர உண்மைதான் காக்காமாரே. ரெண்டு ஊரிலையும் சமாதானக் குழுக்கள், எல்லாரையும் சமாதானம் ஏற்படுத்த ஓடித்திரியுறார்கள். நட்டாமுட்டியள் குழப்புறானுங்கள். எரியுற வீடுகள்ள பிடுங்கிறதான், இவனுகள்ர நோக்கம். நட்டாமுட்டியல் இருக்கும் வரைக்கும் நமக்குள்ள ஒற்றுமையா வாழவுடுறானுகளில்ல. கடவுளே... காக்காமாரே...
"சரிசரி.... வெகு நேரம் இதில் நிக்காம, ஒங்கட ஊரிலே ஓடிப்போங்க ஐயாமாரே."
"போயிட்டு வாரம் நீங்கள் இந்த பயங்கர ஆபதது வேளையில் செய்த உதவிகளை என்டைக்கும் மறக்கமாட்டம் காக்காமாரே..." மனிசருக்கு மனிசன்தான் உதவி... அல்லாடகாவலா போயித்து வாங்க ஐயாமாரே... மானுடநேசம் நம்மட தமிழ் முஸிலுமுக்குள்ளே இன்னமும் குறையல்லகா... காக்காமாரே...." சிறிது நேர உரையாடலின்பின் எல்லோரும் கலைந்து சென்றுகொண்டிருந்தனர்.

(யாவம் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகள்:-

### கலாபூஷணம், இலக்கியவேந்தர் அ.ஸ.அப்துஸ்ஸமது-B.A

1952ல் எனக்கு 12வயது. அக்கரைப்பற்று நகரப்பள்ளிவாசல் மீலாத் விழாவில் பாடினேன். ஒருவன் வந்து, என்னை ஆரத்தழுவிப் பாராட்டினார். அ.ஸ. அப்துஸ்ஸமது ஆசிரியர் அன்றிருந்து அறிமுகமானதும் மாதம், ஆண்டுக்கொருமுறை எனது உறவினர்களான சீனிமுகம்மது மனேஜர், பாடகர் பக்கீர் முகைதீன் மருதமுனை லாவண்னா போன்றவர்களைப் பார்க்கப் போவேன். தவறாமல் அ.ஸ. எழுத்தாளரையும் காண்பேன். கல்கி, கலைமகள், பிறை, மணிவிளக்கு போன்ற இலக்கிய சஞ்சிகைகளையும் வாசிக்கத்தருவார். அப்துஸ்ஸமது அவர்களின் தூண்டுதல்களாலும் நானும் கவிதை, சிறுகதை, கட்டுரைகளும் எழுதிப்பழகினேன். 1969ல் எனது ''முதலிரவு'' சிறுகதைத் தொகுதிக்கு அ.ஸ. அணிந்துரை எழுதினார்.

1978ல் பண்டாரநாயக சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில், இஸ்லாமியத் தமிழாராய்ச்சி 4வது மகாநாட்டு மலர் ''பிறைப்பூக்கள்'' 27 சிறுகதைகளின் தொகுப்பாசிரியரான அ.ஸ. அவர்கள் எனது ''சலிமத்து நாச்சி'' சிறுகதையை தமிழ்நாட்டுச் சிறுகதை மன்னர்கள் எனப்பெயரெடுத்த ஜெயகாந்தன், ஜானகிராமன் போன்றவர்கள் மருதூர்வாணரின் சிறு கதைகளை வாசித்துப் பார்க்க வேண்டும்; யாருடைய கதைகள் மண்வாசனைச் சுவைகளில் மேலானவை; எனப் பலகோணங்களில் என்னை வியந்தெழுதியுள்ளார்.

ஆசிரியர், அதிபர், விரிவுரையாளர், பன்னூலாசிரியர், நாவலர், முதல்தர விமர்சகர், அறிஞர் அ.ஸ.அப்துஸ்ஸமது அவர்கள் 73ம் வயதில் 30-06-2001ல் ஞாயிறு இரவு காலமானார்கள்.

### உதயகவி-பூபாலப்பிள்ளை

இவரும் அக்கரைப்பற்று - ஆலையடிவேம்பு - சாகாமம் பகுதியில் பிறந்தவர். அ.ஸ. வுக்கும் நண்பர். 1975ல் கல்முனைப் பிரதேசசபை சோலைவரி லிகிதராக இருந்தவர். வீரகேசரி நிருபர், சுதந்திரன், சுடர், தினகரன், தினபதி எனப்பல கவிதை, கட்டுரைகளை எழுதியவர். என்னுடன் மிகப்பரிவுடன் நெருங்கிய நண்பர், உதயகவி-பூபாலப்பிள்ளை அவர்கள்.

1975ல் கவிஞர் நீலாவணன் அமரரான நினைவாக கவிஞர் பாண்டியூரன் தலைமையில் கல்முனை எழுத்தாளர் சங்கத்தை விட்டு விலகி ''கல்முனை முத்தமிழ் கழகம்'' அமைத்தோம். தலைவர் பாண்டியூரன், உபதலைவர் முகில்வண்ணன், செயலாளர் மருதூர்வாணர், உபசெயலாளர் நீலாவணை தேவராஜா, பொருளாளர் கவிஞர் ஜீவா ஜீவரத்தினம், உறுப்பினர்கள் அக்கரைமாணிக்கம், உதயகவி, மணிக்கவிராயர், க.ஜ.யோகராஜா, கவிஞர் யுவன் கபூர், வஸீகரன் பாறூக் போன்றவர்களாகும்.

### கலைச்சுடர் சக்காப் மௌலானா

அல்-ஹாஜ் S.Z.M. மசூர் மௌலானா B.Com-J.P. செனட்டர் அவர்களின் தம்பி சக்காப் மௌலானா ஆசிரியர் (எனது ஒன்றுவிட்ட பெரியம்மாவின் மக்கள்) மருதமுனை அரசியலில் உலகெல்லாம் பிரபலமானவர் மசூர் மௌலானா. நாடகத்தில் பிரபலமானவர் சக்காப் மௌலானா. அரசியல், கலை, இலக்கியங்களில் இசைவாணர் பிரபலமானவர். 150 பதுக்கதிகமான நாடகங்களை எழுதியும், நடித்தும், இயக்கியும் சக்காப் மௌலானா பிரபலமானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலைக்கூடல்" நாடக சபாவை 1968ல் நானும் சக்காப் மௌலானாவும், கலைஞர் மனாபும் ஆரம்பித்து கொழும்பு, மட்டக்களப்பு, கல்முனை, பொத்துவில் வரை பலநூறு நாடகங்களை அரங்கேற்றினோம். சக்காப் மௌலானா, இசைவாணர், மனாப் கலைக்கூடல் நடகக் குழுவினர் என்றால் நாடகக் கொட்டகையுள் ரசிகர்கள் நிரம்பி விடுவார்கள்.1993ல் முஸ்லிம் கலாச்சார அமைச்சர் A. H. M. அஸ்வர் அவர்களால் "வாழ்வோரை வாழ்த்துவோம்" விருதும், கலைச்சுடர் பட்டமும் கொடுத்து சக்காப் மௌலானா அவர்களையும் பாராட்டிக் கௌரவித்தார்கள்.

இன்று சமாதானம் 9ம் சஞ்சிகையின் மூலம் எழுத்தாளர் அ. ஸ. அப்துஸ்ஸமது, உதயகவி பூபாலப்பிள்ளை, கலைச்சுடர் சக்காப் Z. மௌலானா, மூவரினதும் நினைவாக இக்கவிதைப் போட்டியை நடாத்துகின்றோம்.

**அப்துஸ்ஸமது - உதயகவி - சக்காப்மௌலானா**
**நினைவுக் கவிதைப் போட்டி**

**தலைப்பு :-** பகைப்புலம் மறந்து பாசத்தை வளர்ப்போம்!
1ம் பரிசு : 250 ரூபாய், 2ம் பரிசு : 150ரூபாய், 3ம் பரிசு : 100ரூபாய் (32 வரிக்குள்)

**தலைப்பு :-** நானும் ஒரு இலட்சியப் பெண்
1ம் பரிசு : 250 ரூபாய், 2ம் பரிசு :150ரூபாய், 3ம் பரிசு : 100ரூபாய் (32 வரிக்குள்)

பரிசு பெறும் கவிதைகள் சமாதானம் 10ம் சஞ்சிகையில் பிரசுரமாகும்.
கவிஞர்களின் படங்களும் முகப்பில் பிரசுரமாகும் சமாதானம் 7 - 8 - 9 ல் பரிசு பெற்றவர்கள் இதில் எழுதல் தவிர்த்து.
பிரபல சட்டத்தரணி அல் ஹாஜ் A.M. பதுறுத்தீன் B.A அவர்கள் பரிசுகளும், சான்றிதழ்களும், 10ம் சமாதான வெளியீட்டு விழாவில் வழங்குவார்கள்.

முடிவுத் திகதி 24-05-2002
நினைவில் வையுங்கள்
நண்பர்களுக்கும் சொல்லுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி
ஆசிரியர் "சமாதானம்"
201A, அல்ஹம்றா வீதி
மருதமுனை

"அறுவடை" "கவிதைத்தொகுதி" ஆக்கியோன் "மணிக்கவிராயர்" சாகாமம் வீதி, மகாசக்திப் பப்ளிகேசன் வெளியீடு, அக்கரைப்பற்று.
அறுவடைக்கால வயல் வெளி பலவர்ண முகப்புக் காட்சி, வெண்தாள் கணணிப் பதிவுகள், 55கவிதைகள், 92 பக்கம், 100 ரூபா விலை, 1960 - 70 லிருந்து நண்பராகி, பல கவியரங்கு மேடைகளில் முழங்கி வளர்த்தவர், மணிக்கவிராயர். தினகரன், வீரகேசரி, சுதந்திரன், தினபதி, சமாதானம், கலைச்செல்வி போன்ற பிரபல சஞ்சிகைகளிலும் எழுதிய கவிதைகளில் தேர்ந்தெடுத்து தொகுத்து 30-06-2001 அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பு கலச்சார மண்டபத்தினுள் மஹாசக்தி நிறுவனத்தினர் வெளியிட்டனர். தன்னையும் விசேட அதிதியாக அழைப்பிதழ் அச்சிட்டழைத்திருந்தார்கள். அது பெரும் கலாச்சார விழாபோன்றேகண்டு மகிழ்ந்தேன். 700 பிரதிகள் விழாவிலே விற்பனையானதாம் பெண்களும் ஆண்களும் மண்டபம் நிறைந்தே காணப்பட்டனர். வாழ்க நீடூழி மணிக்கவிராயர் அவர்களே.

ஆசிரியர் சமாதானம், 21 - 07 - 2001ல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**HOMOEOPATHY AND ACUPUNCTURE CLINIC**


**Dr. T.T. William J.P**
MDH, RHMP, M. Ac (F) (SL) EMO
Gov. Regd. No. HMC - 68.
T.P : 067 - 20574

15, Chettiyar Road,
Pandiruppu - 1
Kalmunai



ஒவ்வொரு மானிடரிடமும்
இதய சுத்தி புரிந்துணர்வு
விட்டுக்கொடுப்பனவு சமத்துவம்
இறையியல் என்பன இருந்தால், தூய்மையான
சமாதானம், நிச்சயம் மலரும்

## நிலா தமிழின் தாசன்



திருகோணமலை நிலாவெளியில் பிறந்தவர் தனது 13வது வயதில் கவிதை புனைய ஆரம்பித்து 1975ல் சுதந்திரம் சுடர் போன்ற தேசியப்பத்திரிகைகளில் கவிதை, சிறுகதை எழுதி வருகின்றார் 1993ல் நாளை எனும் கவிதை தொகுப்பு இ. முரளையன் முன்னுரையுடன் வெளிவந்தது 1994ல் புலர்வு இரண்டாவது நூலும் பேராசிரியர் ஆ சன்முகதாசன் அணிந்துரையுடன் வெளியிட்டார் பல போட்டிகளில் 1ம் 2ம் பரிசுகளை பெற்றுள்ளார் நடிப்புக்கலையிலும் இவர் சிறந்தவர்.

**எல்லாவித நோய்களையும்**
**தீர்த்துவிடும் நல்லதோர்**
**சித்த ஆயுர்வேத கோமியோபதி** L.H.M.P.H.I (SL)

**Dr. M.A. LEBBE** P.I.M.P. (India)
93A, Central - North Road.
Natpiddimunai - 2
Kalmunai





**கவிஞர் மஜீதா**

**இவர்களின் கவிதைகள்**
**உள்ளே...**

**கவிஞர் நமுனைக் எம். கிஷோர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா இனங்களும் இணைந்தன்பு கொள்வோம்.



நீடூளி வாழ்கவே
ஈழபாரதயின் 'சமாதானம்'
இலங்கை நம் நாடெல்லாம்
இன, மத, மொழி கலை,
கலாச்சாரங்கள் ஒற்றுமை
பெற்று நீடூளி வாழ்க
ஈழபாரதியே!
சட்டத்தரணி
M.C.A. அஸீஸ்,
பிரதான வீதி, சாய்ந்தமருது

**நவமணி**

அரசியல், கலை, இலக்கியம்
சுழியோடித்தருவதிலும்
நடுநிலை தொடர்ந்து தரும்
நவமணியை எல்லோரும்
வாங்கி வாசிப்போம்.
- ஈழபாரதி -

**சமாதானம் நிலவிட சமாதானம் வளர்கவே.....**

வித்துவான் எம். ஏ. ரஹ்மான்,
சதாம் மன்ஸில்
கலுகமுவ, கெலிஓய.

புறவம் பொறித்த புதுமலர் படித்தேன். !
அதுதான் ஈழ பாரதி தந்த
சமாதா னமெனும் சஞ்சிகை ஆகும்.
புறவம் ஒழுக்கம் உள்ள பறவை
பிறர் மனை விரும்பா புகழுறு பறவை
பிரபந்தம் போற்றிடும் தூதுப் பறவை
சமா தானத்தின் சின்னம் புறவம்.
ஈழபாரதி மருதூர் வாணன்
இளையோர் பெரியோர் இருப்பவர் யாவரும்
அன்பும் அறிவும் பண்பும் பணிவும்
துடிப்பும் துணிவும் தூய்மையும் உடையராய்
தரங்கள் கௌவி ஒருங்குடன் இணைந்து
ஈழ நாட்டின் உயர்வு செழிப்பு
பெருமை வீரம் பொலிவு அருமை
கல்வி கலைகள் யாவும் வளமுற
உழைப்பதற்காக வருகென அழைத்திடும்
தூதாகும் சஞ்சிகை சமாதானமாம்
பெருந்தமிழ் கண்டேன் பெருமை கொண்டேன்
யாப்பியல் தவறா கவிதைகள் கண்டேன்!
சீறி எழுந்திடும் சிம்மக் குரலையும்
தட்டிக் கேட்டிடும் தண்டமிழ் நடையையும்
பரிந்து பேசிடும் பண்புடை மொழியையும்
உவந்து ஏற்றிடும் உளம் செறி உரையையும்
ஈழபாரதி எழுத்தினில் கண்டேன்
தொடர்கதை தந்தார் துடிப்புடன் உளது
'போர்முனைக்காதலி' புதுமை நவீனம்,
சுவைத்து மகிழ சிறந்த விருந்து!
எஸ்.எச்.எம் ஜெமிலுக்கு எழுதிய கடிதம்
எனக்கும் பொருந்தும் திறந்து சொல்வேன்!
படித்த திமிரை அடக்கி விட்டு
பண்புத் தமிழை வளர்க்குமாறு
பரிந்துரை செய்வேன்! தகுதி இல்லா
பாமரர் தமக்கு வேண்டியோர் எனினும்
பட்டமும் பரிசிலும் வழங்குமாறு
பாழுரை பகர வேண்டாம், என்று
சமாதானம் நிலவிட சமாதானம் வளர்கவே!








அச்சுப் பதிப்பு: நெஷனல் பிரிண்டர்ஸ் - சாய்ந்தமருது. 067 - 23055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org